# தமிழரசு

1-2-1993 ரூ.1











பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதி கிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR/2687/MS/92.CHARI
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்


குடியரசு தினவிழா ... 2
ஆசிய விளையாட்டரங்குகளின் அரசி 6
தமிழ்த் திரையுலகின் தங்க விழா ... 12
தெலுங்கு-கங்கைத் திட்டம் ... 25
வரலாற்றுச் சிறப்பு ... 27
தேசிய ஒருமைப்பாட்டுக்கு நம் மாநிலம் செலுத்தும் மாபெரும் மரியாதை —மாண்புமிகு முதல்வர் உரை .. 32
மின்துறையின் முற்போக்குத் திட்டங்கள் 37
ஓசூரில் சிப்காட் ... 41
திருவள்ளுவர் திருநாள் ... 45
மாமல்லபுரம் நாட்டிய விழா ... 49
ஓசூர் கால்நடைப்பண்ணை ... 51
கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ... 55
தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் 59




# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2024

தைத் திங்கள் - 19

மலர்:23 இதழ்:15

1-2-1993








# குடியரசு தின விழா

இந்தியாவின் 44-வது குடியரசு நாள் விழா 26.1.1993 அன்று சென்னை மெரினா கடற்கரையிலுள்ள, காந்தி சிலையருகே கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. காலை ஆறு மணி முதலே பொதுமக்கள் காந்தி சிலையருகே, சாலையின் இருமருங்கிலும் ஆயிரக் கணக்கில் குவியத் தொடங்கினர். ஏழுமணிக்கெல்லாம், அகில இந்திய வானொலி நிலையக் கட்டடத்திலிருந்து விவேகானந்தர் இல்லம் வரை மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தனர். அனைவரது பார்வையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தன.

சரியாக 7.43 மணிக்கு காந்தி சிலைக்கு வந்து சேர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையாளர் பிரிவைச் சுற்றி வந்து பொதுமக்களை நோக்கிக் கையசைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பொதுமக்களும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் முதல்வரைப் பார்த்து, கையசைத்தனர். பொதுமக்களைப் பார்வையிட்டபின், அணி வணக்கம் ஏற்கும் மேடையருகே வந்த முதல்வர் அவர்களை, தலைமைச் செயலாளர் திரு.டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

சிறிது நேரத்தில் மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பார்வையாளர் பிரிவைச் சுற்றிவந்து பொதுமக்களைபார்த்துக் கையசைத்த வண்ணம் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பின்பு, மேடையருகே வருகை புரிந்த ஆளுநர் அவர்களை முதல்வர் அவர்கள் வரவேற்று, முப்படைத் தளபதிகளையும், காவல் துறைத் தலைவர்களையும் அறிமுகப் படுத்தினார்.

ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, கோவா மாநிலங்களின் தலைமைப் படைத் தலைவூர் மேஜர் ஜெனரல் முல்யே, சென்னைக் கடற்படைப் பொறுப்பு அதிகாரி கமோடர் எச். ஷானி என்.எம்., தாம்பரம் வான் படை அதிகாரி ஏர்





கமோடர் ஆர்.எஸ்.சேகல், காவல்துறை இயக்குநர் தலைவர் திரு.எஸ்.ஸ்ரீபால், இ.கா.ப., கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு.வால்டர் ஐசக் தேவாரம், காவல்துறை ஆணையர் திரு.ஆர்.ராச கோபாலன், இ.கா.ப., ஆகியோர் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

சரியாக 8.00 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்தார். உடனே நாட்டுப் பண் இசைக்கப்பட்டது.

**அணிவகுப்பு மரியாதை**

அடுத்து, முப்படைகள், காவலர்கள், தேசிய மாணவர் படை, சாலைக் காப்புச் சுற்றுக் காவலர், தீயுணைப்புப் படை, சென்னை மாநகர ஊர்க்காவல் படை, பாரத சாரணர், செஞ்சிலுவைச் சங்கம், ஆகியோரது அணிவகுப்பு மரியாதையை மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றார்.

பின்பு, தீரச் செயல்புரிந்த திரு. கி. லோகநாதன் (தென்னார்க்காடு) திரு.எஸ்.குமார் (வட ஆர்க்காடு-அம்பேத்கர்), திருமதி மு. சரசாயாள் (பெரியார்), திரு. சு. வேலாயுதம் (சிதம்பரனார்), திரு. க. மோகன சுந்தரம் (செங்கை- எம்.ஜி.ஆர்.), திரு.ஆ.செபஸ்தியன் (திண்டுக்கல்-அண்ணா) அகிய 6 பேருக்குத் தலா ரூ.1,000 மதிப்புள்ள அண்ணா வீரப்பதக்கங்களையும் ரூ.1000-க்கான காசோலையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

ஊனமுற்றோரைப் பணியில் அமர்த்தும், தனியார் நிறுவனத்தாருக்கான மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சிறப்பு விருது, கோயம்புத்தூர் ஸ்ரீ ராம கிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வியியல் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் எம்.என்.ஜி.மணி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து விருதினையும், பதக்கத்தையும், பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, பள்ளிச் சிறார்களின் கண்கவர் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கண்கொள்ளாக் காட்சியாக விளங்கிய இந்நிகழ்ச்சி பொதுமக்களின் பலத்த வரவேற்பைப் பெற்றது. தென்னிந்தியக் கலாச்சார மையம் வழங்







மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குடியரசுத் தினத்தன்று, சென்னை மெரீனா கடற்கரை, காந்தி சிலை எதிரில் நிறுவப்பட்டுள்ள சிம்சன் நிறுவனத்தின் கடிகாரத்தைத் திறந்து வைத்தார் (26.1.93).

கிய கர்நாடகா மாநிலத்தின்வீரகாசி, கேரள மாநிலத்தின் செண்ட மேளம், ஆந்திரப்பிரதேசம் மாதுரி, பாண்டிச் சேரி காளியாட்டம், குஜராத் கர்பா ஆட்டம் ஆகியவை அனைவரது கவனத்தையும் ஈர்த்தன.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற கரகம், காவடி, கொக்கலிக்கட்டை ஆட்டம், தாரைத் தப்பட்டை, சேவை ஆட்டம், ஒயிலாட்டம், கட்டைக் கூத்து ஆகிய கிராமிய நடனங்கள் கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாய் அமைந்தன.

அதற்குப் பின், அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடை பெற்றது.

தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையத்தில் நாயன இசை பயிலும் மாணவர்களின் இன்னிசையுடன் பவனி வந்த நாயன இசை ஊர்தி யுடன் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு தொடங்கியது. இதைத் தொடர்ந்து செய்தி-மக்கள் தொடர் புத்துறை, தோட்டக்கலைத்துறை, சென்னை மாவட்ட ஆட்சியர், காவல்துறை, வேளாண்மைத்துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங் கல் மற்றும் வணிகத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சுற்றுலாத்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, மீன்துறை, வீட்டுவசதி மற் றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, கூட்டுறவுத் துறை, ஊரக நலத்துறை, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரி யம், ஆகியவற்றின் எழில்மிகு வண்ண வண்ண அலங்கார ஊர்தி களின் அணிவகுப்பு குடியரசு தின விழாவிற்குச் சிகரம் வைத்தாற் போல் அமைந்திருந்தது.

அலங்கார ஊர்திகளின் அணி வகுப்பு முடிந்ததும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார். பின்னர் நாட்டுப் பண் இசைக்க விழா இனிது நிறைவுற்றது.

- என்.-இளங்கோ.







பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 76-ஆம் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு 17.1.93 அன்று செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார். அவ்வமயம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா திரு கா.பா. பட்டாபிராமன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர் திரு. கு. ஞானதேசிகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## டாக்டர் எம்.ஜி.ஆர். முக்கியக் குறிப்புகள்

| | |
|---|---|
| பிறந்த ஆண்டு | ... 1917 |
| திரைப்படங்களில் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கிய ஆண்டு | 1947 |
| தேசியப் பாராட்டைப் பெற்ற 'மலைக் கள்ளன்' திரைப்படம் வெளிவந்த ஆண்டு | ...1954 |
| அவரே தயாரித்து இயக்கிய 'நாடோடி மன்னன்' படம், சாதனை படைத்த ஆண்டு | ...1958 |
| டாக்டர் எம்.ஜி.ஆர். நடித்த மொத்தத் திரைப்படங்கள் | ... 132 |
| மத்திய அரசின் 'பாரத்' பட்டம் பெற்ற ஆண்டு | ... 1972 |
| சட்டமன்ற மேலவை உறுப்பினரான ஆண்டு | ... 1962 |
| மாண்புமிகு தமிழக முதல்வராகப் பதவியேற்ற ஆண்டு | ... 1977 |
| சென்னைப் பல்கலைக்கழகம் 'டாக்டர் பட்டம்' வழங்கிய ஆண்டு | ... 1984 |
| தொடர்ந்து மூன்றாம் முறையாக மாண்புமிகு தமிழக முதல்வரான ஆண்டு | ... 1985 |
| டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இயற்கை எய்திய ஆண்டு | ... 1987 |



# ஆசிய விளையாட்டரங்குகளின் அரசி

இந்தியாவின் விளையாட்டு வரலாற்றிலும், அனுதினமும் சாதனைகளைக் குவித்திடும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியின் வரலாற்றிலும் இவ்வாண்டு, ஜனவரி 18-ஆம் நாள் ஓர் பொன்னாளாகும்!



10-வது நேரு தங்கக்கோப்பை சர்வதேச அழைப்பு கால்பந்துப் போட்டியை நடத்தும் பொறுப்பு தமிழகத்திற்கு வழங்கப்பட்டது. இத்தகைய போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவான, சர்வதேச விதிமுறைகளுக்கு ஏற்றதொரு, விளையாட்டு அரங்கம் நம்மிடம் இல்லையே என்றதொரு குறை அனைவர் மனதிலும் தோன்றியது. அதன் காரணமாக 10-வது நேரு தங்கக் கோப்பைக் கால்பந்து போட்டியை நம்மால் நடத்த இயலுமா என்ற ஐயப்பாடு எழுந்தது.

இந்தத் தருணத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் துணிச்சலானதொரு முடிவெடுத்தார்.

சர்வதேசக் கால்பந்துச் சங்கமும், சர்வதேச அத்லெடிக் சங்கமும், சமீபத்தில் வகுத்த விதிமுறைகளுக்கு ஏற்ப, பிரம்மாண்டமான விளையாட்டரங்கை 7½ மாதக் காலத்திற்குள் கட்டி முடிக்கும் சவாலை ஏற்றுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த விளையாட்டரங்கம் பற்றி திட்டம் தீட்டப்பட்ட நாள் முதல் தொடக்க விழா வரை ஒவ்வொரு கட்டத்திலும் தனிப்பட்ட முறையில் சீரிய கவனம் செலுத்தி அனைவரையும் திறம்படச் செயலாற்ற வைத்து தமிழத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் காண்போர் வியக்கும் வண்ணம் ரூ.40 கோடி செலவில் கட்டி முடித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் கற்பனைத் திறனுக்கும் கலை உணர்வுக்கும், தொலைநோக்குப் பார்வைக்கும், நிர்வாகத் திறனுக்கும் தக்க சான்றாக விளங்கும் இவ்



விளையாட்டரங்கம், உலக அரங்கில் நீடித்த புகழைப் பெற்றுத் தந்திடும் என்பதில் சந்தேகமில்லை.

விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

நேரு விளையாட்டு அரங்கினை மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் திறந்து வைத்தார். மேடையில் அமைக்கப்பட்டிருந்த பொத்தானை, பிரதமர் அவர்கள் அழுத்த, புல் தரையில் அலங்கார மேடை மீது அமைக்கப்பட்டிருந்த திரை மெல்ல விலகி, விளையாட்டரங்கின் மாதிரி (Model) எழிலோடு வெளிப்பட்டது. விளையாட்டரங்கில் கூடியிருந்த 40,000 மக்களும் கைத் தட்டி, ஆரவாரம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசியதாவது:-

''சர்வதேசத் தரத்துடன் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட, நேருவின் பெயர் சூட்டப்பட்ட இந்த ஸ்டேடியத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பை எனக்கு அளித்தமைக்குத் தமிழகத்திற்கு - குறிப்பாக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி கூறுகிறேன். ஸ்டேடியக் கட்டுமானப் பணியில் முக்கியப் பங்கு வகித்த தமிழக முதலமைச்சரையும், மற்றவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். விளையாட்டுத்துறை முன்னேற்றத்துக்கு, பள்ளிக்கூடங்களில் விளையாட்டைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். ஸ்டேடியங்கள் போன்ற பெரிய வசதிகள் தேவையில்லாத கபடி போன்ற விளையாட்டுக்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து, கிராம அளவில் வளர்ச்சி அடைய உதவ வேண்டும். இந்த ஸ்டேடியம் சிறப்பாக உருவானதைப் பாராட்டும் அதே நேரத்தில், இவ்வளவு வசதிகள் நிறைந்த ஸ்டேடியம் இல்லாவிட்டாலும், சிறிய அளவிலாவது ஸ்டேடியங்களை மாவட்ட அளவில் கட்டிக் கொடுப்பதன் மூலம், அடிமட்ட அளவில் விளையாட்டுத் திறனை வளர்க்க இயலும்''.

10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டியினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கிவைத்தார்.

மேடையிலிருந்த பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்த, மைதானத்தின் நடுவிலிருந்த அலங்கார மேடையிலிருந்த மஞ்சள் நிறத்திரை விலகியது. போட்டியின் சின்னமான சிங்கம் (Leo) கம்பீரமாகக் காட்சியளித்தது.

விழா மலரை, மத்திய அரசின் மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள் வெளியிட்டார். முதல் பிரதியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் பெற்றுக்கொண்டார். மேதகு ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மலர் பிரதிகளை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, பத்தாவது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு சர்வதேசக் கால்பந்து போட்டிகளை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

பிரதமர், ஆளுநர், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆகியோருக்கு முதலமைச்சர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக விளையாட்டு அரங்கினைக்







கட்டி முடித்த லார்சன் அண்டு டூப்ரோ நிறுவன கட்டுமானப் பிரிவின் துணைத் தலைவர் திரு. ராமகிருஷ்ணா, விளையாட்டு அரங்கின் வடிவத்தை அமைத்த திரு. ராகவேந்தர் ராவ் ஆகியோருக்கும் அவர் நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களும் முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசை வழங்கினார்கள்.

கால்பந்துப் போட்டிகளை முறைப் படித் தொடங்கி வைப்பதாக, முதல்வர் அறிவித்ததைத் தொடர்ந்து, போட்டியில் கலந்து கொள்ளும், நாடுகளைச் சார்ந்த விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணி வகுப்பில் ருமேனியா, ரஷியா, பொலிவியா, பின்லாந்து, வடகொரியா, இந்தியா ஆகிய 6 நாடுகளும் பங்கேற்றன.

வீரர்களின் அணிவகுப்பு நடந்து கொண்டிருக்கும்போதே, மைதானத்தில், மேடைக்கு நேர் எதிரே அமைக்கப்பட்டிருந்த ஒரு பகுதியில் 3,000 மாணவர்கள் பல வண்ணத் துணிகளைக் கையிலேந்தியபடி, பல்வேறு வடிவங்களை அமைத்துக் காட்டினார்கள். முதலில் 'வருக வருக', (WELCOME), 'வணக்கம்', SPORTS FOR PEACE, SPORTS FOR ALL, WELCOME TO PM, WELCOME TO CM எனப் பல்வேறு வார்த்தைகளை வடித்துக் காட்டினார்கள். போட்டியில் பங்கு பெறும் அனைத்து நாடுகளின் பெயர்களையும், வடிவமைத்துக் காண்பித்தார்கள்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல, மாண்புமிகு முதல்வர் அவர்களின் உருவத்தையும், போட்டியின் சின்னமான லியோவின் சின்னத்தையும் வடிவமைத்து ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றனர்.

மைதானத்தைச் சுற்றி வந்து, விளையாட்டு வீரர்களின் அணி வகுப்பு நின்றதைத் தொடர்ந்து





இந்திய அணியின் தலைவர் சத்தியன் 10-வது நேரு தங்கக் கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டிக் கான உறுதிமொழியைப் படித்தார்.

வீரர்கள் மைதானத்தை விட்டுச் சென்றவுடன், 12 பள்ளிக்கூடங் களைச் சேர்ந்த 1,250 மாணவர் களும், 1,250 மாணவிகளும் வெள்ளை உடையில் மைதானத் தைச் சுற்றி அணிவகுத்து வந் தார்கள். அவர்கள் அனைவரும் தங்களது கைகளில் பல வண்ணக் கொடிகளைப் பிடித்திருந்தார்கள். சிலர் கொத்துக் கொத்தாகப் பலூன் களை வைத்திருந்தனர்.

அவர்கள் அனைவரும் மைதா னத்திற்கு வந்து நின்றதும், பலூன் களைப் பறக்க விட்டனர்.

அதன்பின்னர், மஞ்சள் நிறச் சீருடை அணிந்த 1,500 மாண வர்கள் வரிசையாக மைதானத்திற்கு வந்தனர். அவர்கள் பலவிதமான உடற்பயிற்சிகளைச் செய்து காட்டி



ரசிகர்களை மகிழ்வித்தார்கள்.

அவர்களைத் தொடர்ந்து நீல நிறச் சீருடை அணிந்த 1,100 மாணவிகள் வந்தனர். அவர்களில் சிலர் வளையல்களையும், சிலர் பந்துகளையும், மற்றவர்கள் சிவப்பு, நீல நிற 'ரிப்பன்'களையும் வைத்திருந்தார்கள்.

அவர்கள் மைதானத்திற்குள் நின்றபடி கடலில் அலைகள் எழும்பு வதைப் போலவும், தாமரைப்பூ மலர்வது போன்றும் செய்து காண்பித்து, ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றனர்.

அவர்களுக்குப் பிறகு பல வண்ண உடைகளை அணிந்து, 1,000 மாணவிகள் மைதானத்துக்குள் வந்தனர். அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டும் வகையில் ஒரு பாடல் இசைக்கப்பட்டது. மாணவிகள், அந்தப் பாட்டுக்கு ஏற்றபடி கோலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் ஆடினர்.

மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, போலீசாரின் கரகாட்டம், காவடி ஆட்டம் போன்றவை நடந்தன. இதில் பெண் போலீசார் உள்பட 300 பேர் கலந்து கொண்டார்கள்.

மைதானத்தின் நடுவே கலைஞர்கள் கூடியிருந்து நையாண்டி மேளம் அடிக்க, போலீசார் அதற்கேற்ப கரகம் - காவடி ஆட்டங்களை ஆடினர். அப்போது நாட்டுப்புறப் பாடல்களும் இசைக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின் முடிவில், 2 போலீசார் கம்புகளின் மீது ஏறி நின்றபடி, இளஞ்சிங்கம் பொறிக்கப்பட்ட கொடியை விரித்துக் காண்பித்தனர்.



போலீசார் மைதானத்தை விட்டு வெளியேறியதும், ஸ்டேடியத்தின் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டன. உடனே ரயில்வே பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 1,000 வீரர்கள் தீப்பந்தங்களை ஏந்தியபடி வந்தனர். வீரர்கள் அனைவரும் தீப்பந்தங்களினாலேயே 'நல்வரவு' என்று ஆங்கிலத்தில் வடிவமைத்தனர். கலை நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தது போல் நடந்த இந்த நிகழ்ச்சியைப் பார்த்து ரசிகர்கள் கைத் தட்டி, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர், தீப்பந்தங்களால், ''பிரதமர் நீடூழி வாழ்க'', ''முதல்வர் நீடூழி வாழ்க'', ''பிரதமருக்கு நன்றி'', ''முதல்வருக்கு நன்றி'', ''வணக்கம்'' போன்ற வாசகங்களை ஆங்கிலத்தில் வடிவமைத்தபோது ரசிகர்கள் எழுப்பிய ஆரவாரத்தினால் அரங்கமே அதிர்ந்தது. அதன்பிறகு வாணவேடிக்கை நடைபெற்றது.

சிறுமிகள் பலர் மத்தாப்புகளைக் கொளுத்தினர். இடி முழக்கம் போன்ற அதிர்வேட்டுகள் வெடிக்கப்பட்டன. சில பட்டாசுகள் உயரே பறந்து சென்று, வானத்தில் வெடித்து பல வண்ணங்களாகச் சிதறின.

வானத்தில் வண்ண ஜாலங்கள் நடந்து கொண்டிருந்தபோது, ஸ்டேடியத்தின் மேல் பகுதியில் புதுவிதமான மத்தாப்பு கொளுத்தப்பட்டது. அதில் ''நல்வரவு'', ''பிரதமர் நீடூழி வாழ்க'', ''வணக்கம்'' போன்ற வாசகங்கள் சுடர்விட்டு எரிந்தன.

கலை நிகழ்ச்சிகளையும், தீப்பந்த சாகசம், வாணவேடிக்கை போன்றவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரசித்துப் பார்த்தார்.

சிறப்பான முறையில் நிகழ்ச்சிகளைச் செய்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கைத் தட்டிப் பாராட்டினார். கலை நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு மாணவ-மாணவிகள் வெளியேறியபோது அவர்களைப் பார்த்துக் கையசைத்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

என். இளங்கோ.





## பலநோக்கு விளையாட்டரங்கம்

★ சர்வதேசக் கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் தர நிர்ணய அளவு கோல்களுக்கு ஏற்ப உருவாக்கப் பட்ட புதிய நேரு விளையாட்டரங்கம், ஆசியாவிலேயே அதிலும் குறிப்பாக இந்தியாவிலுள்ள விளையாட்டு அரங்கங்களில் மிகச் சிறந்த நவீன விளையாட்டரங்கமாகும்.

★ இந்த அதிநவீன விளையாட்டு அரங்கம் கால்பந்து மற்றும் உடற் பயிற்சிப் போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

★ சர்வதேச அளவிலான கால் பந்தாட்ட மைதானத்தைத் தவிர 8 Lane ஓட்டப்பந்தையக் களமும், Shot-put, High Jump, Discus, Hammer throw, Javelin போன்ற உடற்பயிற்சிப் போட்டிகள் நடத்த வசதியும் இங்கு உள்ளன.

**கொள்ளளவு:**

★ நவீன ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில், 40 ஆயிரம் பார்வையாளர்கள் தவிர 500 முக்கிய விருந்தினர்களும், சிறப்பு அழைப்பாளர்களும், 500 பத்திரிகையாளர்களும் அமர வசதி செய்யப் பட்டுள்ளது.

★ விளையாட்டரங்கத்தின் மேற்பகுதியில் பார்வையாளர்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் 20 மீட்டர் நீளத் துக்குச் சிமெண்டாலான கூரை அமைக்கப்பட்டிருப்பது அரங்கத்துக்கு மேலும் அழகைச் சேர்ப்பதாகும்.

**மாநாட்டு அறை**

★ 100 பேர் அமரக்கூடிய மாநாட்டு அறையும், மருத்துவச் சிகிச்சைப் பிரிவும், உடற்பயிற்சி அறையும் இங்கு தனித்தனியாக அமைக்கப்பட்டு உள்ளன.

**விஐபி ஏரியா**

★ ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் முக்கிய விருந்தினர்களுக்காக வண்டி நிறுத்துமிடமும், மின் தூக்கி (Lifts) உணவு அறையுடன் கூடிய குளிர்சாதன மாநாட்டு அறை போன்ற வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

### மாணவர்களுக்குப் பதக்கம் பரிசு!

18.1.93 அன்று நடைபெற்ற ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கின் தொடக்க விழாவில் பங்கு கொண்டு அனைவரது கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் எழில்பொங்கும் கலை நிகழ்ச்சிகளையும், உவகையூட்டும் உடற் பயிற்சிகளையும் செய்து காட்டிய பள்ளிச்சிறார்கள் அனைவருக்குமே பதக்கங்கள் வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

அவரது ஆணைக்கு இணங்க 9,000 மாணவ மாணவியருக்குத் தலா ரூ.250 மதிப்புள்ள தங்க முலாம் பூசிய வெள்ளிப்பதக்கங்கள் பள்ளிதோறும் வழங்கப்பட்டன; சிறுவர் சிறுமியர் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

**மின்னணுத் தகவல் பலகை**

★ சென்னையில் புதிதாகக் கட்டப் பட்டுள்ள நேரு விளையாட்டரங்கத்தில் 16 x 32" மற்றும் 16 x 3" அளவில் இரண்டு மின்னணுத் தகவல் பலகைகள் (Electronic Score Board) பொருத்தப்பட்டுள்ளன. கணிப்பொறி மற்றும் வீடியோ கருவிகளின் மூலம் தகவல் அறிவிப்பு செய்ய இதில் வசதிகள் ஏற் படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## கால்பந்தாட்டத்தின் கதை!

கால்பந்தாட்டம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிரபலமாக இருந்ததாகத் தெரிகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பும், கிரேக்கர்கள், ரோமானியர் ஆகியோரின் ராணுவப் பயிற்சிகளில் கால்பந்தாட்டமும் இருந்ததாக வரலாறு கூறுகிறது. முன்பு இருந்த கால்பந்தாட்டம், காலால் மட்டுமல்லாமல் கையாலும் பந்தை அடித்து, அதில் பலர் கலந்து கொண்டு, ஒரே ரகளையாக இருந்த தாகத் தெரிய வருகிறது.

இங்கிலாந்தில் ஆண்ட மூன்றாம் எட்வர்ட் இந்தப் பந்தாட்டத்திற்குத் தடை விதித்து, ஆடினவர்களுக்குக் காவல் தண்டனையும் விதித்தார். ஆனால் மக்களின் ஆர்வம் தணியவில்லை. காலப்போக்கில் பல மாறுதல்கள் அடைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு பந்தாட்டத்தில் இரு கட்சிகள் தோன்றின. விதிகளில் ஒற்றுமையில்லாமல் இரு பிரிவாகப் பிரிந்தது. ஒன்று ரக்பி, இன்னொன்று சோக்கர் அல்லது கால் பந்தாட்டம்.

தற்காலத்திய கால்பந்தாட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆடப்பட்டது. 1872-இல் இங்கிலாந்திற்கும், ஸ்காட்லாந்துக்கும் நடந்த போட்டியில் இங்கிலாந்தின் அணிவகுப்பு 1-1-3-8; ஸ்காட்லாந்து 1-2-2-6. ஆட்டம் கோல் போடாமல் சமநிலையாக முடிந்தது.

நம் நாட்டிற்கு ஆங்கிலேயர்கள் தான் கால்பந்தாட்டத்தைக் கொண்டு வந்தனர். அவர்கள் ஆடிய 1-2-3-5 முறையையே நாமும் கையாண்டோம்.

நன்றி: 'கால்பந்தாட்டம்'
எம்.பி. சுப்பிரமணியன்





# தமிழ்த் திரையுலகின் தங்க விழா

தமிழ்த் திரையுலகமே போற்றும் தங்க விழா ஒன்று அண்மையில் சீரும் சிறப்புமாக நடந்தேறியது.

கலை உலகினர், பல்துறை அறிஞர் பெருமக்களெல்லாம் போற்றிப் புகழ்ந்த விழா அது!

'இதுவரை, யாருமே இதுபோன்ற விழாவினை நடத்தவில்லை' என்று சொல்லத்தக்க வகையிலே அமைந்திருந்தது அந்த விழா!

அதுதான் 'மாநிலத் திரைப்பட விருது வழங்கும் விழா' எனும் மன்நிறைவு தரும் மகத்தான விழா!

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில், 21.1.93 அன்று, தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்பட்ட இந்த விழாவுக்கு, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநிலத் திரைப்பட விருதுகளை வழங்கினார்.

முன்னதாக, சங்கர்-கணேஷ், இசை விருந்து வழங்கினார். தேனினும் இனிய அந்த மெல்லிசையில் அனைவரும் மெய்மறந்தனர் என்றே சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு அருமையாக இருந்தது அந்த இன்னிசை மழை!

அடுத்து, தனக்கே உரித்தான நகைச் சுவை பாணியில் ஒரு சிறு நாடகத்தை நடத்தி, எல்லாரையும் வயிறு வலிக்கச் சிரிக்க வைத்தார், இல்லை சிந்திக்க வைத்தார் திரு. எஸ்.வி. சேகர்.

'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா!' என்கிற வாசகத்தை மெய்யாக்கும் வகையிலே, திரு. டி.கே.எஸ். பாபுவின் நடன நிகழ்ச்சி நம்மையெல்லாம் வெகுவாகக் கவர்ந்தது. நம் மன மென்னும் மேடையில் இன்னும் அந்த நடனமணிகள் நடனமாடுகின்ற ஓர் பிரமை!

ஆம். முத்தமிழும் முழங்கிய விழா என்றால், அது முற்றிலும் உண்மை!



செய்தி-சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாவுக்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், ''கலை உலகில் பெற்ற செல்வாக்கை அரசியலிலும், அரசியலில் தனது திறமை மூலம் பெற்ற செல்வாக்கைக் கலை உலகிலும் பயன் படுத்தாதவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். அவர் தன்னலம் அற்றவர்'' என்றார்.

திரைப்பட விருதுகள் தேர்வுக் குழுத் தலைவர், மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். பிரதாப் சிங் அவர்கள் பேசுகையில், ''ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை, வரதட்சினை எதிர்ப்பு உள்ளிட்ட நல்ல கருத்துக்களைத் திரைப்படங்களில் பொழுது போக்கு அம்சங்களுடன் சேர்த்து வலியுறுத்த வேண்டும். அதன் மூலம் சமுதாயத்தில், விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்'' என்றார்.



## மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், விழாப் பேருரையாற்றினர்ர். அப்போது அவர் குறிப்பிட்டார்:

**இந்த நன்னாள் என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு பொன்னாள்! விருதுகளும் பரிசுகளும் பெறுகின்ற பெருமக்க்ளுக்கு எத்தனை மகிழ்ச்சியோ, அதைவிட இரட்டிப்பு மகிழ்ச்சி - அவற்றை வழங்குகின்ற எனக்கு! காரணம் கலை அரசோச்சிக் கொண்டிருக்கின்ற காலம் இது! எனவேதான், திரை உலகப் பெருமக்களுக்கு, அரசு பரிசும், விருதும் வழங்குவது வழக்கம் என்றாலும், இந்த விழாவை உணர்ச்சிபூர்வமாக, ஒப்பற்ற விழாவாக நடத்த வேண்டும் என்று நான் விரும்பினேன்.**

**எனது தாய்வீடு என நான் பெருமையோடு கருதுகின்ற திரைப்படத் துறையினருக்கு, தமிழக அரசின் 1990 மற்றும் 1991- ஆம் ஆண்டிற்கான, மாநிலத் 'திரைப்பட விருதுகள்' வழங்கும் விழா நடந்தேறிக் கொண்டிருக்கிறது. தமிழ்த் திரைப்படத் துறையைச் சேர்ந்த நடிக, நடிகையருக்கு, தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு, மிகுந்த ஊக்கத்தினையும், பெருமிதத்தினையும் கொடுக்கக்கூடிய தனிச்சிறப்பு கொண்டது தமிழக அரசு வழங்கும் திரைப்பட விருதுகள். ஏனென்றால், மாநில அரசு விருது வழங்குகிறது என்றால் அதனைப் பெறும் கலைஞர்கள் தமிழக மக்கள் அனைவராலுமே கவுரவிக்கப்படுகின்றார்கள் என்பது தான் பொருள்.**

**கலை உலகில் ஈடுபட்டிருப்போர் பெரிதும் எதிர்நோக்குவது, வெறும் பணமும், பொருளும் ஈட்டுவது மட்டுமல்ல. அவர்கள் தேடும் செல்வம் ஓரளவு**

**• சிறந்த திரைப்படங்களுக்கும், கலைஞர்களுக்கும் அளிக்கப்படும் மாநில அரசின் விருதுகளில் 3 சவரன், 5 சவரன் என்றிருந்த பாகுபாடுகள் நீக்கப்பட்டு, அனைவருக்கும் 5 சவரன் தற்போது முதல் அளிக்கப்படுகிறது.**

**• கலைத்துறையில், திரைப்படத் துறையினர் ஈட்டும் வெற்றியையும், கௌரவத்தையும், செல்வத்தையும் சமுதாய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்த வேண்டும்.**









தான் திருப்தியையும், மகிழ்ச்சியையும் அளிக்கும். ஆனால், உண்மையான வெற்றியால் தங்களது கலைப்படைப்புகள், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, மதிக்கப்பட்டு, பாராட்டினைப் பெறும் போதுதான், அதனைக் கிடைத்தற்கரிய செல்வமாகத் திரை உலகக் கலைஞர்கள் கருதுகின்றார்கள்.

அந்த வகையில் மாநிலத் 'திரைப்பட விருதுகள்' பெறும் ஒவ்வொருவரும், அவர்கள் நடிகர்களானாலும் சரி, நடிகையரானாலும் சரி, அல்லது தொழில்நுட்ப வல்லுநர்களானாலும் சரி, இந்த விருதுகளை, தங்களது கலைத் திறமைகளுக்கு அளிக்கப்படும் மாபெரும் அங்கீகாரமாகக் கருதுகிறார்கள். இதனைப் பெறும்பொழுது பெருமை கொள்கிறார்கள். இத்துறையில் மேலும் பல சாதனைகள் புரிய ஊக்குவிக்கும் தூண்டுகோலாக இதை நம்புகிறார்கள். அதனால்தான், இந்தத் திரைப்பட விருதுகள் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று, தமிழ்த் திரைப்படத் துறையைச் சார்ந்த அனைவருமே பெரிதும் எதிர் பார்க்கிறார்கள். விரும்புகிறார்கள்.

அந்த வகையில் இன்று நீங்கள் பெறுகிற ஒவ்வொரு பரிசிலும், உங்கள் சகோதரியின் பாசமும் இழையோடியிருக்கிறது.

திரைப்படத் துறை என்பதைவிட, திரை உலகம் என்பதே பொருத்தமாகும். இது மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்ற உலகம், அவர்களுக்குக் கரை காணாத களிப்பையும் அளிக்கும் உலகம்! உழைத்துக் களைத்த ஏழை மக்களின் சோர்வினைப் போக்கும் அற்புத மருந்தை வழங்குகின்ற உலகம்! நமக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் வழங்குவது மட்டுமல்ல, வெள்ளித்திரையின் நன்கொடை; நமது வாழ்விற்கு வழிகாட்டும் ஆற்றலும், உயர்வுக்கு வழி வகுத்துத் தரும் திறனும், திரையுலகம் நமக்குத் தந்துள்ள புனிதப் பரிசுகள்.

திரைப்படத் துறையின் ஆற்றலை உலகம் எந்த அளவுக்கு உணர்ந்ததோ இல்லையோ, நம் தமிழகம் அதனை நன்கு உணர்ந்துள்ளது - என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் நம்மிடம் உள்ளன.

மூன்று தமிழுக்கும் முறையான இடம் தருவது, திரைப்படம் என்பதால் தான், காஞ்சித் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், கலையுலகில் கால் பதித்து, கருத்துலகில் விதை விதைத்து, அரசியல் உலகில் அற்புதங்கள் பல நிகழ்த்தி, தனது இலக்கை அடைய முடிந்தது. குறிப்பாக, பேரறிஞர் அண்ணாவின் கலையுலகக் காவியங்கள், கருத்துப் புரட்சிக்கும், அரசியல் புரட்சிக்கும் அடித்தளம் இட்டன.

அந்த வகையிலே, 'உண்மையைச் சொல், நன்மையைச் செய்' என்ற தத்துவத்தை, தாரக மந்திரமாகக் கொண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், புதிய புதிய வெற்றிகளையும், சாதனைகளையும் படைத்து, தமிழகத்துக்குக் காணிக்கையாக்கினார். பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவரும் அமைத்துக் கொடுத்த அந்தப் பாதையில் தான், இன்று வீறுநடை போடுகிறது, உங்கள் அன்புக்குரிய சகோதரியின் இந்த அரசு.

கலை, நாம் வாழும் வாழ்க்கைக்காக! உயிர்கொடுத்த நாட்டுக்காக! உணர்வு கொடுத்த மொழிக்காக - என்னும் அர்ப்பணிப்பு உணர்வு இருந்தால்தான், அந்தக் கலையுலக வித்தகர்கள், புதிய சமுதாயத்தைச் சமைக்க முடிந்தது; ஒரு புதிய தமிழகத்தைப் படைக்க முடிந்தது. கலை என்ற விதைதான், ஆட்சி என்னும் ஆலமரமாகி, இன்று ஆயிரமாயிரம் மக்களுக்கு அடைக்கலம் அளிக்கின்றது, அவர்களுக்கு அரணாகவும் திகழ்கின்றது. இந்தப் பெருமை, உலக நாடுகள் கண்டறியாதது; இந்தச் சிறப்பு வேறு துறைகள் கண்டறியாதது. அப்படிப்பட்ட கலைத்துறைக்கு, தங்களை அர்ப்பணித்துக் கொண்டோருக்கு அந்தக் கலையையே மூச்சாகக் கொண்டு வளர்ந்த நான், இன்று விருது வழங்குகின்றேன் என்பது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

திரையுலக வளர்ச்சியில் உங்கள் சகோதரியின் அரசு கொண்டிருக்கும் ஆர்வம் இதயபூர்வமானது. சர்வதேசத் தரம் வாய்ந்த ஒரு மாபெரும் திரைப்பட நகரம் இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நகரம் நாளைய திரையுலகத்தின் உற்பத்தி ஸ்தானமாக அமையப் போகிறது.

திரையுலகத் தொழிலாளர் பெருமக்களின் நலம் காக்கும் பொருட்டு, பணிபுரியும்போது உயிர் துறந்தாலோ, ஊனமுற்றாலோ, உதவித் தொகை வழங்குகிறது இந்த அரசு. இறந்தவருக்குப் பத்தாயிரம் ரூபாய், காயமுற்றவருக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கும் அரிய திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.

சிறு முதலீட்டுப் படங்களுக்கு அரசு அளித்து வந்த இரண்டு இலட்ச ரூபாய் உதவித் தொகையை, தற்போது மூன்று இலட்ச ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மற்றொரு கருத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். சமீபத்தில் தமிழ்த் திரைப்படத் துறையில் ஒரு மாபெரும் பிரச்சினை ஏற்பட்டு அதன் விளைவாகத் தமிழகத்திலுள்ள பெரும்பாலான திரைப்பட அரங்குகள் மூடப்பட்டன. திரைப்படத் துறை பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனை நான் பத்திரிகைகளில் பார்த்தவுடன், அரசு உள்துறைச் செயலர் இதுகுறித்து சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் உடன் அழைத்துப் பேசி நல்லதொரு தீர்வினைக் காண வேண்டுமென்றும், அவ்வாறு அவரால் தீர்வு காண முடியாவிட்டால், நானே நேரடியாகத் தலையிட்டுப் பேச்சு வார்த்தைகள் நடத்துகின்றேன் என்றும் தெரிவித்தேன். ஆனால், இரு தரப்பினருக்கும் திருப்தி ஏற்படும் வண்ணம் திரு. மலைச்சாமி அவர்கள் அழகாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர் மட்டத்திலேயே தீர்வு காணப்பட்டது. இப்படி உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்களுக்கு ஏற்படும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதை நீங்கள் என்னிடம் நேரில் வந்து கூறவேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதில்லை. அதுபற்றி நான் அறிந்தவுடன், நானே அத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைத்து முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றேன். இதுபோன்று எந்தத் துறையாக இருந்தாலும், எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் அவற்றிற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று ஓடோடி வந்து உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதுதான் இந்த அரசு.

இன்றைக்கு, பேரறிஞர் அண்ணா பெயரால், பாவேந்தர் பாரதிதாசன் பெயரால், கலைவாணர் என்.எஸ்.கே. பெயரால், ராஜா சாண்டோ பெயரால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரால், கலைவித்தகர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

சிறந்த திரைப்படங்களுக்கும், நடிக, நடிகையருக்கும், இயக்குநர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், *1990* மற்றும் *1991* ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படுகின்றன. மூன்று சவரன், ஐந்து சவரன் என்று முன்பிருந்த பாகுபாடுகள் தற்போது மாற்றப்பட்டு, எல்லோரும் ஐந்து சவரன் பரிசு பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, இன்று இந்த விழா உண்மையிலே தங்க விழாவாக மலர்ந்திருக்கிறது.

தமிழ்த் திரை உலகிற்குத் தங்களுடைய படைப்புகளால், அரிய சேவை ஆற்றியுள்ள பல்வேறு மூத்த கலை வித்தகர்களுக்கு, சிறப்பு விருதுகளை நான் வழங்க உள்ளேன். அவர்கள் அனைவருக்கு முதற்கண் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பேரறிஞர் அண்ணா விருதினை மூன்று கலைவித்தகர்கள் பெறு

## கண்ணைக் கவரும் வண்ண மேடை!

விழா மேடை, கண்ணைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது.

திரைப்படச் சுருளுடன் கூடிய நட்சத்திரங்கள் மின்னின. மேடையின் இரு புறமும் மலர்களால் உருவாக்கப்பட்ட மயில்கள் காட்சியளித்தன. விருதுபெற்ற திரைப்படங்களிலிருந்து சில காட்சிகள் மேடையில் இருபுறமும், மையப் பகுதியிலும் இருந்த குட்டித் திரையில் காண்பிக்கப்பட்டன. அப்போது மண்டபத்தின் மேற்புறம் பார்க்க வேண்டுமே! முத்துக்களைச் சிதறவிட்டாற்போன்று ஓர் பிரமை! ஆம். ஒளியமைப்பின் ஒய்யாரக் காட்சியே அது!

இரவைப் பகலாக்கும் ஒளி உமிழும் விளக்குகள் மட்டுமல்ல, தெளிவான ஒலியமைப்பும் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தது ஒரு சிறப்பம்சமாகும்.

பொதுவாக, எண்ணம் கவரும் வண்ணமிகு விழா மேடை, வருகை தந்தோரை வசீகரித்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். அத்தனை அற்புதமாக அமைக்கப்பட்டு இருந்தது அது!









''மாநில அரசு விருது வழங்குகிறது என்றால், அதைப்பெறும் கலைஞர்கள் அனைவரும் தமிழக மக்கள் அனைவராலுமே கௌரவிக்கப்படுகிறார்கள் என்பதுதான் பொருள்''

- மாண்புமிகு முதல்வர்

கின்றனர். 'பாவேந்தர் பாரதிதாசன்' விருதினை நான்கு கவிஞர்கள் பெறுகின்றனர். 'கலைவாணர்' விருதினை நான்கு கலைவித்தகர்கள் பெறுகின்றனர். 'இராஜா சாண்டோ' விருதினை நான்கு திரைப்படத் துறை வல்லுநர்கள் பெறுகின்றார்கள். கலைவித்தகர்களுக்கான 'எம்.ஜி.ஆர்.' விருதினை நான்கு திரைப்படத் துறை கலைஞர்கள் பெறுகின்றார்கள். தங்களுடைய அரிய திறமைகளுக்காக இவ்விருதுகளைப் பெறும் அனைத்துத் திரையுலகச் சாதனையாளர்களையும் நான் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றேன்.

அடுத்து 1990 மற்றும் 1991 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகளைப் பெறும் இளைய தலைமுறைக் கலைஞர்கள் அனைவருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கி நம் அனைவரையும் மகிழ்வித்த கலைஞர்கள் அனைவருக்கும் என் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய திரையுலகத்தினருக்குப் புகழ் சேர்க்கும் இந்தத் திருநாளில், கலைத் துறையில் ஈட்டும் வெற்றியை, கவுரவத்தை, செல்வத்தை, நீங்கள் அனைவரும் சமுதாய மேம்பாட்டுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் நீங்கள் ரசிகப் பெருமக்களுக்கும், இந்நாட்டு மக்களுக்கும், காட்டுகின்ற அன்பின் அடையாளம் என்பதை நினைவூட்டி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சீர்மிக விழாவில் பங்கு கொண்ட ஒவ்வொருவருக்கும் என் வாழ்த்துக்களை வழங்கி, விருதும் பரிசும் பெற உள்ள வித்தகர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

—பிறகு, மாநிலத் திரைப்பட விருதுகளை வழங்கினார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரத்தால், முதலில் விருது பெற்றவர் யார் தெரியுமா? நம் நெஞ்சமெலாம் கவர்ந்த அஞ்சலிப்பட அரும்பு மழலைச் செல்வம் பேபி ஷாம்லி. தேர்வுக் குழுவால் பேபி ஷாம்லி தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இக்குழந்தை நட்சத்திரத்தை விருது பெறுவதற்காகத் தேர்ந்தெடுத்தார். அன்பு முத்தத்துடன் அழகிய பரிசும் அக்குழந்தைக்கு வழங்கி மகிழ்ந்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தொடர்ந்து, 1990-91-ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த திரைப்படங்களுக்கும், சிறந்த கலைஞர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், விருதுகளை வழங்கினார்.

இசை வழங்கிய திரு. சங்கர்-கணேஷ் அவர்களுக்கும், நகைச்சுவை வழங்கிய திரு. எஸ்.வி. சேகர் அவர்களுக்கும், நடன நிகழ்ச்சி நடத்திய திரு. டி.கே.எஸ். பாபு அவர்களுக்கும், விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய திருமதி சந்தியா ராஜகோபால், திரைப்பட நடிகை செல்வி கஸ்தூரி ஆகியோருக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தபோதும், கலைஞர்கள் விருதுகள் பெறுகிறபோதும், அரங்கில் குழுமியிருந்தோர் உற்சாகத்துடன் கரவொலி எழுப்பினர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள், செய்தி-மக்கள் தொடர்புத்துறை சார்பில், நினைவுப் பரிசினை வழங்கி, விழா சிறப்புற அமைவதற்கு உதவியாக இருந்த அத்தனைப் பேருக்கும், தம் இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

இனிய மாலை நேரத்தில், இதயமெல்லாம் கவர்ந்த அந்தக் கலை விழா, நம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டியது மட்டுமல்ல, கால வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்று கூறினால், அது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை!

- பி.வி. கிரி.

## விருது பெற்றோர் விவரம்:

***1990-ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள்-***

சிறந்த திரைப்படங்கள்; முதல் பரிசு - புது வசந்தம் - படத் தயாரிப்பாளர் திரு. சௌத்ரி, இரண்டாம் பரிசு - கேளடி கண்மணி - படத் தயாரிப்பாளர் திரு. ஏ. சுந்தரம், மூன்றாம் பரிசு - கிழக்கு வாசல் - படத் தயாரிப்பாளர் திரு. தியாகராஜன், சிறப்புப் பரிசு - அஞ்சலி - படத் தயாரிப்பாளர் திரு. ஜி. வெங்கடேசுவரன்.

***கலைஞர்களுக்கான பரிசுகள்***

சிறந்த நடிகர் - கார்த்திக் (கிழக்கு வாசல்), சிறந்த நடிகை - ரேவதி (கிழக்கு வாசல்), சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) - சத்தியராஜ் (நடிகன்), சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) - கௌதமி (நம்ம ஊர் பூவாத்தா), சிறந்த இயக்குநர் - விக்கிரமன் (புது வசந்தம்), சிறந்த கதையாசிரியர் - விசு (வரவு நல்ல உறவு), சிறந்த உரையாடல் ஆசிரியர் - வாசு (நடிகன்), சிறந்த இசையமைப்பாளர் - தேவா (வைகாசி பொறந்தாச்சு), சிறந்த பாடலாசிரியர் - வாலி (கேளடி கண்மணி)

சிறந்த பின்னணிப் பாடகர் - எஸ்.பி. பாலசுப்பிரமணியம் (கேளடி கண்மணி), சிறந்த பின்னணிப்பாடகி - சித்ரா (வைகாசி பொறந்தாச்சு) சிறந்த ஒளிப்பதிவாளர் - அப்துல் ரகுமான் (கிழக்கு வாசல்), சிறந்த ஒலிப்பதிவாளர் - விஸ்வநாத் (வைகாசி பொறந்தாச்சு), சிறந்த



திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) - கணேஷ் குமார் (ஒரு வீடு இரு வாசல்), சிறந்த ஆர்ட் டைரக்டர் - சலம் (உலகம் பிறந்தது எனக்காக மற்றும் நடிகன்), சிறந்த சண்டைப் பயிற்சியாளர் (ஸ்டண்ட் மாஸ்டர்) - விக்ரம் தர்மா (நடிகன்), சிறந்த நடன ஆசிரியர் - சுந்தரம் (அஞ்சலி).

**1990-ஆம் ஆண்டிற்கான சிறந்த கலை வித்தகர்களுக்கான விருதுகள்-**

அறிஞர் அண்ணா விருது-கே. பாலச்சந்தர், பாவேந்தர் பாரதிதாசன் விருது-கவிஞர்கள் முத்துராமலிங்கம், குருவிக்கரம்பை சண்முகம், கலைவாணர் விருது-நாகேஷ், குமாரி சச்சு, ராஜா சாண்டோ விருது- பி.எஸ். வீரப்பா, வி. ராமமூர்த்தி, எம்.ஜி.ஆர். விருது- எம்.என். நம்பியார், மனோரமா.

**1991-ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள்-**

சிறந்த திரைப்படங்கள்: முதல் பரிசு - சின்னத்தம்பி - படத் தயாரிப்பாளர் திரு. பாலு, இரண்டாம் பரிசு - என் ராசாவின் மனசிலே - படத் தயாரிப்பாளர் திரு. ராஜ்கிரண், மூன்றாம் பரிசு - குணா - படத் தயாரிப்பாளர் திருமதி அலமேலு சுப்பிரமணியம், சிறப்புப் பரிசு - சேரன் பாண்டியன் - படத் தயாரிப்பாளர் திரு. சௌத்ரி.

**கலைஞர்களுக்கான பரிசுகள**

சிறந்த நடிகர் - பிரபு (சின்னத்தம்பி), சிறந்த நடிகை - குஷ்பு (சின்னத்தம்பி), சிறந்த நடிகர் - (சிறப்புப் பரிசு) - ராஜ் கிரண் (என் ராசாவின் மனசிலே), சிறப்பு நடிகை (சிறப்புப் பரிசு) - பானுப்பிரியா (அழகன்), சிறந்த இயக்குநர் - பி. வாசு (சின்னத்தம்பி), சிறந்த கதையாசிரியர் - ஈரோடு சவுந்தர் (சேரன் பாண்டியன்), சிறந்த உரையாடல் ஆசிரியர் - ஈரோடு சௌந்தர் (சேரன் பாண்டியன்), சிறந்த இசையமைப்பாளர் - மரகதமணி (அழகன்), சிறந்த பாடலாசிரியர் - பிறை சூடன் (என் ராசாவின் மனசிலே), சிறந்த பின்னணிப் பாடகர் - மனோ (பல படங்கள்), சிறந்த பின்னணிப் பாடகி - சுவர்ணலதா (சின்னத்தம்பி), சிறந்த ஒளிப்பதிவாளர் - ரகுநாத் ரெட்டி (அழகன்), சிறந்த ஒலிப்பதிவாளர் - சம்பத் (சேரன் பாண்டியன்), சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) - ஜெயச்சந்திரன் (மாநகரக் காவல்), சிறந்த ஆர்ட் டைரக்டர் - தோட்டாத் தரணி (தளபதி), சிறந்த சண்டைப் பயிற்சியாளர் - சூப்பர் சுப்பராயன் (மாநகரக் காவல்), சிறந்த நடன ஆசிரியர் - டி.கே.எஸ். பாபு (சின்னத்தம்பி).

**1991-ஆம் ஆண்டிற்கான சிறந்த கலைவித்தகர்களுக்கான விருதுகள்:-**

அறிஞர் அண்ணா விருது-ஏ.எஸ்.பிரகாசம், வியட்நாம் வீடு சுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன் விருது-கவிஞர்கள் நா. காமராசன், இ. முத்து ராமலிங்கம், கலைவாணர் விருது-எஸ்.வி. சேகர், கோவை சரளா, ராஜா சாண்டோ விருது-பி.மாதவன், . ஏ.சி. திருலோகசந்தர், எம்.ஜி.ஆர். விருது- ஆர்.எஸ்.மனோகர், பண்டரிபாய்.



TNPSC

விளம்பர எண். 4/93

**தமிழ்நாடு சிறைச் சார்நிலைப் பணியில், மூதாய் (Matron) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய பெண் பணி வேட்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 22.2.1993 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதி இப்பதவிக்குப் பொருந்தாது.)**

குறிப்பு: இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவை, அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,400-40-1,600-50-2,300-60-2,600/-

**வயது:** 1.7.1993 அன்றுள்ளபடி 30 வயதிற்குக் குறைவாக.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை.

(மேலும் சில சலுகைகள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளன.)

**கல்வித் தகுதி:** (13.1.1993 அன்றுள்ளபடி): அடியிற் குறிப்பிட்டுள்ளவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து பி.ஏ. அல்லது பி.எஸ்.சி., அல்லது பி.காம்., அல்லது மருந்தியலில் (Medicine) பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பி.ஓ.எல். அல்லது மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ., அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட்., அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட் பட்டம்.

**உடற் தகுதி (13.1.1993 அன்றுள்ளபடி):-**

குறைந்தபட்சம் 145 செ.மீ. உயரமும், 2.5 செ.மீ.-க்குக் குறையாமல் விரிவடையக் கூடிய, குறைந்தபட்சம் 71 செ.மீ. மார்பளவும் பெற்றிருக்க வேண்டும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 13.1.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 13.1.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-இல் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடனும் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/115/MS/93



# உலக அரங்கில் உயரும் தமிழகம்!



உலக அரங்கில் தமிழகத்தின் பெருமை மேலும் உயர்ந்திருக்கிறது.

இந்தியா எனும் மகுடத்தில் தமிழகமெனும் வைரக்கல் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

சிங்காரச் சென்னையின் சிறப்புக்குச் சிறப்புச் செய்யும் வகையில், பிரம்மாண்டமாக எழுந்துள்ளது, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்.

கட்டடக் கலைக்குக் கட்டியம் கூறும் வகையில் அமைந்துள்ள இதன் எழில்மிகு தோற்றம், நம் இதயத்தைக் கவர்கிறது. நம்மை, இமயம்போல் இறுமாந்து நிற்க வைக்கிறது.

இந்தியாவிலேயே இந்த ஸ்டேடியம்தான் முதலிடத்தை வகிக்கின்றது. ஆசியாவிலுள்ள சிறப்பான ஸ்டேடியங்களுள் இதுவும் ஒன்று என்கிற பெருமையும் நமக்குண்டு.

பத்தாவது ஜவகர்லால் தங்கக்கோப்பை அழைப்பு சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டி முதன் முதலாகச் சென்னையிலே தொடங்கியது.

அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப, ஆசியாவிலேயே சிறந்த விளையாட்டு அரங்குகளில் ஒன்றான இது, 40 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரியான விளையாட்டரங்குகளை உருவாக்குவதில் பேரும்புகழும் பெற்ற லார்சன் அண்டு டுப்ரோநிறுவனத்தாரின் கைவண்ணத்தில் இது கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. மிகக் குறுகிய காலத்தில் உருவான இது, ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் கடும் உழைப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இரவைப் பகலாக்கக் கூடிய, சக்திவாய்ந்த ஒளி உமிழும் விளக்குகள், இந்த அரங்கில் பொருத்தப்பட்டுள்ளன.

முக்கியப் பிரமுகர்களுக்கான குளிர்சாதன வசதியுடன் கூடிய அழகிய அறைகள், நவீன பாதுகாப்பு அமைப்புகள் முதலானவை இதன் சிறப்பம்சங்களாகும்.

கால்பந்தாட்டம் மட்டுமன்றி, உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் போன்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ஏற்பவும் இது உருவாக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு நல்ல வசதிகள், பயிற்சி பெறுவதற்கேற்ற இடங்கள், அதுமட்டுமா? ஓய்வு எடுத்துக் கொள்ளவும், சிகிச்சை பெறவும் இங்கே தக்க வசதிகள் உண்டு.

பத்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த எழில்மிகு விளையாட்டரங்கின் உயரம் 90 அடியாகும்.

உலக அரங்கில் நம் மதிப்பை மேலும் உயர்த்துகின்ற வகையில், இந்த அரங்கம் அமைந்திருக்கின்றது. அதுமட்டுமன்றி, உலகப் பந்தய வரலாற்றில், இந்தக் கால்பந்து விளையாட்டுக்கள் இடம் பெறுவது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய ஒன்றாகும்.

உலக நாடுகளான அல்ஜீரியா, காமரூன், இந்தியா, ருமேனியா, பொலிவியா, பின்லாந்து, வடகொரியா, ரஷ்யா ஆகிய நாடுகள் பங்கேற்க, பாங்காய் நடைபெறுகின்றன, கவின்மிகு கால்பந்தாட்டப் போட்டிகள்.

இந்த விளையாட்டுப் பந்தயங்களின் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது கால்பந்தை உதைக்கும் இளஞ் சிங்கம்.

தில்லியில் நடந்த ஆசியப் போட்டியின் சின்னமான யானைக்கு அப்பு என்று பெயரிட்டதைப் போல, இந்தச் சின்னத்துக்கு 'லியோ' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சின்னத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்களே தேர்ந்தெடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இளஞ் சிங்கத்தின் முழக்கம் உலகமெலாம் ஒலிக்க, உள்ளமெலாம் கலகலக்க, உயரிய அந்தஸ்தை இது நமக்குப் பெற்றுத் தந்திருக்கின்றது.

தோழமைக்கும், நல்லெண்ணத்துக்கும், நல்லிணக்கத்துக்கும் சின்னமாகத் திகழும் இந்த இளஞ் சிங்கம், நமக்கு மட்டுமல்ல, பந்தயக் குழுக்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஊட்டி வருகின்றது.

ஆம். தேசிய ஒளிபரப்பில் ஆசிய விளையாட்டுகள்!

கனவு நனவாகிய கண்கொள்ளாக் காட்சிகள்!

உலகின் பார்வையெல்லாம் நம் பக்கம்!

உள்ளப் பூரிப்போ தமிழகத்துக்கு!

தோழமைக்குக் கால்பந்தாட்டம்! தொடரும், இந்த ஒருமைபாட்டுப் பூந்தோட்டம்!

—பி.வி.ஜி

With
Best
Compliments
From



M/s. Pioneer Match Industries, Dharmapuri

M/s. Premier Match Industries, Dharmapuri

M/s. Prabakar Match Industries, Dharmapuri

M/s. Popular Match Industries, Dharmapuri

M/s. J.P. Match Industries, Dharmapuri.



# மத்தூர்

தருமபுரி மாவட்டத்தில் சட்டசபைத் தொகுதிகள் பத்தும், நாடாளுமன்றத் தொகுதிகள் ஐந்தும் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இம்மாவட்டத்தில் உள்ள பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டுப் பெரும் வெற்றி பெற்றவராவார்; அத்தொகுதியில் பர்கூர்-மத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கியிருக்கின்றன; மத்தூர் ஒன்றியத்தில் அரசு மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள ஆக்கப் பணிகள் குறித்து விளக்கும் கட்டுரை இது:

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பர்கூர் சட்டமன்றத் தொகுதியானது மத்தூர் மற்றும் ஊத்தங்கரை ஒன்றியத்தின் ஒரு பகுதி அடங்கியது. பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் முன்னேற்றம் குறித்து சென்ற இதழில் விரிவாகப் பார்த்தோம். மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து இப்போது பார்ப்போம்.

மத்தூர் ஊராட்சி ஒன்றியம் தருமபுரியிலிருந்து திருப்பத்தூர் செல்லும் வழியில் அமைந்துள்ளது. பசுமை மிக்க இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 24 ஊராட்சிகள் அடங்கியுள்ளன. இந்த ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள் குறித்து இதன் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களைச் சந்தித்தபோது, 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மிக விவரமாக நமக்கு விளக்கினார்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் ரூ.5,600 இலட்சம் செலவில் 8 ஊராட்சி அலுவலகங்களும், ரூ.11.023 இலட்சம் செலவில் 69 கூட்டுக் குடியிருப்புகளும் (Group Houses), ரூ.1,380 இலட்சம் செலவில் ஒரு பள்ளிக் கூடக் கட்டடமும், மத்தூரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இதே ஆண்டில் ரூ.24.148 இலட்சம் செலவில் 59 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.2.40 இலட்சம் செலவில் இரண்டு பள்ளிக் கட்டடங்களும், 4 சத்துணவு மையங்களும் ரூ.2.68 இலட்சம் செலவில் மும்முரமாகக் கட்டப்பட்டு வருகின்றன. 46 சாண எரிவாயுக் (Bio-Gas) கலன்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு இவை அனைத்தும் கட்டிமுடிக்கப் பட்டுள்ளன. இவற்றைத் தவிர, ரூ.9.12 இலட்சம் செலவில் 24 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டும் பணி இரவு பகலாக நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன.

1991-92-இல் மட்டும், மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.1,380 இலட்சம் செலவில் ஒரு பள்ளிக் கூடக் கட்டடமும், ரூ.2,800 இலட்சம் செலவில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூட மையங்கள் 4 சிறப்புறக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் கே. எட்டிப்பட்டி, அந்தேரிப்பட்டி, ஒட்டப்பட்டி, ராம கிருஷ்ணாம்பட்டி, நாவலப்பட்டி ஆகிய 5 ஊராட்சிகளுக்கு 5 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

## மன்றோ நினைவுத் தூண்



சென்னையில், எல்லா ஆங்கிலத் துரைகளின் சிலைகளும் அகற்றப்பட்ட போதிலும், குதிரைமேல் உள்ள மன்ரோ சிலை மட்டும் கம்பீரமாக இன்னமும் காட்சி தருகிறதல்லவா? இந்த சர் தாமஸ் மன்ரோ, தருமபுரியில், 1792 முதல் பத்தாண்டுக் காலம் வாழ்ந்திருக்கிறார். தாய்நாட்டு மண்ணைவிட நம் தமிழ்நாட்டு மண் அவருக்கு மிகவும் பிடித்துப் போயிருக்கிறது. இதனாலேயே, தருமபுரியில் அவர் நினைவாக ஒரு ஸ்தூபியும் எழுப்பப்பட்டுள்ளது. அதன் கீழுள்ள கல்லில்- 'சர் தாமஸ் மன்ரோ துரைக்கும் தருமபுரிக்கும் உள்ள சம்பந்தத்தைக் காட்டுவதற்காகச் சென்னப்பட்டனம் கவர்ன்மென்டார் இந்த ஸ்தம்பம் கட்டியிருக்கிறார்கள்...' என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளது.

சர் தாமஸ் மன்ரோ அவ்வப்போது எழுதிய கடிதங்கள், நமது தமிழ்நாடு பற்றிய அவருடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன. 1849-இல் அக் கடிதங்கள் யாவும் கிளே என்பவரால் தொகுத்து நூலாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அதன் பெயர் Life of Sir Thomas Munro என்பதாகும்.

—'ராஜு'

## எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

**வி. குப்பைய்யா,**
ஓட்டல் விக்னேஸ்,
ஒகேனக்கல்.

**வினாயகா பீடா ஸ்டால்,**
ஒகேனக்கல்.

**ஓட்டல் அமிர்தம்,**
ஒகேனக்கல்.

**எம். லட்சுமணன்,**
ஓட்டல் மணி,
ஒகேனக்கல்.

**கிருஷ்ணமூர்த்தி,**
பரிசல் ஒப்பந்தக்காரர்,
ஒகேனக்கல்.





# ராமு பைனான்ஸ்

## பொன்மகள் சேமிப்புத் திட்டம்

**டிபாசிட் செய்யும் தொகை: ரூ.1,000**

**6 வருடம் கழித்து பெறும் தொகை: ரூ.2,000**

*மகத்தான முதல் பம்பர் பரிசு 100 சவரன் தங்க நகை*

*மற்றும் 12 குலுக்கல்கள்*

*சிறப்புப் பரிசுகள் தங்க நகைகளாக உண்டு.*

**உங்கள் சேமிப்புக்கு முழுப் பாதுகாப்பு நிச்சயம்**

## போட்டி விவரம்



10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு சர்வ தேசக் கால்பந்துப் போட்டிகள் 19.1.93 அன்று தொடங்கின.

கால்பந்துப் போட்டிகள் விவரம் வருமாறு:

ஜனவரி 19: பொலீவியா-வட கொரியா
ஜனவரி 20: இந்தியா-பின்லாந்து
ஜனவரி 21: ருமேனியா-ரஷ்யா
ஜனவரி 22: காமரூன்-பின்லாந்து
ஜனவரி 23: பொலீவியா-பின்லாந்து
ஜனவரி 24: இந்தியா-காமரூன்
ஜனவரி 25: ருமேனியா-வட கொரியா
ஜனவரி 26: இந்தியா-பின்லாந்து
ஜனவரி 27: பொலீவியா-ரஷ்யா
ஜனவரி 28: காமரூன்-பின்லாந்து
ஜனவரி 29: ரஷ்யா-வட கொரியா
ஜனவரி 30: இந்தியா-காமரூன்
ஜனவரி 31: முதல் அரையிறுதி
பிப்ரவரி 1: இரண்டாவது அரையிறுதி
பிப்ரவரி 2: ஓய்வு தினம்
பிப்ரவரி 3: இறுதிப் போட்டி.

## இந்திய வீரர்களின் அணி

பத்தாவது ஜவகர்லால் தங்கக் கோப்பை சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்கள் விவரம் வருமாறு:

1. ஹேமந்த தோரா
2. முகம்மது யூசப்
3. முகம்மது காதிர்
4. பரீலாய் சாஹா
5. கபிர் கோஷ்
6. வி.பி. சத்யன் (காப்டன்)
7. யு. சரஃப் அலி
8. சூரியமணி சிங்
9. அலோக்தாஸ்
10. இமானுவேல்
11. தேஜிந்தர் குமார்
12. ஜோவல் பே
13. குணபீர் சிங்
14. சாந்தகுமார்
15. அகில் அன்சாரி
16. கே. சாம்சன்
17. ஐ.எம். விஜயன்
18. எஸ். பாஷா
19. கிரன் கோங்சாய்
20. அப்துல் காலிக்

## நேரு தங்கக்கோப்பை - ஒரு கண்ணோட்டம்

| ஆண்டு | போட்டி நடைபெற்ற இடம் | பங்கேற்ற நாடுகள் | கோப்பையை வென்ற நாடு |
|---|---|---|---|
| 1982- | கல்கத்தா | - உருகுவே, சீனா, தென் கொரியா, இத்தாலி, யூகோஸ்லேவியா, இந்தியா. | உருகுவே |
| 1983- | கொச்சி | - ருமேனியா, இரான், கேமரூன், சீனா, ஹங்கேரி, இந்தியா, இத்தாலி. | ஹங்கேரி, |
| 1984- | கல்கத்தா | - போலந்து, சீனா, அர்ஜெண்டினா, ஹங்கேரி, ருமேனியா, இந்தியா. | போலந்து, |
| 1985- | கொச்சி | - இரான், சோவியத் ரஷ்யா, யூகோஸ்லேவியா, சீனா, தென் கொரியா, அல்ஜீரியா, இந்தியா, மொராக்கோ. | சோவியத் ரஷ்யா |
| 1986- | திருவனந்தபுரம் | - சோவியத் ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி, தென் கொரியா, சீனா, பெரு, இந்தியா. | சோவியத் ரஷ்யா |
| 1987- | கோழிக்கோடு | - சோவியத் ரஷ்யா, ஜெர்மனி, சிரியா, நைஜீரியா, சீனா, டென்மார்க், பல்கேரியா, இந்தியா. | சோவியத் ரஷ்யா |
| 1988- | சிலிகுரி | - சோவியத் ரஷ்யா, போலந்து, ஹங்கேரி, சீனா, பல்கேரியா, இந்தியா. | சோவியத் ரஷ்யா |
| 1989- | கோவா | - ஹங்கேரி,சோவியத் ரஷ்யா, போலந்து வட கொரியா, ஈராக், இந்தியா. | ஹங்கேரி |
| 1991- | திருவனந்தபுரம் | - ருமேனியா,ஹங்கேரி, சோவியத் ரஷ்யா, சீனா, இந்தியா, ஜாம்பியா. | ருமேனியா |

With
Best
Compliments
From

Tmt. Ganthimathiammal
Pennagaram

Prop: Ramanath Theatre
Cauvery Road
Pennagaram



# 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கிடைக்கப் போதிய நிதி ஒதுக்கப்படும்!

## தமிழக-ஆந்திர முதல்வர்கள் கூட்டறிக்கை

சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கொண்டுவரும் தெலுங்கு-கங்கைத் திட்டம் குறித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதல்வர் திரு.விஜயபாஸ்கரரெட்டி அவர்களுடன் 27.1.93 அன்று, ஐதராபாத்தில், ஆந்திரப்பிரதேசத் தலைமைச் செயலகத்தில், பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பின்னர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதல்வர் திரு.விஜயபாஸ்கரரெட்டி அவர்களும், வெளியிட்ட கூட்டறிக்கையில், ''1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள், சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கிடைக்கும் வகையில், தெலுங்கு-கங்கைத் திட்டம் துரிதப்படுத்தப்படும்'' என்று கூறப்பட்டுள்ளது.

ஐதராபாத்தில் உள்ள தலைமைச் செயலகத்தில் இந்தக் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்தவுடன், இரு முதலமைச்சர்களும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

தொடக்கத்தில் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பேசிய பேச்சில் உள்ள கருத்துக்களே பெரும்பாலும் இந்தக் கூட்டறிக்கையிலும் இடம் பெற்றுள்ளன.

ஆந்திர முதலமைச்சர் விஜயபாஸ்கரரெட்டி, முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா ஆகிய இருவரும் கையெழுத்திட்ட அந்தக் கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது:

''இன்று (27.1.93) ஐதராபாத்தில், தெலுங்கு-கங்கைத் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நாங்கள் கூட்டாக ஆய்வு நடத்தினோம்.

''மொத்தத்தில் ஏற்பட்ட தடைகள், மற்றும் எதிர்நோக்கிய கடும் பிரச்சினைகளைப் பார்க்கும் போது 1983-ஆம் ஆண்டு தொடங்கிய இந்தத் திட்டப் பணிகள் முன்னேற்றம் திருப்திகரமாகவே இருக்கிறது.

''திட்டம், வடிவமைப்பு, குறிப்பாக மாற்று மரம் நடும் செயல்கள், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான கடும் பிரச்சினைகள் சமாளிக்கப் பட்டு, வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தோம்.

''இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றி முடிக்கக் கஷ்டமான பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, எடுத்துக் கொள்ள ஒரு செயல் திட்டத்துக்கு 1992-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த கூட்டுக் கூட்டத்தில் சம்மதம் தெரிவித்து இருந்தோம். இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க, இரு அரசுகளும் திறமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

''இந்தத் திட்டத்தின் கடைக்கோடியில் இருக்கும் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கிடைக்கும் வகையில் அனைத்துத் தேவையான பணிகளையும் நிறைவேற்ற அசல் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி ஆந்திர அரசும், தமிழக அரசும் போதுமான நிதியை ஒதுக்கும்.

''இந்தத் திட்டத்தை வேகமாக நிறைவேற்றுவது தொடர்பான அனைத்து விஷயங்கள் பற்றிய நிர்வாக ஆலோசனைகளுக்காக, இப்போது உள்ள ஏற்பாடு மிகவும் திருப்திகரமாக நடந்து வருகிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் போது ஏற்படும் பிரச்சினைகளைச் சுமுகமாக்க இந்த ஒப்பந்தம் தொடரும்.''

- மேற்கண்டவாறு அந்தக் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(தெலுங்கு-கங்கைத் திட்டம் குறித்து 27.1.93 அன்று, ஐதராபாத்தில் பேச்சுவார்த்தை நடத்திய பின், மாண்புமிகு ஆந்திர, தமிழ்நாடு மாநிலங்களின் முதலமைச்சர்கள் வெளியிட்ட கூட்டறிக்கை.)



★ உண்மையும், அகிம்சையும் மனித சமூகத்தை விட்டு விட்டுத் தனியாக உட்கார்ந்து கொண்டு அனுஷ்டிக்க வேண்டிய அறங்களல்ல; அவை மனித வர்க்கம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய அறங்களாகும்.

★ நம்மிடம் அன்பாக இருப்பவர்களிடம் மட்டுமே அன்பாக இருப்பது என்பதல்ல அகிம்சை-நம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு கொள்வது ஒன்றே அகிம்சை.

★ சமூக அநீதி எங்கே நடப்பதாக இருந்தாலும் சரி, அதை எதிர்க்காத யாரும், தீவிரமாக அகிம்சையை அனுசரிப்பவராக இருக்க முடியாது.



# வரலாற்றுச் சிறப்பு

ஆர். ஆறுமுகம், இ.ஆ.ப.,
உறுப்பினர் - செயலாளர்
தமிழ்நாடு விளையாட்டு
அரங்கங்கள் சங்கம்





பழைய நேரு ஸ்டேடியத்தின் வரலாற்றுச் சிறப்புகளையும் பொலிவு பெற்று நிற்கும் புதிய ஸ்டேடியத்தின் தனிச் சிறப்புகளையும், தமிழ்நாடு விளையாட்டு அரங்கங்கள் சங்கத்தின் உறுப்பினர்-செயலாளர் திரு. ஆர். ஆறுமுகம் விவரிக்கிறார்:

பல நூற்றாண்டுகளுக்கு முன் எளிமையான கிராமிய விளையாட்டுக்கள் என்ற அளவில் தொடங்கி, இன்று உலகளாவிய வகையில் தொலைக்காட்சி மூலம் இலட்சக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் கண்டுகளிக்கும் வண்ணம் பரபரப்பும், விறுவிறுப்பும் மிக்க விளையாட்டு யுகமாக மாறி விட்டது. இந்த நீண்ட கால வரலாற்றில், தமிழகத்தின் தலைநகர் சென்னையில், கண்கவர் எழுச்சித் தோற்றம் கொண்ட ஒரு பொறியியல் சாதனையாக ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம் இன்று நிறைவு பெற்று இருக்கிறது.

இந்த விளையாட்டு அரங்கம் அகில உலக கால்பந்து இணையத்தின் சமீபத்திய கோட்பாடுகளுக்கு உட்பட்டு வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். இன்று முழுமை பெற்று இருக்கின்ற ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம், வரலாற்றுப் புகழ்

## 260 நாட்களில் திட்டமிட்டு நிறைவேற்றிய சாதனை!

**சென்னை மாநகரின் மகத்தான மையப் பகுதியாக உருவாகியுள்ள புதிய ஜவகர்லால் நேரு ஸ்டேடியம், சர்வதேச விதி முறைகளுக்கு ஏற்ப கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இங்கு இனிப் பல விளையாட்டுகளில் அருஞ் சாதனைகள் நிகழத் தொடங்கும்.**

**ஆனால் அந்தச் சாதனைகளில் எதுவும், இந்த மாபெரும் விளையாட்டு அரங்கத்தை நிர்மாணித்து முடித்த சாதனையை விஞ்ச முடியாது என்பது நிச்சயம். விரைவாகவும், நம்பகமாகவும் உறுதியோடும் இந்த அரங்கத்தை உருவாக்க முன் கூட்டியே வார்த்து எடுக்கப்பட்ட கான்க்ரிட் பாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. லார்சன் அண்ட் டுப்ரோவின் ஈசிசி (L & T - ECC) கட்டுமானப்பிரிவு கடைப்பிடித்த தொழில்நுட்பத் திறனுக்கு இது ஒரு சான்று.**

**கட்டுமான வரலாற்றிலேயே இல்லாதவாறு, 260 நாட்களுக்குள்ளாகவே இந்த விளையாட்டு அரங்கத்திற்கான வடிவமைப்பைத் திட்டமிட்டு அதனைத் திறம்பட உருவாக்கியும் முடிக்க எல் அண்ட் டி ஈசிசி (L & T - ECC) கட்டுமானப் பிரிவின் தொழில்நுட்பத் திறன் உதவியுள்ளது-**

**கட்டுமானப் பணிக்கு இணையாகப் பொறியியல் பணிகளும் உடன் மேற்கொள்ளப்பட்டு இந்த அரசாங்கம், மிகக் குறுகிய காலத்தில், அதே சமயம் மிக உறுதியான முறையில் உருவாக்கப் பட்டுள்ளது. பல்வேறு பொறியியல் நிபுணர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களின் ஆலோசனைகளும் வழிமுறைகளும் இக் கட்டுமானப் பணியில் மேற்கொள்ளப்பட்டன.**

**பிரமாண்டமான எலக்ட்ரானிக் ஸ்கோர் போர்டு, எங்குமே நிழல் படாதவாறு ஒரே மாதிரியாக அமைந்த ஒளிவிளக்கு அமைப்பு, தகவல் தொடர்புக்கான நவீன வசதிகள் அமைந்த அறை, முக்கியப் பிரமுகர்கள் ஓய்வெடுக்கும் பகுதி, முதலுதவி மற்றும் அவசரச் சிகிச்சை வசதி, உணவகம் ஆகியவை இதன் சிறப்பம்சங்களில் சில்.**

பெற்று விளங்கிய, சென்னை மாநகராட்சிக்குரிய பழைய நேரு விளையாட்டு அரங்கில் உருவாக்கப் பட்டிருக்கிறது.

பழைய நேரு விளையாட்டு அரங்கத்தில் எத்தனையோ வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நிகழ்ந்துள்ளன என்பது நினைவு கூரத்தக்கது. ரஷியா, இந்தியா நாடுகளுக்கிடையே நடந்த கால்பந்தாட்டப் போட்டி, அகில உலக ரேனிபி ராங்க் ஹாக்கிக் கோப்பை போட்டி, உலக நாடுகளிடையே நடந்த கிரிக்கெட் போட்டிகள் அனைத்தும் இதே நேரு விளையாட்டு அரங்கில் நிகழ்ந்துள்ளது.

### ராணி எலிசபெத்

இங்கிலாந்து ராணி எலிசபெத் அம்மையார் அவர்களுக்குத் தமிழ்நாடே போற்றும் வண்ணம் ஒரு கண்கவர் வரவேற்பு அளித்ததும், அண்மைக் காலத்தில் மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் மற்றும் மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். ஆகியோர் கலந்து கொண்டு தெலுங்கு- கங்கைக் குடிநீர்த் திட்டத்தினைத் துவக்கிய விழா நடந்ததும், இந்த நேரு விளையாட்டு அரங்கத்தில்தான் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் புகழ்பெற்ற மண்ணில்தான், இன்றைய கம்பீரமான ஜவகர்லால் நேரு ஸ்டேடியம் எழுந்து நின்று தமிழ்நாட்டின் பெருமையை அகில உலகத்திற்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த விளையாட்டு அரங்கத்தின் வடிவமைப்பினை உருவாக்குகின்ற பணி புகழ்மிக்க கட்டடக் கலைஞர்கள் வி.என். நாராயண ராவ் அவர்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது, விளையாட்டு அரங்கத்தினைக் கட்டுகின்ற பணி இந்தத் துறையில் அகில உலகப் புகழ்பெற்ற லார்சன் அண்டு டுப்ரோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டது. இந்த இரண்டு நிறுவனங்களும் கண்ணும் கருத்துமாகப் பணியாற்றி, தங்கள் பணிகளைச் செய்து முடித்து இருக்கின்றனர். லார்சன் அண்டு டுப்ரோ நிறுவனத்தினர் வரலாற்றில், இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தகைய பிரம்மாண்டமான ஒரு திட்டம் செய்து முடிக்கப்பட்டது என்பது இதுவே முதல் முறையாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த சாதனையைப் படைத்த பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களையே சாரும்.

### தொலை நோக்குப் பார்வை

இந்த விளையாட்டு அரங்கம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வை, கலை உணர்வு, நிர்வாகம் மற்றும் திட்டச் செயல்திறன் ஆகியவற்றிற்கு நிரந்தரச் சாட்சியமாக விளங்குகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குக் கொண்ட, முற்போக்குச் சிந்தனையில் உருவானதுதான் இந்த ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம். இதன் மூலம், உலக விளையாட்டு அரங்கில் தமிழகம் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இந்த விளையாட்டு அரங்கத்தை நிறுவியதன் மூலமாக, தமிழக மக்கள், இந்திய மக்கள், உலகின் சிறந்த விளையாட்டு வீரர்களைக் களத்தில் காண்கின்ற வாய்ப்பினைப் பெறுகிறார்கள். இந்திய இளைஞர்கள், ஒளிமயமான எதிர்காலத்தை உலக விளையாட்டு அரங்கில் பெறுவதற்கு இந்த ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம் மிகச் சிறந்த தூண்டுகோலாக அமையும்.

# தமிழக அணியின் சீருடைகள்!



இதுவரை தமிழ்நாட்டில் இருந்து செல்லும் ஒவ்வொரு விளையாட்டு அணியும் வெவ்வேறு சீருடைகளை அணிந்து செல்வது வழக்கமாக இருந்தது. இனிமேல் எல்லா விளையாட்டுப் பிரிவு களைச் சேர்ந்த தமிழக அணிகளுக்கும், ஒரே மாதிரியான சீருடை அணிய ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்தச் சீருடையைத் தேர்வு செய்துள்ளார். பச்சையும், மஞ்சளும் அந்தச் சீருடையின் வண்ணங்களாகும்.

இனிமேல் மற்ற மாநில அணிகளுடன் விளையாடும் போட்டிகளிலும், தேசிய விளையாட்டுப் போட்டிகளிலும், தமிழக வீரர்கள் - வீராங்கனைகள் பச்சை-மஞ்சள் நிறச் சீருடையுடன் செல் வார்கள்.



**கால்பந்துப் போட்டியில் பங்கேற்கும் அணிகளின் சார்பாக, இந்திய அணிக் காப்டன் திரு. சத்யன் உறுதிமொழி எடுக்கிறார்.**

மாண்புமிகு முதல்வர் தலைமையின் கீழ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, தமிழக விளையாட்டு அரங்குகள் அமைப்பின் துணைத் தலைவராக, அரும்பணி ஆற்றி இருக்கின்றார். தொடர்ந்து அலுவலர்களை ஊக்கப்படுத்தியதன் மூலமும், ஒவ்வொரு கட்டத்திலும் பணிகளை ஆய்வு செய் வதன் மூலமும், திட்டம் விரைவாக, முழுமையாக நிறைவு பெற உறுதுணை புரிந்துள்ளார்.

இதுபோன்று தலைமைச் செயலாளர் இந்தத் திட்ட வளர்ச்சியை மிகுந்த ஆர்வத்துடன், தமிழக அலுவலர்கள் அளவில் வலிவான தொடர்வினை உருவாக்கி பணிகள் துரிதமாக நடைபெற நல் லுதவி புரிந்துள்ளார்.

### அரசு மானியம்

இத்திட்டத்திற்கான நிதிவசதி ஏற்பாடுகளைப் பொறுத்தமட்டில் தமிழக அரசு மானியமாக ரூ.5 கோடியும், வழி வகைக் கடனாக ரூ.12.5 கோடியும் அளித்து மிகச் சிறந்த ஊக்கத்தினை அளித்து இருக்கிறது. மத்திய அரசு ரூ.2 கோடி மட்டும் கொடுத்து இருக்கிறது. அரசு நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தொழில் அதி பர்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து ஏறத் தாழ ரூ.8.5 கோடி நன்கொடையாகப் பெறப் பட்டுள்ளது.

இந்தியன் வங்கியிடமிருந்து பெரும் தொகை கடன் வசதியாகப் பெறப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதிவசதி அளிப்பதில், இந்தியன் வங்கி என்றென் றும் பாராட்டுக்குரிய உதவிகளைச் செய்திருக் கிறது. மிகுந்த ஆர்வத்துடனும், நல்ல உள்ளத்துட னும் இந்தத் திட்டத்திற்கான நிதி வசதியை அளித்த இந்தியன் வங்கியின் தலைவர் திரு. கோபால கிருஷ்ணன் அவர்கள் நமது நன்றிக்கு என்றும் உரியவர் ஆவார்.

அகில இந்தியக் கால்பந்து இணையத்தின் துணைத் தலைவர் திரு. சி.ஆர். விஸ்வநாதன் அவர்கள் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்ட காலத் திலிருந்து முழுமையாகத் தன்னை இணைத்துக் கொண்டு ஓய்வின்றி உழைத்து, இந்தத் திட்டம் நிறைவு பெறுவதில் சிறந்த பங்கினை ஆற்றியுள் ளது பாராட்டுக்குரியது.

# அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்

அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட்ட போது 142 நகரப் பேருந்துகளையும் 179 புற நகர் பேருந்துகளையும் மட்டுமே கொண்டிருந்தது; அவற்றுக்கென 8 பணிமனைகள் இருந்தன.

மெல்ல மெல்ல வளர்ந்து இக்கழகம் இப்போது 249 நகரப் பேருந்துகளையும் 256 புறநகர் பேருந்துகளையும் கொண்டுள்ளது. பேருந்துகளின் வளர்ச்சிக்கு ஏற்ப இக்கழகத்தின் பணியாளர்கள் எண்ணிக்கையும் 2,453 லிருந்து 3,925 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 1,472 பேர் புதிதாக வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இக்கழகம் துவக்கப்பட்டதிலிருந்து 107 நகர்ப்புறத் தடங்களும் 77 புறநகர்த் தடங்களும் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன.

மற்ற போக்குவரத்துக் கழகங்களைக் காட்டிலும் இக்கழகம் மூலம் பிற மாநிலங்களில் இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. கர்நாடக மாநிலத்தில் 85 பேருந்துகளையும் ஆந்திர மாநிலத்தில் 14 பேருந்துகளையும் பாண்டிச்சேரியில் 2 பேருந்துகளையும், அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் இலாபகரமாக இயக்கி வருகிறது. ஆந்திர மாநிலத்திலுள்ள புட்டபர்த்தி மற்றும் திருப்பதிக்கு இங்கிருந்து நாள் தோறும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தருமபுரியிலிருந்து பெங்களூருக்கு ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும் ஒரு பேருந்து வீதம் போய்வந்து கொண்டிருக்கின்றது.

நீண்டதூர வழித்தடங்களில் இயங்கும் ஒவ்வொரு பேருந்தும் ஆண்டுக்கு ஒருமுறை மாற்றம் செய்யப்பட்டு, வேறு புதிய பேருந்து இயக்கப்படுகிறது. பேருந்து வசதி பெற்றிராத 317 கிராமங்கள் புதியதாகப் பேருந்து வசதி பெற்றுள்ளன. இதனால் பயனடைந்த மக்கள் எண்ணிக்கை சுமார் 2.25 இலட்சம் ஆகும்.

அன்னை சத்யா பேருந்துகளில் நாள்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 4.3/4 இலட்சமாகும். தருமபுரி மாவட்ட வளர்ச்சியில் இக்கழகம் பெரும்பங்கு வகிக்கின்றது.

போக்குவரத்து நெரிசல் மிக்க இடங்களில் கூடுதல் பேருந்துகளும், சந்தை நாட்களில் கிராம மக்கள் தங்களின் விளைபொருட்களைக் கொண்டு வருவதற்கு வசதியாகச் சந்தைப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் அரூர், அஞ்செட்டி மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதிகளில் அடர்ந்த காடுகள் உள்ளன. அத்தகைய அடர்ந்த காடுகளில் வாழும் கிராமங்களுக்கும்கூட பேருந்து வசதி செய்யும் பொருட்டு சித்தேரி, வாச்சாத்தி, பெட்ட முகுளாளம், உரிகம், நாட்ரம்பாளையம் ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளன.



தமிழக அரசின் முக்கியக் குறிக்கோளான சாலை வசதி உருவாக்கப் பெற்று 1000 பேருக்குக் குறையாத மக்கள் தொகை உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளன. முடிந்தவரை சாலை வசதி பெற்றுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறான பேருந்து வசதிகளினால் பொதுமக்கள் உரிய நேரத்தில் தக்க மருத்துவ வசதியும், மாணவர்கள் கல்விக் கூடங்கள் செல்லவும் முடிகின்றன. அவர்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்கு இக்கழகம் இந்த வகையிலே பேருதவி புரிகின்றன.

இவைமட்டுமன்றி, 9,460 மாணவ, மாணவியர் 50 சதவிகித இலவசக் கட்டணச் சலுகை மூலம் பேருந்தில் பயணம் செய்கின்றனர். மற்றும் சுமார் 36,867 மாணவ மாணவியர் இலவசமாகத் தங்கள் கல்விக்கூடம் சென்று வருகின்றனர். உடல் ஊனமுற்ற 28 நபர்களுக்கும் கண்பார்வையிழந்த 14 நபர்களுக்கும் இலவசப் பயணச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

அந்தக் காலத் திரையுலகின் சிறந்த கர்நாடக இசைமேதை எம்.கே. தியாகராஜ பாகவதர் திருச்சிராப்பள்ளிக்காரர் என்பது உங்களுக்குத் தெரியும். இளமையில்- பெற்றோருடன் கோபித்துக்கொண்டு, தருமபுரிக்கு வந்து தான் அவர் நீண்டகாலம் தட்டார் தொழில் செய்து வந்தார். ஒருநாள், சுத்தியலால் கல்லாவில் தட்டித் தாளமிட்டபடி அவர் பாடிக்கொண்டிருந்ததைப் பார்த்த கடை முதலாளி, சீட்டுக் கிழித்து அனுப்பிவிட்டார்; தருமபுரியிலிருந்து சென்னைக்கு வந்த பிறகுதான் அவர் இசைமேதை!

அதேபோலத் தமிழ் மொழிக்காகப் போராடிய மொழிக் காவலர்கள் மற்றும் நாட்டு விடுதலைக்காகப் போராடிய தியாகிகள் 102 பேருக்கு இலவசப் பயணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. நிருபர்களுக்கு 18 இலவசப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

திருவிழாக் காலங்களில், பயணிகளின் நெரிசலைக் குறைக்கும் பொருட்டு ஒகேனக்கல், தீர்த்தமலை, டி. அம்மாபேட்டை, திருப்பதி, திருவண்ணாமலை ஆகிய இடங்களுக்குச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பயணிகளுக்கு வசதியாக ஆங்காங்கே நிழற்குடைகள் நிறுவப்படுகின்றன. பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்யும் பொருட்டு அவ்வப்போது ஓட்டுனர்களுக்குத் தக்க வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மற்ற கழகங்களுடன் ஒப்பிடும்போது விபத்தின் விகிதம் இக்கழகத்தில் மிகமிகக் குறைவாகும். எரிபொருள் சிக்கனத்தைக் கடைபிடிக்கப் பல வழிகள் இக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதனாலும் விபத்தின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. எரிபொருள் சிக்கனத்தைச் சிறப்பாகக் கடைப்பிடித்ததற்காக அகில இந்திய அளவில் மூன்றாம் பரிசைப் பெற்ற பெருமை இப்போக்குவரத்துக் கழகத்திற்கு உண்டு.

விபத்தின்றிப் பேருந்து ஓட்டியவர்களுக்காகக் கடந்த ஆண்டு மட்டும் ரூ.3,61,400 ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரியில் படித்துவரும் பணியாளர் குழந்தைகளுக்குத் தலா ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது. ஆண்டில் ஒருமுறை, இங்குள்ள பணியாளர்கள் குடும்பத்தோடு 4000 கி.மீ. வரை இலவசப் பயணம் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

மூக்குக் கண்ணாடிக்கும் உதவித் தொகை அளிக்கும் இப்போக்குவரத்துக் கழகத்தில், சிறந்த இசைக்குழு ஒன்றும் இருக்கிறது.

இவ்வாறாகத் தருமபுரி மாவட்ட மக்களின் தங்குதடையற்ற போக்குவரத்துப் பணியில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் ஆற்றிவரும் பணி போற்றத்தக்கதாக இருக்கின்றது.

- அ. கோமதி.



கூட்டம் குறைவான இடத்தில் வேகமாகவும், நெரிசலுள்ள இடத்தில் சீராகவும் பேருந்தைச் செலுத்தி சரியான நேரத்தையும், எரிபொருள் சிக்கனத்தையும், விபத்தில்லாப் பயணத்தையும் 14 ஆண்டுக் காலமாக நிகழ்த்தியமைக்காக ஊக்கத்தொகை பெற்ற அன்னை சத்யா போக்குவரத்துக் கழக ஓட்டுநர் திரு. ஆர். சுப்பிரமணியம்.

★ ★ ★



பொறுமையும் இனிய சுபாவமும் கொண்டு ஐந்தாண்டுக் காலமாக விபத்தின்றிப் பேருந்தைச் செலுத்தி ஊக்கத்தொகை பெற்ற அன்னை சத்யா போக்குவரத்துக் கழக ஓட்டுநர் திரு. முனிராஜ்.

★ ★ ★

# தேசிய ஒருமைப்பாட்டுக்கு நம் மாநிலம் செலுத்தும் மாபெரும் மரியாதை!

இன்று சர்வதேச அதிசயமாகக் கட்டி முடித்து திறக்கப்பட்டுள்ள ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம், இந்திய மண்ணில் நம்மால் படைக்கப்பட்ட ஒரு மாபெரும் நினைவுச் சின்னம். இன்று நாம் அடையும் இந்த மகிழ்ச்சி, இந்தப் பெருமிதம், எத்தனை நியாயமானது என்பதற்கு, இதை இன்று காணுகின்ற நீங்களும், நாளை காண வரப்போகின்ற, கோடிக்கணக்கான எதிர்காலத் தலைமுறையினருமே, சத்தியச் சாட்சிகள்!



### ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம் தொடக்க விழாவில்

## மாண்புமிகு முதல்வர் உரை

விளையாட்டரங்குகளின் அரசியாகத் திகழும் இந்த அரங்கம், நவ இந்தியாவின் சிற்பியான ஜவகர்லால் நேரு அவர்களுக்குத் தமிழகம் வழங்கும் அன்புக் காணிக்கை, தேசிய ஒருமைப்பாட்டுக்கு நம் மாநிலம் செலுத்தும் மாபெரும் மரியாதை.

எங்கே உடம்பு வலிமையோடு இருக்கிறதோ, அங்கு தான் உள்ளம் வலிமையோடிருக்கும், உயிர் ஆற்றலோடு உலா வரும் என்பது, நடைமுறை உண்மை. பண்டைத் தமிழகம், வீர விளையாட்டுகளின் தாயகம். வீரமும், வித்தகமும் அன்றைய தமிழ் இளைஞர்களின் உயிர் மூச்சு. பணியும் வியைாட்டும், செயல்திறனை அடிப்படையாகக் கொண்டவை என்றாலும், விளையாட்டிலே ஈர்ப்பும் இன்பமும் இயல்பாக இருப்பதால், வேலையிலே இருக்கின்ற சோர்வு, விளையாட்டிலே தெரிவது இல்லை. ‘உடலினை உறுதி செய்’ என்றார் மகாகவி பாரதி. உடலினை உறுதி செய்யக் களம் தேவை; கருவிகள் தேவ்வை; வாய்ப்பும் வசதியும் தேவை.

அவற்றை இன்றைய தலைமுறையினருக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும் வழங்கத்தான், இந்த வரலாற்றுப் புகழ்மிகு அரங்கம் நிர்மாணிக்கப்பட்டு, இன்று திறப்பு விழா, காண்கிறது.

விளையாட்டுத் துறைக்கு, புத்துணர்ச்சி ஊட்டும் புதிய முயற்சிக்கு, நடத்தப்பட்ட கால்கோள் நிகழ்ச்சியின் நிறைவே இந்த அரங்கம். தமிழகத்தின் பெருமைக்காகவும், இந்தியாவின் கீர்த்திக்காகவும், உலக நாடுகளின் பாராட்டுகளுக்காகவும் மட்டுமே, இது உருவாக்கப்பட்டதல்ல. விளையாட்டுக் கலையை,



அறிவியல் முயற்சியாக ஆக்குவதற்காக, கட்டி முடிக்கப்பட்ட அடையாளச் சின்னம் இது.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பெயரில் இருந்த, பழைய விளையாட்டு அரங்கம், இன்று முற்றிலும் மாற்றப்பட்டு, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் என்னும் பெயரில், நவீன கட்டடக் கலையின் அற்புதமாக எழுந்து நிற்கிறது. 40 கோடி ரூபாய் செலவிலே உருவாக்கப்பட்டிருக்கிற, இந்த அரங்கத்தின் நிர்மானப் பணிக்கு, மத்திய அரசு 2



கோடி ரூபாய் உதவி அளித்தது. தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர்கள், கொடை வள்ளல்கள், விளையாட்டு ஆர்வலர்கள் எல்லாம், தமிழ்நாடு விளையாட்டுக் கழகத்தின், இந்த விழுமிய முயற்சிக்கு, உற்றுழி உதவியும், உறு பொருள் கொடுத்தும், தங்கள் பங்கினைப் பாங்குற ஆற்றியிருக்கிறார்கள்.

எந்தவித அசம்பாவிதங்களும் நேராமல், இந்த அரங்கம், 7½ மாதத்தில் எழுந்துள்ளது என்பது, நமக்கு இரட்டிப்புப் பெருமிதத்தை வழங்குகிறது. இந்த அரங்கிற்கான திட்டம், வடிவமைப்பு, பொறியியல் நுட்பம், நிர்வாகம், செயல்பாடு இவை அத்தனையும் விரைவுக்கும், தீவிர வேகத்திற்கும், அசையாத எடுத்துக்காட்டுகள். இந்த மகத்தான அரங்கைப் பற்றி, மகிழத்தக்க இன்னொரு செய்தியும் உண்டு. இது முற்றிலும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்ட உன்னத அரங்கம். இன்று வரை விஞ்ஞானம் தந்த அனைத்து உத்திகளும், இதில் பயன்படுத்தப்பட்டிருப்பதால், புதுமைகளின் புதுமையாக இந்த அரங்கம் பொலிவதை, நீங்கள் பார்க்கிறீர்கள்.

எனவே தான், இந்த அரங்கைத் தொடங்கி வைக்க, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களைப் பாசத்துடன் அழைத்தோம். 27.12.1992 அன்று, மாண்புமிகு பிரதமர் அவர்கள் கன்னியாகுமரிக்கு வந்தபோது, இந்த விழாவுக்கு வருகைதந்து, இந்த விளையாட்டரங்கைத் திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். உடனே அவர்கள் ஒப்புக் கொண்டது மட்டுமல்லாமல், இந்த நிகழ்ச்சிக்காகப் பல்வேறு பணிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, வந்திருந்து, விளையாட்டரங்கைத் திறந்து வைத்து நம்மையும் தமிழகத்தையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறார்கள். பிரதமர் அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி.

இந்த இனிய விழாவிற்குத் தலைமை ஏற்று சிறப்பித்துக் கொடுத்துள்ள, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண்சிங் அவர்களுக்கும், என் நன்றி. இந்த நல்ல விழாவில், மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜூன் சிங் அவர்கள், விழா மலர் வெளியிடுவது, மலருக்கும், இந்த மகிழ்ச்சியான விழாவிற்கும் சிறப்பூட்டும் செயல். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்தச் சிறப்பு விழாவிலேயே, இன்னொரு சிறப்பும் அரங்கேற்றமாகிறது. அதுதான் ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான, 10-வது சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டி! இதற்கு முன்னர் இரண்டு முறை இசைவு கேட்கப்பட்ட போதும், இட வசதி இல்லாததால், தமிழகம் அந்த வாய்ப்பை இழந்தது.

சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன், இந்தப் போட்டிகளை நடத்த இசைவு கேட்கப்பட்ட போது, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், தமிழகத்தில் இம்முறை தவறாது, இந்தச் சர்வதேசப் போட்டி நடத்தப்பட வேண்டும் என்று, தைரியமாகத் தமிழக மக்களை நம்பி, இத்திட்டத்திற்கு இசைவளித்தேன். அதனை முழுமையாக நிறைவேற்றும் வகையில், ஒப்புதல் அளித்த 7½ மாதங்களில், இந்த விளையாட்டரங்கம் எழுந்து நின்று, கால்பந்தாட்டப் போட்டிக்கு, உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருப்பதைக் காணும் பொழுது, மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இந்த விளையாட்டு அரங்கத்தைக் கட்டுகிற இமாலயப் பணியில், எனக்குத் துணை நின்றவர்கள் பல



பேர். இந்த முயற்சியை, தங்களது மூச்சாகக் கருதி, உழைத்தவர்கள் நிறைய பேர் உண்டு. அவர்கள் அனைவரையும் இன்று நினைவு கூர்வது, எனது தலையாய கடமை யாகும். அவர்களுடன் சேர்ந்து இந்த மாபெரும் வெற்றி தரும் மகிழ்ச்சி யையும், பெருமிதத்தையும், பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நன்றி கூற விழைகிறேன்.

முதலில், விபத்தே இல்லாமல், உயிர்ச்சேதமின்றி, இந்தச் சீர்மிகு அரங்கை உருவாக்கிக் கொடுத்த லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனத் திற்கும், வடிவமைத்துக் கொடுத்த கட்டடக் கலை நிபுணர் திரு. சி.என். ராகவேந்திரா அவர்களுக்கும், இதை உருவாக்கக் காரணமாய் இருந்த 5,000 கட்டடத் தொழிலாளர்களுக் கும், என் மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

என் இதயத்தின் விருப்பத்தை எடுத்துரைத்த உடன், தேனீக்களாகத் திரிந்து பறந்து பணியாற்றி, என் விருப்பத்திற்கு செயல் வடிவம் தந்திருக்கின்ற அமைச்சர் பெருமக் கள் அனைவருக்கும், குறிப்பாக அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்களுக்கும், அழகான விழா மலரை குறுகிய காலத்தில் சிறப்புறத் தயாரித்துக் கொடுத்த அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களுக் கும், மற்றும் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் அவர் களுக்கும், தமிழ்நாடு கால்பந்தாட் டச் சங்கத் தலைவர் திரு. சி.ஆர். விஸ்வநாதன் அவர்களுக்கும், அரசுத் துறை அலுவலர்களுக்கும், என் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அன்பான அழைப்பினை ஏற்று, அற்புதக் கலை நிகழ்ச்சிகளை இந்தக் குறுகிய காலத்தில், இடை விடாத தீவிரப் பயிற்சிகள் மேற் கொண்டு, இன்று மிகச் சிறப்பாக நடத்திக்காட்ட உள்ள, பல்லாயிரம் பள்ளி மாணவ மாணவிகளுக்கும், காவல் துறையினருக்கும், மற்றும் இரயில்வே பாதுகாப்புப் படை யினருக்கும், இசை அமைத்துக் கொடுத்துள்ள திரு. சங்கர்-கணேஷ் அவர்களுக்கும், பள்ளிக் குழந்தை களை பயிற்றுவித்த ஆசிரியப் பெரு மக்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்து, அவர்களைப் பாராட் டக் கடமைப்பட்டுள்ளேன்.

சமாதானம், சகவாழ்வு ஆகிய தத்துவங்கள், இந்த விளையாட்டரங் கிலே விளைவாகி, மனித சமுதாயம் முழுவதற்கும், மகிழ்ச்சியையும் அமைதியையும் அளிக்கும், என்று நம்புகிறேன்.

It is a matter of great personal satisfaction to me that, today, a dream has become a reality. Jawaharlal Nehru Stadium which the Hon'ble Prime Minister of India has just now inaugurated, has fulfilled the aspirations of thousands of youth and children of our State, nay, of the whole country, who have longed to perform in an arena which is the best in Asia and one of the best in the world.

On two occasions, Tamil Nadu lost the opportunity to host the Jawaharlal Nehru Gold Cup Invitation International Foot Ball Tournament, simply because we did not have a stadium that would comply with international requirements. We had also lost the opportunity of hosting many other athletic events, sports and games in the past, owing to the absence of adequate facilities.

We now have a stadium that adheres to the standards for international competition. This is an achievement everyone in the country should be proud of. I am personally very, very happy, that I have played some part in helping to realise the vision of the sports loving people of our State.

Just about nine months ago, when it was mentioned to me, that Tamil Nadu had been offered the opportunity of hosting the 10th Jawaharlal Nehru Gold Cup Invitation International Foot Ball Tournament, and that even though the same opportunity had been offered twice earlier, the State could not avail itself of the offer, because a suitable stadium was not available. I decided that this time, we would accept the offer, and the youth of our State should have a stadium that the country could be proud of.

It was indeed a formidable challenge, daunting task. But we have succeeded. This majestic stadium has risen from the ground, in a short period of just seven and a half months. It is equipped with all the latest facilities available elsewhere in the world. It has unique features of construction which are not found in other stadia anywhere in the world.

## ஸ்டேடியத்தில் ஒரு புதுமை!

நேரு ஸ்டேடியத்தில் பாதுகாப்புக் காகச் சிறப்பு ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. தொலைக்காட்சிக் காமிராக்கள் மூலம் பாதுகாப்பு ஏற்பாடு களைக் கவனிப்பது ஒரு சிறப்பு அம்சம் ஆகும்.

ஸ்டேடியத்தின் முக்கியப் பகுதிகளில் 13 தொலைக்காட்சிக் காமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. சிறப்புக் கட்டுப் பாட்டு அறையில் அமர்ந்தபடி இந்தக் காமிராக்களின் உதவியுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிக்க இயலும். கட்டுப்பாட்டு அறையில், 5 தொலைக் காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

ஸ்டேடியத்தில் யாராவது சந்தேகப் படும் வகையில் நடமாடினால், காமிரா மூலம் பின் தொடர்ந்து சென்று அவரது நடவடிக்கைகளை, அந்த நபருக்குத் தெரியாமல் கண்காணிக்கவும் முடியும்! இந்தப் பாதுகாப்பு அமைப்பை, மராட்டிய மாநில எலக்ட்ரானிக் கழகம் தயாரித்துள் ளது. இதை நிறுவுவதற்கு ஆன மொத்தச் செலவு ரூ.55 இலட்சம்.

போட்டி முடிந்த அடுத்த 11 நிமிடங் களுக்குள் 40 ஆயிரம் பேர்களும் ஸ்டேடியத்திலிருந்து வெளியேறிவிட முடியும். மைதானத்துக்குத் தேவைப் பட்டால், ஆம்புலன்ஸ் மற்றும் தீய ணைப்பு வண்டிகள் செல்லத் தனியே இரு வாசல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்டேடியத்தில் நிகழ்ச்சிகள் இல்லாத போது, அத்துமீறி யாரும் நுழைய முடியாது. நுழைந்தால், அபாய ஒலி அலறும்!

Its design and architecture, its facilities, both on the field and in the stands are such, that one can say that given the will, it is possible to produce institutions of the highest quality in our country, and we do not have to go abroad for training or for assistance. It was mentioned to me a few weeks ago, that a group of Canadian Engineers visited the Stadium and expressed admiraiton, not only for the quality of work done, but also for the speed with which it had been accomplished. There is no doubt that the construction of the Jawaharlal Nehru Stadium will be a landmark in the history of Sports and Games in our Country.

It is most appropriate that the Stadium should have been inaugurated by the Hon'ble Prime Minister of India, Thiru P.V. Narasimha Rao, whose sense of history is as deep and profound, as his commitment to the future of the youth of our nation. On this historic occasion, I deem it my foremost duty to convey my sincere gratitude, to everyone who participated in the exhilarating process of designing and building this magnificent edifice, which is truly dedicated to the youth of our nation.

It is my earnest desire that this Stadium should inspire hundreds of young Indian men and women, to put forth their best, and to rise to pinnacles of glory in the arena of international sports and games. We have always known that there is no dearth of sports talent in our country. We have produced outstanding sports personalities, comparable to the best in the world, but we have been woefully lacking in the required facilities, equipment and training.

I expect the Jawaharlal Nehru Stadium to fill the gap in all these areas, so that our young men and women do not have to look for them outside our country. A stadium is not merely an arena or a structure where games are played. It is symbolic of the brotherhood of man. Sports and Games bring people together. They help to mould the character of the youth. They provide a constructive channel through which young people can find a release for their abundant overflowing energy and restlessness.

**சென்னை மாநகரில் நடைபெறும், 10-வது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை சர்வதேச அழைப்புக் கால்பந்துப் போட்டி மிகச் சிறப்பாக நடைபெற, 27 பேர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் தலைவர், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆவார்.**

They inspire them to great feats of endurance which are tributes to the spirit of man. For over 2,500 years, ever since the first Olympic Games were played, sportsmen and women have sought to excel each other, in a spirit of friendly competition. In this troubled world, more than ever before, sports and games, however competitive they are, act as a soothing balm of peace and harmony and fill us with a spirit of unity and make us realise the universal brotherhood of man.

I am sure that the construction of the Jawaharlal Nehru Stadium will be the beginning of a new era, in the development of sports and games in our country. Jawaharlal Nehru was the architect of modern India. He was a great visionary who foresaw that the future of the country lay in the hands of the youth and gave them all encouragement. The Stadium is aptly named after him.

I am sure that the Jawaharlal Nehru Stadium will inspire generations of Indian sportsmen and women to perform superlative feats. Thousands of children have gathered here today. They will shortly be presenting a magnificent, spectacular display of physical skills and folk arts. I wish to thank each and every one of them and express the hope that at least a good number of them will come back to the Stadium, to improve their sporting and athletic prowess, and to perform feats of glory and earn encomiums in National and International events.

Thousands of construction labourers have toiled unceasingly and have completed the stadium in a record time of seven and a half months. I cannot adequately express in words my deep gratitude to all of them.

The Hon'ble Prime Minister of India has found some time to be with us on this most happy occasion, inspite of the fact that crisis after crisis has been confronting him in recent times and it has required all his sagacity and wisdom to resolve them.

On behalf of the people of Tamil Nadu and on my own behalf, I wish to offer my sincere thanks to the Prime Minister for his kind presence today. My thanks are due to His Excellency, the Governor of Tamil Nadu, Dr. Bhishma Narain Singh, who is presiding over this function. I am grateful to him for his consistent support in all our development efforts.

My thanks are also due to Shri Arjun Singh, the Hon'ble Union Minister for Human Resource Development, for releasing the commemorative souvenir. He has also helped us with a financial grant of 2 crore rupees from the Central Government, towards the construction of this Stadium. Over and above that, his interest in the welfare of our youth is well known. I am sure he will continue to support us in all our efforts in this regard.

இன்று பெருந்திரளாக வந்து, உங்கள் அன்புச் சகோதரியின் எந்தச் செயலுக்கும் உடனிருந்து, ஊக்கமும் உற்சாகமும் வழங்கும் உங்கள் அனைவருக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# மின்துறையின் முற்போக்குத் திட்டங்கள்

## மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன்







நாட்டின் மின்துறை பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க இம்மாநாட்டைக் கூட்டியமைக்காக மாண்புமிகு மின்துறை இணை அமைச்சர் அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பம்பாயில் உற்பத்தியாகும் எரிவாயுவைத் தென் மாநிலங்கள் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் தென்னிந்திய எரிவாயு இணைப்பு அமைப்பின் முக்கியத்துவத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் 1985-ஆம் ஆண்டு முதல் உயர் அழுத்த மின் தொழிற்சாலைகள் மீது இருந்து வந்த தடைகள் அனைத்தும் முதன்முறையாக நீக்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு அனல் மின் உற்பத்தி நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்தது. மூன்று நிலையங்களின் மின்சுமை அளவு 63 சதவிகிதமாக இருந்தது. இது அகில இந்தியக் குறியீடான 56 சதவிகிதத்தை விட உயர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. தூத்துக்குடி அனல் மின் உற்பத்தி நிலையம் உற்பத்தித் திறனுக்கான மத்திய அரசின் சிறப்பு விருதினை இதுவரை ஆறு முறை பெற்றுள்ளது. நிலக்கரி சீராகக் கிடைக்குமானால் இன்னும் அதிகளவு மின் உற்பத்தியை நம்மால் பெருக்க முடியும்.

மத்திய அரசின் புதிய தொழிற் கொள்கைக்கு இணங்கவும், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வகுத்துத் தந்த

தொழிற் திட்டங்களுக்கு ஏற்பவும், மின் உற்பத்தியில் தனியார் பங்கேற்கும் வகையில், டிசம்பர் திங்களில் இதில் தொழில் முனைவோர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு மாநிலத்தில் முதலீடுகள் செய்யக் கூடிய திட்டங்களுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டன. ரூ.4800 கோடி மூலதனத்தில் மூன்று மின் திட்டங்கள் உட்பட மொத்தம் 22 புதிய திட்டங்கள் மொத்தம் ரூ.8,500 கோடி செலவில் விரைவில் தமிழகத்தில் தொடங்கப்பட உள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மின் விநியோகத்தில் தனியார் பங்கே கிடையாது. ஐந்து நகராட்சி, மூன்று கிராம மின் கூட்டுறவுச் சங்கம் தவிர வேறு விநியோக அமைப்பே கிடையாது. இதில் நகராட்சிகள் மின் விநியோகத்தை மின் வாரியத்திற்குத் திருப்பித் தருவதற்குத் தயாராக உள்ளது. இந்தச் சூழ்நிலையில் மின் உற்பத்தியைத் தனியாரிடம் ஒப்படைக்கும் எண்ணம் விரைவில் செயல் வடிவம் பெறும் எனத் தோன்றவில்லை. நிலம், நீர், போக்குவரத்து, போன்ற அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டப் பிறகு, தனியார் இதில் பங்கேற்க முனையலாம்.

1991-92-இல் மின் விநியோகத்தில் ஏற்பட்ட நட்டம் 18.35 சதவிகிதம் ஆகும். மாநிலத்தில் 13 இலட்சம் விவசாயப் பம்பு செட்டுகளும், அனைத்துக் கிராமங்களில் தெருவிளக்குகளும், இருப்பதால் இந்த நட்டத்தைக் குறைக்க இயலவில்லை. இந்த நட்டத்தைக் குறைக்க இயன்ற அளவு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின் வாரியம் இதற்கெனத் தீட்டியுள்ள செயல் திட்டத்தை அமல்படுத்த ரூ.500 கோடி தேவைப்படுகிறது. எட்டாவது திட்டத்தின் இறுதியில் மின் விநியோகத்தில் நட்டம் 2 சதவிகிதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை அனல் மின் திட்டத்திற்கு, 150 மில்லியன் டாலர்களும், சென்னை நகருக்கு மின் விநியோகம் செய்ய 200 மில்லியன் டாலர்களும், ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) வழங்க உள்ளது. இப்பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. இதுதவிர, Overseas Reono Co-operative Fund, பேசின் பிரிட்ஜ் திட்டத்திற்கு 11,450 மில்லியன் யென் (Yen)களை ஒதுக்கியுள்ளது.

எரிபொருளுக்காகவும், மத்திய நிலையங்களுக்காகவும், 73 சதவிகித வருவாய் செலவிடப்படுகிறது. இருப்பினும் தமிழ்நாடு மின் வாரியம் 1990-91-இல் ரூ.30.55 கோடியும், 1991-92-இல் ரூ.119.24 கோடியும் நிதி ஆதாரங்களைத் திரட்டி உள்ளது. 1992-93-இல் இது ரூ.150.11 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு இரண்டு முறை (1.9.91 மற்றும் 1.2.92) மின்கட்டணத்தை உயர்த்தியுள்ளது. இதனால் ஆண்டுக்கு கூடுதலாக ரூ.379.34 கோடி கிடைக்கும். தேசிய அனல் மின் கழகம் (National Therminal Power Corporation) நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் (Neyveli Lignite Corporation) அணு மின்நிலையம் (Nuclear Power Corporation) ஆகியவைகளுக்கு இரண்டு மாதக் கட்டணங்கள் மட்டுமே பாக்கியுள்ளது. அவைகளை விரைவில் தீர்க்க தமிழ்நாடு மின் வாரியம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. மின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி, LNG ஆகியவைகளுக்கு அனைத்து வரிகளிலிருந்தும் விலக்கு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மின் துறையின் கூடுதல் திட்டங்களுக்குக் கூடுதல் மூலதனங்களைக் கொண்டுவர, எங்கள் அன்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் முற்போக்கான தலைமையின் கீழ் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இம் மாநாட்டில் பங்குகொண்டு என் கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த மாண்புமிகு மின்துறை இணை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(புது டெல்லியில் ஜனவரித் திங்கள் 8,9 தேதிகளில் நடைபெற்ற மின் சாரத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து).**

## சுவைத்துப் பார்ப்போம்

**Account Payee only** — **கணக்குடையார்க்கு மட்டும்**
**Blood group** — **குருதி வகை**
**Cancellation** — **செயல் நீக்கம்**
**Cancelled** — **செயல்நீக்கம் செய்யப்பட்டது**
**Convalescence** — **தேறுநிலை, தேறிவரும் நிலை**
**Duty officer** — **பணி அலுவலர், நாட்பணி அலுவலர்**
**Evolution** — **படிமுறை வளர்ச்சி**
**Fair copy** — **தெளிவு நகல்**
**Flow chart** — **செல்வழி அட்டவணை**
**Freshness** — **புதுமலர்ச்சி**
**Human Values** — **மனித மாண்புகள்**
**Leap year** — **சேர்ப்பு நாள் ஆண்டு, சேர்ப்பு ஆண்டு**
**Magnum opus** — **ஒப்பிலாப் படைப்பு, தலை சிறந்த படைப்பு**
**Make-up** — **மேன்மைப்படுத்து, ஒப்பனை செய்**
**Mail transfer** — **அஞ்சல் முறை மாற்றல்**
**Making Charges** — **செய் கூலி**
**Medium** — **ஊடகம்**
**Mesmerism** — **மனவசியம்**
**Message** — **செய்தி, மேன்மைச் செய்தி**
**Scam** — **கயமை, கயமைச் செயல், கயச் செயல்**
**Silent worker** — **அமைதிப் பணியாளர்**
**Stereo broadcast** — **பிரிநிலை ஒலிபரப்பு**
**Sun stroke** — **வெப்பத்தாக்கு**
**Team spirit** — **ஒருமையுணர்வு**
**Teen age** — **பதின் அகவை**

**—நன்றி: முத்தமிழ் ஆய்வுமன்ற மலர்**

# இராயக்கோட்டை



தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த இராயக்கோட்டை குறிப்பிடத்தக்க சரித்திரச் சிறப்பைக் கொண்டிருக்கிறது. கிருஷ்ணகிரியிலிருந்து பெங்களூர் செல்லும் இந்த ஊர்க் காவல் நிலையத்தில், தனி மேடைகட்டி பழங்காலப் பீரங்கி ஒன்றை வைத்திருக்கிறார்கள். காவல் நிலையத்திற்கு எதிரே சிறிது தூரத்தில் தலைதூக்கி நிற்கும் தனி மலை ஒன்றின்மேல் கோட்டைக் கொத்தளங்கள் காணப்படுகின்றன.

இந்த இரண்டுமே திப்பு சுல்தான் ஆட்சிக் காலத்தவையாகும்.

1983-இல், வட பிராந்திய டி.ஐ.ஜி யாக இருந்த திரு. தேவாரம், இராயக்கோட்டைக்கு 2 கி.மீ. தூரத்தில் உள்ள தோர் கிராமத்தில் புதைந்துகிடந்த 3 பீரங்கிகளை வெளிக்கொணரச் செய்திருக்கிறார். அதில் ஒன்றே இராயக்கோட்டை காவல் நிலையத்தில் இருப்பதாகும். இதை அங்கே கொண்டுவந்து நிறுவியவர், அப்போது தருமபுரி மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளராக இருந்த திரு. கே.விஜயகுமார்.

மலைமீதுள்ள கோட்டை இப்போது மத்தியத் தொல்பொருள் பாதுகாப்புத் துறையின் பொறுப்பிலிருக்கிறது.

அங்குள்ள கல்வெட்டுகளெல்லாம் கன்னட மொழியில் உள்ளன; இக்கோட்டை, கைலாச மன்னரால் கட்டப்பட்டதாக அதில் கூறப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பிறகு - விஜயநகர மன்னர்கள், ஐதர்அலி, திப்புசுல்தான் ஆகியோர் அங்கிருந்து அரசாண்டிருக்கிறார்கள்.

1791-இல், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி கவர்னராக இருந்த காரன்வாலிஸ் என்பான் நடத்திய போரில், திப்பு தோற்றான்; இராயக்கோட்டை ஆங்கிலேயர் வசமாயிற்று.

—ஆர். மருதமுத்து



## இதுதான் ஒசூர்

'ஒசூர்' என்ற பெயர் கர்நாடகத்தின் தாக்கமாகும்; 'ஒச' என்றால் கன்னடத்தில் புதிய என்று பொருள். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஊர் என்பதாலேயே அது ஒசூர். கன்னடத்தில், 'அளே' என்றால் பழசு என்று பொருள். 'அளே தருமபுரி' என்பது பழைய தருமபுரி.

தகடூர் நாடு, சோழர் ஆட்சிக்கு முன், பல நாடுகளாகச் சிதறிக் கிடந்தது; சோழர்கள் இப்பகுதியை முழுமையாகக் கைப்பற்றிய பிறகுதான், சோழநாட்டில் உள்ளது போல மண்டலங்களாகவும், நாடுகளாகவும் இதைப் பிரித்து வகைப் படுத்தினார்கள்.

அப்போதுதான், தகடூர் பகுதி நிகரிலி சோழ மண்டலம் என்று பெயர் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. முதலாம் இராசேந்திர சோழன் காலக் கல்வெட்டில் 'நுளம்ப பாடியாகிய நிகரிலி சோழ மண்டலம்' என்று வருகிறது.

இதுவே கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஒசூர் பகுதியும் கர்னாடகத்தின் ஒரு பகுதியும் சேர்ந்து 'முடிகொண்ட சோழ மண்டலம்' என்று பெயர் பெற்றது. ஒசூர் அந்நாளில் முரசு நாடு எனப்பட்டது.



Phone: 52201, 52251, 51899 Salem
Cable: CARE JAYAMTRADE, Salem

# M/s. JAYAM FOOD PROCESSING INDUSTRIES

18th, K.M. Dharmapuri - Pennagaram Road, S/F, No. 7/11 and 13/1
NALLANUR-636 813 (Konangihalli Post)
Near Thalapallam, Pennagaram Tk.,
Dharmapuri Dt.

*Registered Office:*
352, Suramangalam Main Road,
SALEM-636 009.

---



## நல்வாழ்த்துக்களுடன்

பி. நல்லதம்பி
லஷ்மி சேம்பர் பிரிக்ஸ்
சின்னம்பள்ளி
பென்னாகரம் வட்டம்

மற்றும்
பெரும்பாலை கிராம தானிய
சில்லறை வணிகர்கள்

எங்களிடம் தரமான
சேம்பர் செங்கற்கள் கிடைக்கும்.

# ஒசூரில் சிப்காட் தொழில் இணையம்

வளர்ச்சியில் முதல்இடத்தையும்வரிசையில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ள சிப்காட் தொழில் இணையம் ஒசூர் தொழில் இணையம் ஆகும். 1973-இல் ஆரம்பிக்கப்பட்ட இராணிப்பேட்டைத் தொழில் இணையத்தை அடுத்து 1974-இல் தொடங்கப்பட்ட ஒசூர் தொழில் இணையம் வேகமாக வளர்ந்து தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள தொழில் இணையங்களுக்கெல்லாம் ஓர் முன் மாதிரியாக விளங்கி வருகிறது.

இங்கு தொழில் இணையத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலம் 1235 ஏக்கர். இதில் 1090 ஏக்கர் நிலம் 147 தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள நிலம், இணையத்தின் அடிப்படை வசதிகளுக்கென ஒதுக்கப்பட்டது. நிலம் பெற்ற 147 தொழில் நிறுவனங்களில் 75 தொழில் நிறுவனங்கள் நடுத்தர மற்றும் பெரிய தொழில் பிரிவையும் மற்ற 72 தொழில் நிறுவனங்கள் சிறிய தொழில் பிரிவையும் சார்ந்ததாகும். இவற்றுள் 102 தொழில் நிறுவனங்கள் வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. உற்பத்தியைத் தொடங்கியுள்ள 102 தொழில் நிறுவனங்கள் செய்துள்ள முதலீடு ரூ.187 கோடி. இதன்மூலம் வேலைவாய்ப்புப் பெற்றோர் 16,000 பேர்; நிலம் பெற்ற 147 நிறுவனங்களும் தங்கள் தொழிலைத் தொடங்கும்போது அவை கூட்டாகச் செய்யும் முதலீடு ரூ.257 கோடியாகவும், வேலைவாய்ப்புப் பயன்பெறுவோர் எண்ணிக்கை 20,000 ஆகவும் உயரும்.

இவை தவிர, சிப்காட் தொழில் வளாகத்தைச் சுற்றி 30 பெரிய தொழிற்சாலைகளும், 11 நடுத்தரத் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. அவைகள் செய்துள்ள முதலீடு ரூ.30 கோடி. இத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் 8000 நபர்கள்.

சிட்கோ நிறுவனத்தின் மூலம் 150 சிறு தொழிற்கூடங்கள் சிப்காட் வளாகத்திலேயே அமையப்பெற்றுள்ளன. அவற்றின் கூட்டு முதலீடு ரூ.20 கோடி ஆகும். இவற்றின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றோர் சுமார் 3,500 நபர்கள். இவ்விணையத்தின் மேம்பாட்டிற்காக சிப்காட் இதுவரை ரூ.444.38 இலட்சம் செலவு செய்துள்ளது.

பெரிய தொழிற்சாலைகளில் அசோக் லேலண்ட், டைடான் கடிகாரம், டிவிஎஸ் மொபெட், இந்தியன் டுபாக்கோ, பிரிமியர் மில்ஸ், கார்போரண்டம், பழம் பதனிடும் மையம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.




இவ்விணையத்தில் பின்கண்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**சாலை:**

15 கி.மீ. தூரத்துக்கு தார்ச் சாலை போடப்பட்டுள்ளது.

**தண்ணீர்:** நிலத்தடி நீரையே முழுவதுமாக நம்பியுள்ள இவ்விணையத்தில் 34 ஆழ்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சுமார் 7 முதல் 8 இலட்சம் காலன் வரை நாளொன்றுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இத்தண்ணீர், உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவையை மட்டுமே நிறைவு செய்யப் போதுமானதாக உள்ளது. தண்ணீர் வழங்குவதற்காக 14.5 கி.மீ. வரை நிலத்தடிக் குழாய்கள் போடப்பட்டுள்ளன. தொடர்ந்து சில ஆண்டுகள் வான் பொய்த்ததன் காரணமாக நிலத்தடி நீர் குறையத் தொடங்கி, இதன் விளைவாக இவ்விணையத்தின்

தண்ணீர்த் தேவை முழுவதுமாகச் சமாளிக்க இயலவில்லை. நிலத்தடி நீர் குறையத் தொடங்கியுள்ளதாலும், ஒசூர் தொழில் வளாகத்தில் தொழிற்சாலைகள் விரிவாக்கம் செய்யப்படும்போது தேவைப் படும் அதிக அளவு நீரைக் கருத்தில் கொண்டு, இவ்விணையத்திற்கு அருகில் உள்ள கெலவரப்பள்ளி, நீர்த்தேக்கத் திலிருந்து தண்ணீர் கொண்டுவரத் திட்ட மிடப்பட்டு பணிகள் துரிதமாக நடை பெற்று வருகின்றன.

**கழிவு நீர் வெளியேற்றம்**

18 கி.மீ. அளவுக்கு நிலத்தடிக் கழிவு நீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீர் இக்குழாய்களின் மூலம் கொண்டு சென்று இதற்கென அமைக்கப்பட்டுள்ள 11 ஆக்ஸிடேஷன் குளங்களில் சேர்க்கப் பட்டு அங்கிருந்து வெளியேற்றப்படுகிறது.

**மின்சாரம்**

இவ்வளாகத்தின் மின்சாரத் தேவைக்கு, சிப்காட் வளாகத்திலே சிப்காட் அளித் துள்ள 10 ஏக்கர் நிலத்தில் 110/33/11 கேவி. திறன்கொண்ட ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, சிப்காட் வளாகத்திற்கு வெளியே ஒவ்வொன்றும் 110/33/11 கே.வி.திறன் (10 எம்.வி.ஏ.) கொண்ட இரண்டு துணை மின் நிலையங்களும் உள்ளன. இவற்றிலிருந்தும் சிப்காட் வளாக தொழிற் சாலைகள் மின்சாரம் பெறுகின்றன.

**தீயணைப்பு நிலையம்**

347 ச.மீ. பரப்பளவில் சிப்காட் அமைத்துக் கொடுத்துள்ள கட்டடத்தில் ஓர் தீயணைப்பு ஊர்தியுடன் தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

இது தவிர, சிப்காட் வளாகத்தில் ஒரு காவல் நிலையம், ஒரு முதல் உதவி நிலையம், ஒரு அஞ்சல் நிலையம் ஆகிய வையும் செயல்பட்டு வருகின்றன.

**தொலைபேசி நிலையம்**

சிப்காட் அளித்துள்ள 4.91 ஏக்கர் நிலத்தில் 400 இணைப்புகள் கொண்ட தான் இயங்கித் தொலைபேசி நிலையம் ஒன்று 1980 முதல் செயல்பட்டு வரு கிறது. பெருகிவரும் இத்தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் சிப்காட், இங்கு ஒரு நவீன தானியங்கி மின்னணுத் தொடர்பகம் (NEAX) நிறுவ ஏற்பாடு செய்து, இதற்காகத் தொலைபேசித் துறைக்கு ரூ.12 இலட்சம் முன் பணம் செலுத்தியிருக்கிறது. தவிரவும், 'டெலக்ஸ்' வசதிக்காக ரூ.2 இலட்சம் பணமும் அளிக்கப்பட்டுள்ளது. பல நவீன வசதி களுடன் 600 இணைப்புகள் கொண்ட இம்மின்னணுத் தொலைபேசி நிலையம் உடனே அமைக்கப்பட வேண்டிய அவசி யத்தைக் கருதி சிப்காட், தனது அலுவல கத்திலேயே ஓர் பகுதியை அளித்துள்ளது.

**தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை**

சிப்காட், இம்மருத்துவமனைக்காக ஏழு ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. தற்சமயம் அங்கு ஓர் புற நோயாளிகள் மருத்துவமனை அமைய ஏற்பாடுகள் நடைபெறுகிறது. 50 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் மருத்துவ மனைக் கட்டடம் கட்டுமானப் பணி முடி வடையும் தறுவாயில் உள்ளது.

**வீட்டுவசதி**

சிப்காட் 30 ஏக்கர் நிலப்பரப்பில் 288 வீட்டுமனைகள் கொண்ட ஓர் வீட்டுவசதி வளாகம் அமைத்துள்ளது. இது தவிர 5 ஏக்கர் நிலத்தில் 10 உயர் வருவாய்ப் பிரிவு வீடுகள், 36 நடுத்தர வருவாய்ப் பிரிவு வீடுகள் அமைத்துள் ளது. பொருளாதாரத்தில் நலிந்துள்ள தொழிலாளர்களின் நலன் கருதி 288 அடுக்கு வீடுகளும் சிப்காட் கட்டியுள்ளது. இவையாவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துக்குச் சிப்காட் 25 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. இதில் வீட்டுவசதி வாரியம் 52 உயர்தர வருமானப் பரிவு வீடுகளும், 132 நடுத் தர வருமானப் பரிவு வீடுகளும் கட்டி யுள்ளது.

இதைத் தவிர, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 6 இடங்களில் 1979 அடுக்கு வீடுகள் கட்டியுள்ளது. மேலும், சுமார் 1095 வீடுகள் கட்டும் திட்டமும் அவ் வாரியத்திடம் உள்ளது.

**பண்டக சாலை**

சிப்காட் அளித்துள்ள நிலத்தில் மத்தியப் பண்டக சாலைக் கழகம் 5000 டன் அளவுள்ள ஓர் பண்டக சாலை அமைத்துள்ளது. மாநிலப் பண்டக சாலைக் கழகமும் சிப்காட்டிடம் 5.85 ஏக்கர் நிலம் பெற்றுள்ளது. பண்டக சாலைக் கட்டடம் கட்டத் தொடக்க வேலைகள் நடைபெறுகின்றன.

**சிற்றுண்டிச் சாலை**

சிப்காட் ஓர் சிற்றுண்டிச் சாலை அமைத்து, அதைக் குத்தகை முறையில் தனியாருக்கு வழங்கியிருக்கிறது.

**வணிக வளாகம்**

இரண்டு அடுக்கு கொண்ட 24 கடைகள் உள்ள ஓர் வணிக வளாகம்



பருகூரில் செயல்பட்டுவரும் கூட்டுறவு தொழில் பயிற்சி நிலையம்.

## வள்ளல்கள் வாழ்ந்த பூமி

சங்க காலத்தில் தகடூராக இருந்த
இப்போதைய தருமபுரியிலேதான் -
அதியன், காரி, ஓரி ஆகிய
வள்ளல்கள் வாழ்ந்திருக்கிறார்கள்;
அவர்கள் வாழ்வு எப்படி
முடிந்தது தெரியுமோ?
ஒருவருக்கொருவர் சண்டை
போட்டுக்கொண்டு
மாண்டுபோயிருக்கிறார்கள்,
வல்லமை பொருந்திய அந்த
வள்ளல்கள்!

இங்கு அமைத்துள்ளது. இவற்றில் சில விற்பனை செய்யப்பட்டுள்ளன. சில தவணை முறையிலும் மற்றவை மாத வாடகையிலும் அளிக்கப்பட்டுள்ளன.

சிப்காட் தொழில் இணையத்திற்குக் கெலவரப்பள்ளி நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம்.

1977-ஆம் ஆண்டு சிப்காட் தொழில் வளாகத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் பெண்ணையாறு ஆற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி என்ற இடத்தில் ஓர் அணை கட்ட அரசு ஆணையிட்டது. இத்திட்டத்தின் கீழ் அணையின் ஆயக் கட்டுப் பகுதியில் சுமார் 8000 ஏக்கர் நிலம் சாகுபடியின் கீழ் கொண்டு வரவும், ஓசூர் நகரத்திற்கும், சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் குடிநர் வசதி செய்யவும், சிப்காட் தொழில் இணையங்களின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 10 கோடி ரூபாய்.

இங்கிருந்து பெறப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள 6 எம்.ஜி.டி. தண்ணீரில் குடிநீர் உபயோகத்திற்காக 4 எம்.ஜி.டி. -யும், சிப்காட் தொழில் இணையங்களுக் காக 2 எம்.ஜி.டி.-யும் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது. அணையைப் பொதுப்பணித்துறை கட்டி முடித்துள்ளது.

**ஓசூர் இரண்டாவது தொழில் இணையம்**

ஓசூர் - கிருஷ்ணகிரி சாலையில் ஓசூருக்கு 5 கி.மீ. தொலைவில் சிப்காட் தன் இரண்டாவது இணையத்தை அமைக்க 457 ஏக்கர் நிலம் கையகப் படுத்தியுள்ளது. இங்குள்ள தட்பவெப்ப நிலை மின்னணுத் தொழில்களுக்குச் சாதகமாக உள்ளதால், இதை ஓர் மின்னணு இணையமாக மேம்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மேம்பாட்டுச் செலவு ரூ.863 இலட்சம் ஆகும்.

இங்குக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 10 ஏக்கர் நிலம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.100 வீதம் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் ஒரு பள்ளிக்காக அளிக்கப்பட்டது. அதில் சுமார் 20 இலட்சம் செலவில் ஒரு பள்ளிக் கட்டடம் அமையப் பெற்றுள்ளது.

இந்த இரண்டாவது தொழில் இணையத்தில் அசோக் லேலண்ட் நிறுவனத்தின் துணைப் பிரிவும், டைட்டான் ஜூவல்லரி என்ற ஒரு புதிய பிரிவும் வரவிருக்கின்றன.

**முதல் இணையத்தின் உடனடித் தேவைகள் பற்றிய கோரிக்கைகள்**

தற்சமயம் தொழிற்சாலைகள் ஆய்வாளர் (மேல் மட்டத்தில்) அலுவலகம் சேலத்திலும், தர்மபுரியிலும் இயங்கி வருகிறது. இங்குள்ள தொழிற்சாலைகள் தங்கள் பணிகளை நிறைவேற்ற அந்த இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதால் காலமும் பணமும் வீணாகிறது. ஓசூரிலேயே இவ்வலுவலகம் செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும், சேலம், தர்மபுரி ஆகிய இடங்களில் இருப்பதுபோல ஓசூரிலும் ஒரு தொழிலாளர் நல அலுவலகம் (Labour Welfare Office) அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் பரிசீலனையில் உள்ளன.

— மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு
அலுவலர்
தருமபுரி.



பலவகை மன்னர்களின் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது தருமபுரி மாவட்டப் பகுதி; ஆகவே, பெரும்பாலான பகுதி மக்கள் பல மொழிகளிலும் பேசுவதைஅங்கேகாணலாம். ஓசூரில் ஒரு விந்தை- ஒரே வளாகத்திற்குள்ளேயே தமிழ், உருது, தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளுக் கெனத் தனித்தனிப் பாடசாலைகள் இயங்குவதை நாம் பார்க்கலாம்!

கூட்டுறவே
நாட்டுயர்வு



சிறு குடும்பம்
செல்வக் குடும்பம்

# தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை
## பாலக்கோடு

### கரும்பில் அதிகம் மகசூல் பெற சிறந்த வழிமுறைகள்

1. உருவத்திற்கு ஏற்ற உடைகள் போல்
பருவத்திற்கு ஏற்ற ரகங்கள் பயிரிடுவீர்.
2. நாற்றங்கால் கரணைகளே நல்ல விளைச்சல் தரும்.
3. கரணைகளை அழுகல் நோயிலிருந்து காக்க முறையான விதை நேர்த்தி செய்வீர்.
4. பக்கவாட்டில் பருக்கள் நனைத்து நட்டால் பழுதற்று முளைக்கும்.
5. ஈரம் காக்க சோகை பரப்புவீர்;கோடையில் கிணற்றிலுள்ள நீர்
அளவுக்குக் கரும்பு பயிரிடுவீர்.
6. தூக்கி மண் அணைத்தால் தாக்கும் காற்றிலும் - கரும்பு தள்ளாடாமல் தலை நிமிர்ந்து நிற்கும்.
7. சிக்கன உரத்துக்குச் சிறந்தது உயிர் உரம் 'கறுப்பு யூரியா'வே.
8. உர விரயம் தவிர்க்க வழி வகுக்கும் குழிமுறை உரம்.
9. அடியோடு வெட்டினால் அதிகம் மகசூல்-அதற்கு உண்டு கைக்கோடாரி.
10. மறுதாம்பில் கட்டை சீவுதல் தூருக்கு நன்றாம்;கங்கு அறுத்தல் வேருக்கு நான்றாம்.

**எம்.பி. ஆபூர்வகுமார்**
**தனி அலுவலர்**



# திருவள்ளுவர் திருநாள்

உலகப் பொது மறையாம் திருக்குறள் நெறிபரப்பும் பெருநோக்கில் தைத் திங்கள் இரண்டாம் நாளில், திருவள்ளுவர் திருநாளைத் தமிழ்நாடு அரசு சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

தமிழக அரசு சார்பில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் 15.1.93 அன்று திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது. திருவள்ளுவர் திருநாள் விழா, புலவர் சொ. காளியப்பன் அவர்களின் திருக்குறள் எண் கவனக நிகழ்ச்சியோடு இனிதே தொடங்கியது. இதைத் தொடர்ந்து தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலர் திரு. எஸ்.பி. இளங்கோவன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில்,

''இந்தத் திருவள்ளுவர் திருநாளில் 1992-ஆம் ஆண்டிற்கான திரு.வி.க. விருது திரு. அ.மு. பரமசிவானந்தம் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு. இ. முத்துராமலிங்கம் அவர்களுக்கும், திருவள்ளுவர் விருது கல்லை தே.கண்ணன் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

''தமிழக மக்களின் மறை நூலாகவும், உலக மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையிலும் திருவள்ளுவர் திருக்குறளைப் படைத்துள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருக்குறளை ஏன் படைத்தார் என்று நமக்குத் தெரியாது. சமுதாயத்தில் ஒழுக்கமும், பண்பாடும் சீர்குலையும் போது சமுதாய நலனில் அக்கறை கொண்டுள்ள பெரியவர்கள் ஒழுக்கத்தைச் சமுதாயத்தில் வலியுறுத்துவது வழக்கம். அந்த வகையில் அப்போது இருந்த சமுதாயத்திற்கு ஏற்புடைய வகையில் திருக்குறளை இயற்றியிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

*திருவள்ளுவர் திருநாளன்று, திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்தனர் (15.1.93).*





# வள்ளுவருக்கு வாழ்த்து மாலை!

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டு களாக ஏற்றிப்போற்றி வருகின்றனர். ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும்பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது — ''அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கு எல்லாக் காலத்திற்கும் உரியவன்''

—ப.ஜீவானந்தம்

நமது சரித்திரத்திற்கும், நாகரிகத் திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத் துக்காட்ட முடியும். ஆயினும், அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியுமாகையால், பயன்படுமாகையால் திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், எப்படிப் பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

—தந்தை பெரியார்

கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக்கும் ஒப்ப முடிவதாகும். அத் திரட்டு நூல்களுள்ளும் வள்ளுவர் நூல் தலை சிறந்ததென்பதற்கு இடை நெடுங் காலம் பிற பல நூலும் வழக்கிழந் தொழியவும் என்றும் பிரபல நூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம்.

—நாவலர்
ச. சோமசுந்தர பாரதியார்

ஏனைய நூல்களை வாசிக் குங்கால் வரும் ஐயங்களை அகற்றும் ஆசிரியத் தன்மையது. பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது வேற்றுமொழி வல்லார் காணாத விளக்கத்தக்கது குறள்.

—திருப்பாதிரிப்புலியூர்
ஞானியாரடிகள்

குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப்பூச்சிகள் என்று கூறியவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர்கெட்டது? இன்று மீண்டும் குறள் நெறிப்படி சாதி, சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன்வர வேண்டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத் திக் கேட்டுக் கொள்கிறேன்.

—பேரறிஞர் அண்ணா

**திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத் தனையோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசியல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற் பட்டு மாறிய பிறகும், திருவள்ளு வரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து நமக்காக அறிவுரை கூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய்மொழி போல் விளங்குகிறது.**

—டாக்டர் மு. வரதராசனார்

திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை, உலகைக் கூறு படுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொது மறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

''எந்த ஒரு சமுதாயத்திலும் ஒழுக்கம் முக்கியமாக இருக்க வேண் டும். இல்லாவிட்டால் சமுதாயம் அழிந்துவிடும். தமிழ்ச் சமுதாயம் அழியாமல் காக்கப்பட வள்ளுவர் குறளைப் படைத்திருக்கிறார்.

''கிராமப்புற மக்கள் வாரந் தோறும் திருக்குறள் கருத்துக்களைக் கேட்டுப் படிக்கும்படி ஆசிரியர்கள் உதவ வேண்டும். திருக்குறளைப் படிப்பதால் நல்லொழுக்கம், தன் னம்பிக்கை, மன உறுதி ஆகியவை ஏற்படும்'' என்றார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோம சுந்தரம் அவர்கள் பேசுகையில்,

''திருவள்ளுவர் மனித வர்க்கத் திற்கே சொந்தமானவர். திருவள்ளு வர் மனித சமுதாயத்தைப் பற்றித் தான் தம் குறள்களில் எழுதியிருக் கிறார். அவர் எழுதிய 1330 குறட் பாக்களில் எந்த ஒரு குறளும் பய னற்றுப் போனதாகத் தெரிய வில்லை என்றார்.''

இதனைத் தொடர்ந்து, மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திரு.வி.க. விருது மற்றும் ரூ.10,000-த்தை பேராசிரியர் திரு. அ.மு. பரமசிவானந்தம் அவர்களுக் கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது மற்றும் ரூ.10,000-த்தை திரு. இ. முத்துராமலிங்கம் அவர் களுக்கும், திருவள்ளுவர் விருது மற்றும் ரூ.20,000-த்தை திரு. கல்லை தே. கண்ணன் அவர்களுக் கும் வழங்கினார்.

பிறகு, 42 சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறந்த பதிப்பகங்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

1992-ஆம் ஆண்டில் நிதியுதவி பெறும் 16 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ரூ.400-க்கான காசோலை வழங்கப்பட்டது.

முடிவில், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை இயக்குநர் திரு. பண்ணீர் செல்வம் அவர்கள் நன்றி கூறினார்.

திருக்குறள் முனிசாமி, தஞ்சைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஒளவை நடராசன் ஆகி யோரும் விழாவில் கலந்துகொண்டு பேசினர்.

-நிகழ்ச்சித் தொகுப்பு:
கரு. சண்முகசுந்தரம்.



தியாகி சுப்பாராவ்

**வி**டுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவுக்குச் சொந்த ஊர், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டுதான்; ஆனால் அந்தத் தியாகசீலர் வளர்ந்ததும், வாழ்ந்ததும், மடிந்ததும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாரப்பட்டி என்கிற ஊரில்தான்.

'இந்தியா - உறுதியாகச் சுதந்திரம் பெறும். இந்த மண்ணில் அதன் அறிகுறியாக நான் பாரத தேவிக்குக் கோயில் கட்டுவேன்' என்று மூச்சுக்கு மூச்சு சொல்லிக்கொண்டிருந்தவர் சிவா; இப்போது - அந்த ஊரில் அவருடைய நினைவாகக் கல்லாலான நினைவுக் கம்பம் ஒன்று நாட்டப்பட்டிருக்கிறது. சுற்றிலும் பூந்தோட்டம்; ஒரு காவலாளி.

எப்போதும் மாட்டுவண்டிப் பயணத்தில்சுகங்காணும் சிவாவுக்குப் பாப்பாரப்பட்டியில் தங்க நிழல்கொடுத்து ஆதரித்த பெருமை தியாகி சின்னமுத்து முதலியாரைச் சேரும்.

பாப்பாரப்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சிவாவின் பெயரிடப்பட்டுள்ளது; அதன்முன் அவரது திருவுருவச் சிலையொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பள்ளி உருவாக முழு முதல் காரணமாக இருந்தவரான தியாகி சுப்பாராவ் தனது முதுமையையும் பாராமல் - திருமணமும் செய்துகொள்ளாமல் அப்பள்ளியை நல்லபடி நிர்வகித்து வருகிறார். 'சிவா ஆசிரமம்' அவர் கவனிப்பில் உள்ளது.

அந்தப் பள்ளி மாணவர்கள் மட்டுமல்ல; அவ்வூர் மக்களும்கூட அவருடைய அமைதியான நடவடிக்கைகளுக்கு மதிப்பளித்து அடங்கி நடந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தருமபுரி அருங்காட்சியகம்



**த**ருமபுரி அருங்காட்சியகம் பண்டைக் கால வரலாற்று நூற்கள் பலவற்றைப் படித்த உணர்வை நமக்கு உண்டாக்குவதாக உள்ளது.

நடுகற்கள், முதுமக்கள் தாழிகள், ஈமப்பேழை, பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கருப்பு நிற-சிவப்பு நிற மண்பாண்டங்கள், செப்புத் திருமேனிகள் கற்காலக் கருவிகள், புதிய கற்காலக் கருவிகள், ஆங்கில ஆட்சிக் காலத் துப்பாக்கிகள் போன்ற ஏராளமான பொருட்கள் இங்கே பக்குவமாகச் சேகரித்து வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.

'அல்லி அரசாணி மாலை' போன்ற ஓலைச் சுவடிகளும், காரிமங்கலம் கோயிலிலிருந்து கொண்டுவரப்பட்ட 200 ஆண்டுக் காலத்திற்கு முந்திய பழமையான இராவணன் வாகனமும் கூட இங்குள்ளன.

இதுவரை தொல்பொருள் ஆய்வுத்துறை மூலம் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்ட 130 அரிய புத்தகங்களும், 'காலாண்டுக் கல்வெட்டு இதழும்' இங்கே விற்கப்படுகின்றன.

''மக்கள் ஆர்வத்தோடு இங்கெல்லாம் வந்து பார்க்கிறார்களா?'' என்று அருங்காட்சியகத்தின் பொறுப்பாளரிடம் நாம் கேட்டபோது, சிரிப்புடன் வெளிப்பட்ட பதில் - ''இந்த வகையில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும்தான் வந்துபோகிறார்கள்; ஒருவேளை இதற்கு நுழைவுக் கட்டணம் என்று போட்டால், பொதுமக்களுக்கு உள்ளே வந்து பார்க்கும் ஆவல் ஏற்படுமோ என்னவோ!''

## சிவா நினைவாக...





Best
Compliments
From

# KRISHNAGIRI TEXTILE MARKET

**All kinds of**
**Textile Goods available**

**President:**
**P.A.S. CHINNARASAN**

# மாமல்லபுரம் நாட்டிய விழா



தமிழகத்தில் நம் பண்பாட்டை யும் பாரம்பரியத்தையும் எடுத்துக் காட்டுகின்ற வகையில், பல முக்கிய விழாக்கள் கொண்டாடப்பட்டு வரு கின்றன.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி களைக் கவருகின்ற வகையில், அரசு ஆண்டுதோறும் விழாக்களைக் கொண்டாடி வருகிறது.

மாமல்லபுரத்தில் நாட்டிய விழா, சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா, மதுரையில் சித்திரை விழா, ஊட்டியில் கோடை விழா, குன் னூரில் தேநீர் மற்றும் சுற்றுலா விழா ஆகியவை ஆண்டு விழாக் களாகக் கொண்டாட முடிவு செய் யப்பட்டுள்ளது. இந்த வரிசையில், ஜனவரி, பிப்ரவரியில் நடத்தப்படும் நாட்டிய விழா, முதலில் வருகிறது.

முதன் முதலாக நாட்டிய விழா, மாமல்லபுரத்தில் 1991-ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. 1992-ஆம் ஆண்டு நாட்டிய விழா, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு, ஒரு மாத காலம் நடைபெற்றது. இவ்விழாவை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் கண்டு களித்தனர்.

இந்த ஆண்டு இவ்விழா, மாமல்லபுரத்தில் 8.1.93 வெள்ளிக் கிழமை தொடங்கப்பட்டு 7.2.93 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற உள்ளது. இவ்விழாவின் முக்கிய அம்சங்களாக, பரத நாட்டியம், மோகினி ஆட்டம், குச்சுப்பிடி ஆகி யவை இடம்பெறும். இக்கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டுவதற் காகக் கலைஞர்கள் இந்தியா முழு வதிலிருந்தும் வந்திருக்கின்றனர்.

இந்த நாட்டிய விழாவிற்காக, தமிழக அரசு ரூ.7.5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு ரூ.3.13 இலட்சம் அளிப்பதற்கு இசைந்துள்ளது. இவ்விழாவிற்குத் தென்மண்டலப் பண்பாட்டு மையம் ரூபாய் ஒரு இலட்சம் வழங்குகிறது. இவ்விழாவை தமிழக அரசு சுற்றுலாத் துறை, மத்திய அரசு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் தென் மண்டலப் பண்பாட்டு மையத் துடன் சேர்ந்து கூட்டாக நடத்து கின்றது.

**தொடக்க விழா**

'மாமல்லபுரம் நாட்டிய விழா - 1993,' 8.1.93 வெள்ளிக்கிழமை யன்று மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தவம் என்ற இடத்தில், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.



விழாவிற்கு, செய்தி-சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவினைத் தொடங்கிவைத்துப் பேருரையாற்றுகையில் அவர் பேசிய தாவது:

''1991-ஆம் ஆண்டு முதல் மாமல்லபுரத்தில் நாட்டிய விழா நடத்தப்படுகிறது. ஆனால் ஓரிரு நாட்கள்தான் நடத்தப்பட்டது. கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், நாட்டிய விழாவைத் தொடங்கி வைத்து ஒரு மாத காலத்திற்கு நாட்டிய விழா நடத்தப்படும் என்று அறிவித்ததோடு, மாமல்லபுரத்தை நிரந்தர அழகு நகரமாக ஆக்க, ரூபாய் ஒரு கோடியே 15 இலட்சத் துக்கான திட்டத்தை அறிவித்தார். அந்தத் திட்டம் தற்போது செயல் படுத்தப்பட்டு வருகிறது.

''இன்று நிறைய வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை இங்குக் காண முடிகிறது. கடந்த முறை நான் வந்திருந்தபோது சுமார் 50 வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைத் தான் பார்க்க முடிந்தது. ஆனால், இன்று 250-க்கும் மேலான வெளி நாட்டினரைக் காண முடிகிறது.

''அர்ச்சுனன் தவம்'' என்கின்ற இந்த இடத்தின் அருகே, மகாபலி புரம் பேருந்து நிலையம் இருப்ப தால், போக்குவரத்தினால் சிற் பங்கள் மாசுபடும் நிலை ஏற்படு கிறது. இதைத் தடுப்பதற்காகப் பேருந்து நிலையத்தை வேறு ஒரு இடத்தில் அமைக்க அரசு திட்ட மிட்டுள்ளது. இதற்காக ரூ.88 இலட்சம் ஒதுக்கப்பட்டு நிலம் கைய கம் செய்யப்பட்டுள்ளது. முதல்கட்ட நடவடிக்கையாக ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து களும் சுற்றுலாப் பேருந்துகளும் வந்து செல்ல வசதிகளும், தங்குவதற் கான வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

''கீழ ராஜ வீதியைப் பழுது பார்த்து தெருவிளக்குகள் அமைப்ப தற்காக ரூ.20 இலட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. கடற்கரைக் கோவில், ரதம் ஆகிய இடங்களுக்கு அருகே வாகனங்கள் நிறுத்தத் தனி இடம் அமைக்கப்படும்.

''மாமல்லபுரத்துச் சிற்பங்கள் மாசுபடியாமல் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. மாமல்ல புரத்துக்கு அருகே உள்ள பூஞ்சேரிக் கிராமத்தைப் புது நகராக உரு வாக்கத் திட்டமிட்டுள்ளோம்.'' இதற்குப் பொதுமக்களின் ஆலோ சனைகள் பெறப்படும்.'' என்று கூறினார்.

விழாவில், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா திரு. கா.ப. பட்டாபிராமன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப் பினர்கள், தென் மண்டலப் பண் பாட்டு மைய இயக்குநர் திரு. ஓ.ஆர். சுகுமார், இ.ஆ.ப., ஆகி யோர் பேசினார்கள். முன்னதாக, சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி ப. சிவகாமி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். செங்கல் பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறி னார். மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ஜி. மணிக்குமார் அவர்கள் விழா நிகழ்ச் சிகளைத் தொகுத்து வழங்கினார்.

விழாவினைக் காணப் பொது மக்களும், அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் பெருந்திரளாகக் கூடி யிருந்தனர். பின்பு அமைச்சர் அவர்கள் நாட்டிய நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தார். விழா முடிவில், சித்ரா விஸ்வேஸ்வரன் அவர்களின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடை பெற்றது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
ஆர். இராஜசேகரன்.

## தருமபுரி மாவட்டம்:
## சின்னச் சின்ன செய்திகள்

**மூவேந்தர்கள், பல்லவர், கங்கர், நுளம்பர், ஒய்சாளர், கருநாடகர், மராட்டியர், ஆந்திரர், நாயக்கர், மொகலாயர், ஆங்கிலேயர் எனப் பல பேரரசுகள் ஆட்சியின் கீழிருந்த பெருமை தருமபுரிக்கு உண்டு.**

★ ★ ★

**சைவ, வீர சைவ, வைணவ, புத்த, ஜைன, கிறிஸ்துவ, இஸ்லாமிய சமயங்கள் என யாவும் இந்த மாவட்டத்தில் ஆங்காங்கே படர்ந்திருக்கக் காணலாம்.**

★ ★ ★

**தருமபுரி மாவட்டம் பற்றிக் கர்னல் ரீடு என்பார் எழுதிய குறிப்புகள் புகழ் பெற்றவை (The Report of Col-Alexander Read, 1800 AD- Socio Economic Survey by Read); கவிஞர் தமிழ்நாடன் என்பார் இதன் தமிழாக்கத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார்.**

★ ★ ★

**ஒவ்வொரு மாவட்டத்தில் வாரந்தோறும் மாட்டுச் சந்தை நடைபெறுவதுண்டு அல்லவா? தருமபுரி மாவட்டத்தில் அப்படியல்ல; தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய ஐந்தே மாதங்களில்தான் ஆண்டுதோறும் மாட்டுச் சந்தை நடைபெறும். இந்தச் சந்தை 'மாட்டுப் பரிசை' எனப்படும். இவ்வகையில் அதியமான் கோட்டையும், இண்டூரும் பிரசித்தம். தருமபுரி மாவட்டத்தில் 'அலிகார் மயிலை மாடுகள்' சிறந்தவை.**

★ ★ ★

**ஓசூர் - மத்திகிரியில் உள்ள கால்நடைப் பண்ணையில், சுற்றுச் சுவரையொட்டி அரசமரம்போல் ஒருவகை மரம் ஓங்கி வளர்ந்திருக்கிறது; ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், ஜாவாவிலிருந்து கொண்டுவந்து நடப்பட்ட ஒருவகை அத்தி இன மரங்களாம் இவை; இதில் என்ன அதிசயம் தெரியுமோ? எப்போதுமே இலையுதிராமல், பசுமையோடிருக்குமாம் இந்த மரங்கள்; இங்குள்ள கால்நடைகளுக்குக் கோடைக்கால உணவு இவற்றின் தழைகளே என்கிறார்கள் அங்குள்ளவர்கள்!**

★ ★ ★

**தருமபுரி மாவட்டத்தில் 100 கிளைகள் உள்ள பனைமரம் ஒன்றும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

**ஜெ. பாலசுப்பிரமணியம்.**

# சரித்திரப்புகழ் மிக்க ஒசூர் காலநடைப்பண்ணை !

**த**மிழகத்தில் உள்ள மிகப்பெரிய கால்நடைப்பண்ணை தருமபுரி மாவட்டம் ஓசூரில் அமைந்துள்ள பண்ணையாகும். இது, 1,641 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இப்பண்ணையின் வரலாறு நம் நாட்டின் சரித்திரத்துடன் இணைந்து நிற்கிறது. மைசூர் பேரரசின் மன்னன் திப்பு சுல்தானால்; தன் படைகளுக்கு வேண்டிய நேர்த்தியான குதிரைகளை வளர்க்க ஆரம்பித்த இப்பண்ணையைப் பின்னர் ஆங்கிலேயர்கள் இதன் இயற்கை அழகையும், வசதிகளையும், அயல் நாடுகளுக்கு ஈடான இதன் சீதோஷ்ண நிலையையும் அறிந்து இராணுவக் குதிரைகள் வளர்ப்பதற்கு ஏற்ற இடம் எனக் கருதி, திப்புவிடமிருந்து இப்பண்ணயை 1824- இல் கைப்பற்றி மேலும் விரிவாக்கம் செய்தனர்.

1924-இல் கால்நடைகளின் வளர்ச்சிக்காக, தமிழக விவசாயத் துறையினர் இப்பண்ணையைத் தங்கள் துறையின் கீழ் கொணர்ந்து சிந்து இனப் பசுக்கள் வளர்க்கவும், கால்நடைகளைப் பராமரிக்கவும் தொடங்கினர். பின்னர் 1938- இல் இப்பண்ணை கால்நடைப் பராமரிப்புத் துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்றுவரை கால்நடைப் பராமரிப்புத்துறையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களின் எல்லைக்கோடாக அமைந்துள்ள சிறப்புமிக்க இப்பண்ணை, தருமபுரி மாவட்டத்தில், ஓசூர், தேன்கனிக்கோட்டை நெடுஞ்சாலையில் (பெங்களூரிலிருந்து 45 கி.மீ. தொலைவில்) ஓசூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் மத்திகிரி என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது.

பண்ணையின் மொத்த பரப்பளவு - 1641 ஏக்கர், மண்வளம் - அலையலையான மேடுபள்ளம் சிவப்பு நிறம் கலந்த வண்டல் மண், மிகுதியான வெப்பம் - 30 டிகிரி சென்டிகிரேட், குறைந்த வெப்பம் - 15 டிகிரி சென்டிகிரேட், மழையளவு - ஆண்டு சராசரி 84 செ.மீட்டர் உயரம் - கடல் மட்டத்திற்கு மேல் 3015 அடி, நீர்ப்பதம் - 30 சதவிகிதம்.

**பண்ணையின் குறிக்கோள்**

சுத்த இன சிந்தி, அயல் இன ஜெர்சி, பிரீசியன் மாட்டினங்களை அபிவிருத்தி செய்து, உயிரினக் கலப்பின மாடுகளை உற்பத்தி செய்தல்.

மாநிலத்தில் மற்ற பகுதிகளில் செயல்படும் அரசுத் திட்ட அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான தரமான கலப்பினப் பொலி காளைகளை உற்பத்தி செய்து வழங்குதல்.

அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜெர்சி, பிரீசியன் போன்ற தரமான உயிரினக் காளைகளின் மூலம் உறைவிந்துக் குச்சிகள் தயாரித்து, இருப்பு வைத்து விநியோகம் செய்தல்.

ஆடு, பன்றி ஆகிய இதர இனங்களை நல்லமுறையில் பராமரித்து அபிவிருத்தி செய்தல் மற்றும் அரசின் பல்வேறு நலத் திட்டங்களுக்கு வழங்குதல்.

தீவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நல்ல தரமான விதைகள் மற்றும் புல்கீரணைகளை விவசாயிகளுக்கு வழங்குதல்.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் தரமான கிடாக்களை உற்பத்தி செய்து, ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதன் மூலம் நாட்டில் ஆடுகளின் தரத்தை உயர்த்துதல்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஆண்டில் இரண்டு மாதங்களுக்குப்





பண்ணைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பால்பண்ணை, கோழிப் பண்ணை, செம்மறி ஆடு பராமரிப்பு போன்ற துறைகளில் செயல்முறைப் பயிற்சி பெற விரும்புபவர்களுக்கு உதவி புரியும் வகையில் இலவச ஊக்குவிப்புத் தொகை ரூ.8 உடன் 10 நாட்களுக்கு இலவசத் தங்குமிட வசதியுடன், பயிற்சி அளிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக்கு எழுதப் படிக்கத் தெரிந்த இளைஞர்கள் சேர்க்கப்பட்டு, சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று தொழில் தொடங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இந்தக் கால்நடைப் பண்ணையைச் சுற்றிப் பார்க்க நம்மை அழைத்துச் சென்றார் பண்ணையின் துணை இயக்குநர் டாக்டர் கே. ரங்கா ராவ். ஒசூர் கால்நடைப் பண்ணையில் தற்சமயம் இந்த, ஜெர்சி, பிரீசியன் வகையைச் சேர்ந்த 903 கால்நடைகளும் (கலப்பின மாடுகளும்), மாண்டியா இனத்தைச் சேர்ந்த 1200 ஆடுகளும், 130 யார்க்ஷயர் இனப் பன்றிகளும் வளர்க்கப்படுகின்றன. இவற்றைத் தவிர 'பேப்காக்' (Bepeock) இனத்தைச் சேர்ந்த 2000 கோழிகளும் இந்தப் பண்ணையில் உள்ளன. ஜெர்சி, பிரீசியன் போன்ற அயல் இனக் காளைகளை இறக்குமதி செய்து, அதன்மூலம் கலப்பினக் காளைகள் உற்பத்தி செய்யும் பணி கடந்த 25 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

### அயல் இனக் காளைகள்

ஜெர்சி இனக் காளைகள் ஜெர்மனி, டென்மார்க் நாடுகளிலும், பிரீசியன் இனக் காளைகள் மேற்கு ஜெர்மனியிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த அயல் இனக்காளை ஒன்றின் விலை சுமார் ரூபாய் ஒரு இலட்சம் எனவும், அந்த நாடுகள் அளித்த மானியத்தின் மூலம் ஒரு காளை ரூபாய் 40 ஆயிரத்துக்கு வாங்கப்பட்டதாகவும் துணை இயக்குநர் தெரிவித்தார். இந்த வகையில் ரூ.50 இலட்சம் செலவில் 140 அயல் இனக்காளைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 50 காளைகள் உதவி மண்டலத்துக்கும், 50 காளைகள் ஈச்சங்கோட்டைக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இந்தக் காளைகளைப் பார்த்ததும் நாங்களே பிரமித்துப் போய்விட்டோம். அவ்வளவு பெரிய உருவம். பிரீசியன் இன காளை ஒன்றின் சராசரி எடை 900 கிலோ கிராமாம். இதன் நீளம் 10 அடிக்கு மேல். உயரமோ 6 அடி. இந்த வகைக் காளையின் தாய் ஒரு நாளுக்கு 32 முதல் 35 லிட்டர் பால் கறக்குமாம்.



ஜெர்சி இனக் காளைகளின் சராசரி எடை 550 கிலோகிராம். இந்த வகைக் காளைகளின் தாய்ப் பால் அளவு ஒரு நாளுக்கு 20 லிட்டர். ஜெர்சி இனக் காளைகளின் விந்து உள்ளூர் சிந்தி இனப் பசுக்களுக்குச் செலுத்தப்பட்டு உயர்ரகக் கலப்பின மாடுகள் பெறப்பட்டுள்ளன. இங்கு தற்சமயம் வளர்க்கப்படும் அயல் இனக் காளைகளின் வயது சராசரி மூன்றரை ஆண்டுகள்.

இந்த அயல் இனக் காளைகளின் விந்து உற்பத்தி மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் 30 இலட்சம் சம்பாதித்திருப்பதாக டாக்டர் ரங்காராவ் கூறினார். ஒரு காளை ஓராண்டில் விந்து மூலம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் சம்பாதித்துக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார். இந்தக் காளைகள் 5 முதல் 7 ஆண்டுகள் வரை உயிரோடு இருக்குமாம்.

### குதிரை இனவிருத்தி

எந்த நோக்கத்திற்காக இந்தப் பண்ணை முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதோ, அதன் நினைவாக இன்றும் குதிரைகள் இங்கு வளர்க்கப்பட்டு வருகின்றன. தற்சமயம் கத்தியவாடி இனத்தைச் சேர்ந்த 9 குதிரைகள் இனவிருத்திக்காக இந்தப் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் ஒசூர் பண்ணையில்தான் குதிரை இனவிருத்தி செய்யப்படுவதாகப் பண்ணையின் துணை இயக்குநர் தெரிவித்தார். குதிரைக் கொட்டகையை சுற்றி வந்தபோது 24 வயது முதிர்ந்த கண்ணகி என்ற குதிரையைப் பார்க்க நேர்ந்தது. இந்தக் குதிரை 13 குட்டிகள் போட்டுச் சாதனை படைத்திருக்கிறது.

### பதப்படுத்திய பசுந்தீவனப் பயிர்

ஒசூர் பண்ணையின் மொத்தப் பரப்பில் சுமார் பாதிபாகம் (750 ஏக்கர்) மேய்ச்சல் நிலமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் காலநடைகளுக்காகப் பலவகையான புற்கள் பயிரிடப்படுகின்றன. கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் இந்தப் பகுதியிலிருந்தே பெறப்படுகின்றன. எதிர்பாராத வறட்சி ஏற்பட்டு புல் கிடைக்காத காலங்களில் 'பதப்படுத்திய பசுந்தீவனப் பயிர்' கால்நடைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இதற்காகப் பசுந்துழைகள் வெட்டப்பட்டு குழிகளில் போடப்பட்டு சுமார் 2,3 ஆண்டுகள் காப்பாற்றி வைக்கப்படுகின்றன.

இந்தப் பண்ணையில் தற்சமயம் 150 கறவை மாடுகள் உள்ளன. இவைகள் தினசரி 1200 லிட்டர் பால் தருவதாக இதன் பொறுப்



பாளர் தெரிவித்தார். சில உயர் ரக இனத்தைச் சேர்ந்த பசுக்கள் நாளொன்றுக்குச் சுமார் 20 லிட்டர் பால் தருவதாகவும் கூறினார். இயந்திரங்களைப் பயன்படுத்தி கறவை மாடுகளிலிருந்து இங்கு பால் கறக்கப்படுகிறது. இதற்கென உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 2 நவீன பால் கறக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு இயந்திரத்தின் மூலம் ஒரே நேரத்தில் 6 பசுக்களிடமிருந்து பாலைக் கறக்க முடியும். இங்குக் கிடைக்கும் பாலில் 50 சதவிகிதம் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையத்தின் மூலம் பிற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**உறைவிந்து உற்பத்தி நிலையம்**

(Frozen Şemen Bank) தருமபுரி மாவட்டம் அடிப்படையிலேயே ஒரு பின் தங்கிய மாவட்டமாகும். பருவ மழை சரியான காலங்களில் பெய்யாததன் காரணமாக இங்கு வாழும் மக்கள் ஆண்டு முழுவதும் விவசாயத்தையே நம்பி வாழ முடிவதில்லை. எனவே, மாற்று ஏற்பாடாக இவர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டுள்ளது.



**உலகிலேயே ஆசியாவில்தான் சந்தன மரம் அதிக அளவில் இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆசியாவிலேயே பெரியதும் வயதானதுமான சந்தன மரம் ஒசூர் கால்நடைப் பண்ணையில் இருப்பது தருமபுரி மாவட்டத்துக்கே ஒரு தனிச் சிறப்பாகும்.**

பாலின் தரம் மற்றும் உற்பத்தியைப் பெருக்க உள்ளூர் பசுமாடுகளின் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஒசூர் கால்நடைப் பண்ணையிலேயே இதற்கான அனைத்து அடிப்படை வசதிகளும் இருந்ததால் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் ரூ.12.40 இலட்சம் நிதியுதவி பெற்று 1987-88-இல் ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையம் இங்கு அமைக்கப்பட்டது. இந்தப் பண்ணையிலுள்ள 28 அயல் இன உயர் ரகக் காளைகளிடமிருந்து, வாரத்துக்கு இருமுறை விந்து சேகரிக்கப்பட்டு, ஒரு இலட்சம் குச்சிகளில் (Straws) அடைக்கப்பட்டு திரவ நைட்ரஜன் பாத்திரத்தில் இந்த நிலையத்தில் பாதுகாத்து வைக்கப்படுகிறது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகளை எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் வைத்து தேவைப்படும் போது பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிறார் டாக்டர் ரங்கா ராவ்.



இங்கிருந்து தருமபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர், வட ஆர்க்காடு-அம்பேத்கர், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். ஆகிய 4 மாவட்டங்களுக்கு அனைத்து ரக உறைவிந்துக் குச்சிகளும், பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களுக்குக் காங்கேய இனக் காளைகளின் உறைவிந்துக் குச்சிகளும் வினியோகிக்கப்படுகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் 4,28,205 உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதே ஆண்டில் 5,23,898 உறைவிந்துக் குச்சிகள் இந்த மையத்திலிருந்து மற்ற இடங்களுக்கு வினியோகிக்கப்பட்டிருப்பதாக இந்த நிலையத்தின் கால்நடை மருத்துவர் நம்மிடம் தெரிவித்தார்.

இந்த உறைவிந்து உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக ஆண்டுதோறும் தடங்கலின்றி ஒரே சீராக உறைவிந்துக் குச்சிகள் வினியோகிக்க முடிவதாகவும், பல்வேறு இனக் காளைகளின் உறைவிந்துக் குச்சிகள் தேவையான நபர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் வினியோகம் செய்யப்படுவதாகவும் கூறினார் பண்ணையின் துணை இயக்குநர் டாக்டர் ரங்கா ராவ்.

**- ஜே. சந்திரன்**

*Best*
*Compliments*
*From*

# J.P. PETROL BUNK

Bye-Pass Road, Krishnagiri.



Prop:
**JAYAPRAKASH**

*Best*
*Compliments*
*From*

# *READY MONEY SHOPPY*

*Cornation Ground,*
*Krishnagiri.*

***T.V., RADIO, WASHING MACHINE AND ALL OTHER HOME NEED THINGS AVAILABLE.***





இந்த ஆண்டில், 35 டன் சர்க்கரை உற்பத்தி செய்து சாதனை படைக்கவிருக்கிறது தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு சர்க்கரை ஆலை; அந்த ஆலையின் படப்பிடிப்பே இந்தக் கட்டுரை:

### தருமபுரி மாவட்டம்:

# கூட்டுறவு சர்க்கரை ஆலை

எம்.பி. அபூர்வகுமார்

தனி அலுவலர்

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வட்டங்களில் பாலக்கோடு வட்டத்தில் கரும்பு உற்பத்தி அதிக அளவில் இருந்து வந்தது. கரும்பு சாகுபடியாளர்களில் பலர் தங்கள் அருகில் உள்ள வெல்ல உற்பத்தியாளர்களுக்கே சரியான விலை இல்லாமல் தங்கள் கரும்பைக் கொடுக்க வேண்டியிருந்தது. சிலர் பல இடையூறுகளுக்கிடையில் அதிகப் போக்குவரத்துச் செலவு செய்து சுமார்150 கி.மீ. தொலைவிலுள்ள சேலம் சர்க்கரை ஆலைக்கோ அல்லது 110 கி.மீ. தொலைவிலுள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கோ தங்கள் கரும்பினை எடுத்துச் சென்று விற்று வந்தனர்.

இந்த நிலையில், கரும்பு சாகுபடியாளர்கள் தங்கள் கரும்பு விளைச்சலுக்குச் சரியான விலையைப் பெறவும், கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் திருவாளர்கள், எ. விமலன் மற்றும் டி. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர், பி.எம்.குப்புசாமி, பி.எம்.முனுசாமி கவுண்டர், கே.எஸ். சுப்பிரமணிய கவுண்டர் இவர்களை அமைப்பாளர்களாகக் கொண்டு இம்மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முயற்சி எடுக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டம் துவங்கிய சில மாதங்களிலேயே அதாவது 1966-ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையினை இம்மாவட்டத்தில் திம்மன அள்ளியில் நிறுவ மத்திய அரசு அனுமதியளித்தது. அதற்கு வேண்டிய துவக்கப் பங்கு முதலீட்டிற்காக 10 இலட்சம் ரூபாய் பங்குகளாக வசூல் செய்து கொடுக்க அப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளராகத் தருமபுரியில் பணி புரிந்த திரு. இ. வெங்கடாசலம், தருமபுரி மாவட்ட ஆட்சியாளராக இருந்த திரு. ஜி. திருமால் ஆகியோர் பெருமளவில் உதவினார்கள்.

இவ்வாலைக்கான இடத்தை சேலம்-பெங்களூர் நெடுஞ்சாலையில் தருமபுரி மாவட்டத்தின் மையமாக உள்ள பொருத்தமான சீதோஷ்ண நிலையுள்ள மற்றும் போக்குவரத்து, தொலைத் தொடர்பு வசதிகள் உள்ள பாலக்கோடு அருகே 2 கி.மீ. தொலைவில் இருக்கும் திம்மனஹள்ளி கிராமத்தில் சுமார் 170 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது; அங்கே ஆலை கட்டி முடிக்கப்பட்டு 1972-இல் இருந்து இயங்கி வருகின்றது.

தருமபுரி மாவட்டத்தில் இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைதான் முதல் பெரிய ஆலையாகும். இதற்கான மூலதனத்தைப் பங்குத் தொகையாக அங்கத்தினர்களிடமிருந்தும், கரும்புச் சாகுபடியாளர்களிடமிருந்தும், தமிழக அரசிடமிருந்தும் மற்றும் பிற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும் 66 இலட்சங்கள் துவக்கத்தில் பெறப்பட்டது. இன்று பங்குகள் பெருகி 195 இலட்சங்களாகியுள்ளது.

துவக்கத்தில் இவ்வாலை ஒரு நாளைக்கு 1,250 டன் கரும்பு அரைவைத் திறன் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டது. கரும்பு உற்பத்தியில் மக்கள் நல்ல வருமானம் பெற்றதனால் மேலும் அக்கரை கொண்டு கரும்பு விளைச்சல் அதிகமாகி கரும்பு விளைவிக்கும் அளவைக் கூடுதலாக்கி இவ்வாலை தன்னிறைவு பெற்று எஞ்சிய கரும்பைப் பிற ஆலைகளுக்கும் கொடுத்து வந்தது. இந்நிலையில் ஆலை மற்றும் விவசாயிகளின் நலன் கருதி 1987-ஆம் ஆண்டு ஆலை அரைவைத் திறன் 2,000 டன்களாக விரிவாக்கம் செய்யப்பட்டது. இச்சமயத்தில் அரசு இன்னொரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை அரூரில் ஏற்படுத்திக் கொள்ளவும் அனுமதி அளித்தது. கடந்த சில ஆண்டுகளாக நமது மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவியதால் கரும்பின் உற்பத்தி பாதிக்கப்பட்டு கடந்த 3 ஆண்டுகளாக மற்ற ஆலைகளிடமிருந்து உபரி கரும்பை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சென்ற ஆண்டு முதல் அரூரில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும் இயங்கி வருவதால், இந்த ஆண்டும் வெளி ஆலைகளிடமிருந்து கரும்பு எடுக்க வேண்டியுள்ளது. மேலும் அரூரில் அமைந்துள்ள சர்க்கரை ஆலைக்கு நமது ஆலைப் பகுதிகளில் சரிபாதி கொடுத்துள்ளதால் சுமார் 50 சதவிகித பரப்பு இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பை ஈடு செய்யும் வகையில் கிருஷ்ணகிரி, பென்னாகரம் ஆகிய பகுதிகளில் புதிய



★ நம்மிடையே ஆயிரக்கணக்கில் குடிகாரர்கள் இருப்பதைவிட, இந்நாடு ஓட்டாண்டியாய் இருப்பதே எனக்குச் சம்மதம்.



கோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு தீவிர கரும்பு அபிவிருத்தி செய்யப் படுகின்றது.

இந்த ஆலை 1987-88-ஆம் ஆண்டின் உற்பத்தித் திறனுக்காக மாநில அளவில் முதல் பரிசு பெற்றது. 1988-89-இல் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக அகில இந்திய அளவில் தேசிய உற்பத்திக் குழுவின் பாராட்டையும், விருதையும் பெற்றது.

இவ்வாலை மூலம் ஒவ்வொரு அரைவைப் பருவத்திலும் சுமார் 8,500 கரும்பு விவசாயிகள் சுமார் 1,400 இலட்ச ரூபாயும் நேரடி வேலைவாய்ப்பின் மூலம் 950 தொழிலாளர்கள் 240 இலட்ச ரூபாயும் மறைமுகமாகச் சுமார் 2,100 விவசாயத் தொழிலாளர்கள் சுமார் 105 இலட்ச ரூபாயும் மற்றும் சுமார் 860 பேர் வாகனப் போக்கு வரத்து மூலமும் பல இலட்சங்கள் பெற்றுப் பயனடைகிறார்கள்.

இந்த ஆண்டுக்கு முந்தைய 10 ஆண்டுகளில் கடும் வறட்சி நிலவிய தால் அங்கத்தினர்கள் தங்கள் நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கிக் கொள்ளக் கடந்த 3 ஆண்டுகளில் மத்திய அரசு அனுமதித்துள்ள சர்க்கரை அபிவிருத்தி நிதிக் கடனில் இது வரையில் 146.50 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கிணறு வெட்டவும், கிணற்றை ஆழப்படுத்தவும் ஆயில் இன்ஜின்/ மின் மோட்டார் வாங்கவும் 8 சதவிகிதக் குறைந்த வட்டி விகிதத்தில் கரும்பு பயிரிடும் அங்கத்தினர்களுக்குக் கடன் வழங்கப் பட்டுள்ளது.

மேலும் விவசாயிகளுக்கு நீர்ப் பாசனத் திட்ட மேம்பாட்டிற்காக ரூ.282 இலட்சம் எதிர்வரும் ஆண்டுகளில் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறையில் கரும்பைப் பராமரிக்க அரசு நிதி உதவியுடன் திட்டம் அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (S.C.R.D.) சாலைகள் அமைக்கவும் பாலம் கட்டவும் ரூ.116 இலட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அதிகபட்சமாக 20 சதவிகித போனசும் மற்றும் ஊக்கு விப்புத் தொகையும் கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் நலனுக்காகச் சிற்றுண்டிச் சாலை, ஒய்வு விடுதி, உணவு அறை, மருந்தகம், கூட்டுறவுப் பண்டக சாலை, கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் சங்கம் ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை மூன்று ஜோடி சீருடையும், காலணியும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

நல்ல தரமான கல்வியை இப் பகுதியில் வாழும் ஆலை அங்கத்தினர் மற்றும் பணியாளர்கள் குடும்பங்களுக்கும் மக்களுக்கும் அளிக்க, ஆலையினரால் மெட்ரி குலேசன் பள்ளி ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது. மற்றும் ஆலை அங்கத்தினர் குடும்பங்களுக்கும் தொழிலாளர் குடும்பங்களுக்கும் பிரத்தியேக ஒதுக்கீட்டுடன் கூடிய அரசு அங்கீகாரம் பெற்ற தொழில் நுட்பப் பயிலகம் (Polytechnic) ஒன்றும் நடத்தப்படுகின்றது. இதனால் அங்கத்தினர்கள் மற்றும் தொழிலாளர்களின் பிள்ளைகள் முன்னுரிமையில் தொழிற்கல்வி படிக்க அரியதொரு வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தத்துக் கிராமங்களை இவ்வாலை எடுத்துச் செயல்பட்டதுடன் கிராமப்புற அபிவிருத்திக்குப் பெரிதும் இவ்வாலை உதவி வந்துள்ளது. விவசாயக் கூலிகளுக்கு நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தியதுடன் சிறுதொழில்கள் லாரி, டிராக்டர் மற்றும் டயர் வண்டி ஓட்டங்களுக்கு நல்ல வருவாயைத் தேடித்தந்துள்ளது.

நவீன முறையில் கரும்புச் சாகுபடி செய்ய நாற்றங்கால், கரும்பு தயார் செய்து நல்ல சர்க்கரை கட்டுமானம் தரக்கூடிய புதிய ரகக் கரும்புப் பயிர் செய்யத்தக்க மானியம் வழங்குதல், மானிய விலையில் பூச்சி மருந்து வழங்குதல், களைக் கொல்லி வழங்குதல், அங்கத்தினர்கள் கல்விச் சுற்றுலா ஏற்பாடு மற்ற பகுதிகளில் நடைமுறையில் உள்ள புதிய கரும்பு சாகுபடி வகைகள், முறைகளை அறிமுகப் படுத்தவும் மேலும் லாரி வாடகை மானியம் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்காக 40 முதல் 140 இலட்சம் வரை ஆண்டுதோறும் மானியமாக ஆலை செலவிட்டு வருகின்றது.

தமிழக அரசு ஆண்டு தோறும் அறிவித்து வரும் கரும்பு விலையைக் கால்த்தே கொடுப்பதுடன் ஒவ்வொரு ஆண்டு இலாபத்திலும்





கணிசமான அளவைக் கூடுதல் கரும்பு விலையாக டன் ஒன்றுக்கு ரூ.15-லிருந்து ரூ.50 வரை கொடுத்து வந்துள்ளது. கடந்த 1991-92-ஆம் ஆண்டிற்குத் தமிழ்நாட்டிலேயே மிக அதிகமான கூடுதல் கிரயமாக டன் ஒன்றுக்கு ரூ.45 வழங்கியுள்ளது. சென்ற ஆண்டில் கரும்பின் ஆரம்ப விலை ரூ.362.90-ம் கூடுதல் விலை ரூ.45-ம் சேர்த்துக் கரும்பின் மொத்த விலை டன் ஒன்றுக்கு ரூ.407.90 வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டு அரைவைப் பருவத்திற்கு ஆலைப் பகுதியில் சுமார் 2 இலட்சம் டன்களும், வெளி ஆலைப் பகுதியிலிருந்து 1/2 இலட்சம் டன்களும் சேர்த்து மொத்தம் 3 1/2 இலட்சம் டன்கள் அரைவை செய்து சுமார் 35 ஆயிரம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்படவுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கான அரைவை 1.11.92-இல் துவக்கப்பட்டது.

காகித ஆலைகளுக்குக் கச்சாப் பொருளாகக் கரும்புச் சக்கை அளிக்கப்படுகிறது. சாராய ஆலைகளுக்குச் சர்க்கரை கழிவுப்பாகு எரிசாராயம் தயாரிக்க கச்சாப் பொருளாக அனுப்பப்படுகின்றது. அயல்நாடுகளுக்குச் சர்க்கரை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை நாட்டுக்கு ஈட்டித் தந்துள்ளது. இந்த ஆண்டு மட்டும் இதுவரை 6,000 டன் சர்க்கரை சுமார் ரூ.441 இலட்சம் மதிப்புக்கு ஏற்றுமதி செய்துள்ளது. நடப்பு ஆண்டு உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கான ஒதுக்கீடு பெற வாய்ப்புள்ளது. இந்த நடப்பு ஆண்டு கொள்முதலுக்கு அரசு விலை நிர்ணயம் செய்தவுடன் உரிய விலை வழங்கப்படும்.

இந்த ஆலை தருமபுரி மாவட்ட விவசாயிகளின் விளைபொருளுக்கு உரிய விலை அளித்தும் அவர்களுக்குத் தேவையான இடுபொருள்களை உரிய நேரத்தில் வழங்கியும் பாசனம் போன்ற வசதிகளைப் பெருக்கக் கடன் வழங்கியும், விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வருகின்றது; தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் விவசாய, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் அளித்து வருகின்றது; மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான சாலை அமைப்பிலும் உதவியுள்ளது; விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றி வருகின்றது. நாட்டு முன்னேற்றத்துக்கு அவசியமான அந்நியச் செலாவணியையும் ஈட்டி வருகின்றது. மொத்தத்தில் கிராமப்புற வளர்ச்சிக்குக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஒரு சிறந்த தூண்டுகோளாக அமைகின்றன என்பதற்கு இந்த ஆலை ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது என்றே கூறலாம்.

**மாதம் ஒரு மருத்துவர்:**

## காது-மூக்கு-தொண்டை மருத்துவர் (ENT) பதில் சொல்கிறார்!

காது-மூக்கு-தொண்டைப் பகுதிகளின் மருத்துவச் சிகிச்சைத் துறையில், தனிப்புகழ் பெற்று வரும், FRCS போன்ற மேனாட்டு விருதுகள் பெற்றவருமான டாக்டர் கே.கே. இராமலிங்கம் அவர்கள், காது-மூக்கு-தொண்டை குறித்த உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறார்.

இந்த மருத்துவப் பகுதிக்கு உங்கள் கேள்விகள் 20.2.93-க்குள் வந்து சேர வேண்டும். கேள்விகளை, அஞ்சலட்டையில் எழுதினால் போதும்.



அஞ்சலட்டையில், 'மாதம் ஒரு மருத்துவர்' என்று குறிப்பிடவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆசிரியர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்

வறட்சியால் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய தருமபுரி மாவட்டம் பல துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 7.11.1975 முதல் இயங்கி வருகிறது தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்.

இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது, அரசாங்கம் ரூ.15 இலட்சத்தைக் இக்கழகத்தின் மூலதனமாக முதலீடு செய்தது. சேலம் மாவட்டத்திலிருந்து இம்மாவட்டம் பிரிக்கப்பட்டபோது அதற்குரிய இரயில்வே செஸ் நிதியின் பங்கு ரூ.15.59 இலட்சம் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. முன்னாள் மாவட்ட நலக்குழுவின் சொத்தாகிய தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் உள்ள அண்ணா-காந்தி மணி மண்டபக் கட்டடங்கள் இரண்டும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அப்போதைய மதிப்பு ரூ.7 இலட்சம் ஆகும்.

இச்சிறு அளவிலான மூலதனத்தைக் கொண்டு, இக்கழகம் இம்மாவட்டத்தில் பல துறை வளர்ச்சிக்கான பெரும் பங்கு ஆற்றியுள்ளது. படிப்படியாக இம்மாவட்ட வளர்ச்சிக் கழகம் சுமார் ரூ.122 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்களையும் தனக்கென உருவாக்கிக் கொண்டுள்ளது.

மாவட்ட வளர்ச்சிக்கான பல்வேறு வகைப் பணிகளைத் திட்டமிடுதல் அவற்றை அரசுத் துறைகளின் வழியாகவும், நேரடியாகவும் செயல்படுத்துதல்.

நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் வருவாய் தரத்தக்க அங்காடித் தொகுதிகள் முதலியவற்றைக் கட்டுதல்.

மைய மாநில அரசுகளின் சிறப்புத் திட்டங்களான வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், பட்டு வளர்ச்சித் திட்டம், தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், அறிவியல் பயிற்சி அடிப்படையில் வேலைவாய்ப்புத் திட்டம் முதலியவற்றை முகமை அடிப்படையில் இம்மாவட்டத்தில் செயலாற்றுதல்.

- ஆகிய குறிக்கோளுடன் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் பெருந்தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். மேலும் திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் உட்பட 12 உயர் அலுவலர்கள் அடங்கிய நிர்வாக இயக்குநர் குழுக் கூட்டம், இக்கழகத்தின் பணிகளை நெறிப்படுத்துகிறது.

இதுவரை இக்கழகம் - கிருஷ்ணகிரி அங்காடித் தொகுதி, தருமபுரி அங்காடித் தொகுதி, கிருஷ்ணகிரி அண்ணா-காந்தி மணிமண்டபம், தருமபுரி அலுவலகக் கட்டடம், 7 வங்கிக் கட்டடங்கள், ஒகனேக்கல்லில் பல்வகைக் கட்டடங்கள், தளியில் சமுதாய மையம், இராயக்கோட்டை அங்காடித் தொகுதி, கிடங்கு ஆகியவற்றைக் கட்டியுள்ளது. கார், ஜீப், மோட்டார் சைக்கிள்களையும் வாங்கி உள்ளது. இதற்காக, இதுவரையில் ரூ.131.72 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

இக்கழகம் கீழ்க்கண்ட 4 பெரும் பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

1. கழகப் பொதுப்பிரிவு
2. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டப் பிரிவு
3. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
4. அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு.

கழகப் பொதுப் பிரிவில் மாவட்ட வளர்ச்சிக் கழக அலுவலகக் கட்டுமானப் பிரிவும் அடங்கும். இக்கட்டுமானப் பிரிவில், ஒரு நிர்வாகப் பொறியாளர் தலைமையில் இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் பணிபுரிகிறார்கள். பொறியியல் பிரிவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கட்டடப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அரசு ஆரம்பத்தில் கொடுத்த நிதியைப் பயன்படுத்தி இக்கழகம் பல்வேறு அங்காடித் தொகுப்புகளையும், வங்கிக் கட்டடங்களையும் கட்டி வாடகைக்கு விட்டுள்ளது. இவற்றில் இருந்து சுமார் 20 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் வாடகைத் தொகையாகக் கிடைக்கிறது. மேலும் திட்டங்களுக்காக அரசாங்கம் வழங்கும் தொகையை வங்கியில் முதலீடு செய்து அதன்மூலம் கிடைக்கும் வட்டியும் இக்கழகத்திற்கு மற்றொரு நிதி ஆதாரமாகும். பிற துறைகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் பொழுது இக்கழகம் அத்துறையினரிடமிருந்து 'சென்டேஜ் சார்ஜ்' வசூல் செய்கிறது.




இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் போதிய நிதி இல்லாத காரணமாக அடிப்படை வசதிகளான பேருந்து நிலையங்கள், அங்காடித் தொகுப்புகள்

-൦- நல்வாழ்த்துக்கள் -൦-



## மாணிக்கம் ஏஜென்சீஸ்

போச்சம்பள்ளி

(எச்.பி. டீலர்ஸ்)

தருமபுரி மாவட்டம்:

உரிமையாளர்:

எம். லட்சுமிகாந்தன்

போன் கடை: 353

வீடு: 253

குடோன்: 381

நல்வாழ்த்துக்கள்



## ஜி. பாஸ்கர்

மளிகை,

போச்சம்பள்ளி

தருமபுரி மாவட்டம்:

மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில்

தரமான மளிகைப் பொருட்கள் கிடைக்கும்

ஒரே இடம்.

முதலியன கட்ட இயலாமல் இருந்தன. இந்நிலையில் இக்கழகம் மேற்படி ஊராட்சி நிறுவனங்களுக்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் (10 சதவிகிதம்) கடன் கொடுத்து இக்கட்டுமானப் பணிகளையும் செய்து கொடுக்கிறது. வழங்கப்பட்ட கடன் தொகைக்குக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு 40 சதவிகிதம் மானியமாகவும், பேரூராட்சிகளுக்கு 33 ⅓ சதவிகிதம் மானியமாகவும் அளிக்கிறது. இதற்காகக் கிராமப் பஞ்சாயத்துக்களும் மற்றும் பேரூராட்சிகளும் மொத்தத் திட்ட நிதியில் 10 சதவிகிதம் கட்டினாலேயே போதுமானது. இதுவரை 18 கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் பேரூராட்சிகளுக்காக ரூ.40.22 இலட்சம் இக்கழகம் கடனாகக் கொடுத்துள்ளது. அதில் ரூ.13.38 இலட்சம் மானியமாகும். இது தவிர, இக்கழகத்தின் நிதியிலிருந்து "தாரா" நிறுவனத்திற்கும் (Tamil Nadu Rural Reconstruction Agency) விளையாட்டுத் திடல், அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி முதலிய பல்வேறு இனங்களுக்கும் ரூ.21 இலட்சம் நிதியாக (Contribution) வழங்கியுள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகிய 2 திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு 1.4.89 முதல் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கிராமப் பகுதிகளில் உள்ள வேலை வாய்ப்பற்ற ஆண் மற்றும் பெண்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதுடன், கிராமங்களில் வாழும் ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக நிலையான சொத்துக்களை உருவாக்குவதுமாகும்.

இத்திட்டத்தின் செலவினை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

1991-92-ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்ட நிதி இலக்கு ரூ.912.660 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டு, ரூ.900.490 விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில்



**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்ஜெட் கூட்டத் தொடரின் பொழுது ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் 1991-92 மற்றும் 1992-93- ஆம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் ரூபாய் ஒரு கோடி பெறும் அளவுக்குப் பல்வேறு

## பழங்குடி மக்கள்

**நம்முடைய தமிழகத்தில் - மொத்தத்தில் 36 வகைப் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 17 இனத்தவர்கள் மட்டுமே பண்டைப் பழங்குடியினர் என்று அரசு அறிவித்திருக்கிறது.**

**அவர்களில் - லம்பாடிகள், குறும்பர், இருளர், பஸ்தர், சிவாச்சாரத்தார் போன்றோர் தருமபுரி மாவட்டத்திலே காணப்படுகிறார்கள்.**

**இவர்களிலும் கூட - பழங்குடியிர் லம்பாடிகளே என்கிறார்கள் ஆய்வாளர்கள்.**

**லம்பாடி இனமக்களின் ஆடைகள், இப்போதைய இளம் பெண்களின் நவநாகரிக உடைகளுக்கு முன் மாதிரியானவை என்றால் வியப்பாக இருக்கும்! ஆம், அதுதான் உண்மை!**

**தம்முடைய உடைகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ளுவது லம்பாடிகளின் வழக்கம். லம்பாடிப் பெண்கள் குட்டைப் பாவாடை அணிகிறார்கள்; ரவிக்கையோ முன்புறம் மூடுவதாகவும், பின்புறத் திறப்போடும் சிறுசிறு கண்ணாடிகள் வைத்து அவர்களால் வடிவமைக்கப்படும்.**

**இப்போது - ஓரளவுக்கு இவர்கள் நாகரிகமாக உடுத்தவும் வாழவும் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.**

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தைச் செயல்படுத்த திட்டப் பொருளியலர் தலைமை தாங்குகிறார். இப்பிரிவு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டப் பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டுதல், பல்வேறு துறைகள் மூலம் அவற்றைச் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் முதலிய பணிகளைச் செய்து வருகிறது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தில் ஆண்டுக்கு ரூ.183 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மண்வளப் பாதுகாப்பு, மரம் நடுதல், நீர் வளத்தை அதிகரித்தல், வேளாண்மையில் நவீன முறையை மேற்கொள்ளுதல், மா தோட்டங்கள் ஏற்படுத்துதல், பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மார்ச்சு 1992 முடிய ரூ.917.010 செலவிடப்பட்டுள்ளது. (ஆரம்ப இருப்புத் தொகையில் மீதி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது). நிர்ணயிக்கப்பட்ட மனித சக்தி நாட்கள் 35.370 இலட்சத்தில், மார்ச்சு 1992 முடிய 35.912 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1992-93-ஆம் ஆண்டிற்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.986.69 இலட்சம் உத்தேச ஒதுக்கீட்டில் இதுவரை ரூ.552.32 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 30.11.92 முடிய ரூ.510.930 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட 39.470 இலட்சம் மனிதசக்தி நாட்களில், 22.895 இலட்சம் மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

ஆக்கப் பணிகள் மேற்கொள்ளும் என்றும் அறிவித்தார்.

அதன்படி, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டில் - கிராமச் சாலைகள், பேருந்துச் சாலைகள், தெருவிளக்குகள், சிறு பாசன ஏரிகள், கசிவு நீர்க் குட்டைகள், கிராமக் குடிநீர்த் திட்டப் பணிகள் ஆகியவை நிறைவேற்றப்பட்டுள்ளன. தொலைக்காட்சிப் பெட்டிகள் 90 வழங்கப்பட்டிருக்கின்றன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி.) மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தி வரும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தினை

தந்தி
(DHARCOSPIN)
ஊத்தங்கரை

| | எஸ்.டி.டி.எண். | தொலைபேசி |
|---|---|---|
| ஆட்சியர் (தனி) | : 04341 | 2027 (ஊ.கரை) |
| அலுவலகம் | : ,, | 2061 2083 (ஊ.கரை) |
| ஆட்சியர் (இல்லம்) | : 04179 | 20016 திருப்பத்தூர் |

# தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை லிமிடெட்,

எண்.எஸ்.ஏ.108
அஞ்சல் பை எண்.2
ஊத்தங்கரை - 635 207.

**எங்களது ஆலையில் உள்ள நவீன இயந்திரங்களைக் கொண்டு தொழிலாளர்களின் முழு ஒத்துழைப்புடன் கூட்டுறவு முறையில் கீழ்க்கண்ட தரமான நூல்கள் தயாரிக்கப் படுகின்றன.**

## தயாராகும் நூல்கள்

| | | |
|---|---|---|
| ஹேங்க் நூல் | : | 20, 26, 32, 32 சிஆர், 40, 60, 60 சி, 80, 80 சிஆர், 2/17, 2/30, 2/40, 2/60. |
| கோன் நூல் | : | 20, 30, 34, 40, 60, 60 ஹைச்.டி., 80. |

எங்களது ஆலையில் உற்பத்தியாகும் நூல்களை கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்கிறோம். தங்களது தேவைக்கு எங்களை அணுகுங்கள்.



**எல். ஸ்ரீராமலிங்கம்,** பி.காம்.,
டி.பி.ஏ., டிப். இன் லா.,
**துணை இயக்குநர் / ஆட்சியர்.**



○ என்னுடைய எழுத்துக்களை மறந்தால் பரவாயில்லை; என்னுடைய செயல்களை மறவாதீர்; எழுத்துக்களைவிட, என் செயல்- வாழ்க்கை இரண்டையும் பார்த்து அவ்வாறே நடக்கப் பழகு.

உயர்த்தி அவர்களின் வருவாயைப் பெருக்க உதவி செய்யப்படுகிறது. இத்திட்டம் 2.10.1980 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம், மிகச் சிறு விவசாயிகளுக்கு 33.⅓ சத விகிதமாகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு 50 சதவிகிதம் அல்லது உயர்ந்த பட்ச மானியமாக ரூ.5,000 என்ற வகையில் அரசு மானியம் மாவட்ட வளர்ச்சிக் கழகத்தால் அனுமதிக்கப்பட்டு, வங்கிகளில் அதற் கேற்றவாறு கடன் அனுமதிக்கப்பட்டு சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக இருந் தால் ஆதிதிராவிடர் அல்லாத ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ரூ.4,000 வரை மானியம் வழங்கப்படுகிறது. வறட்சிக்கு இலக்காகாத பகுதிகளில் அதிகபட்ச மானியம் ரூ.3,000 வரை வழங்கப்படுகிறது.

1992-93-ஆம் ஆண்டிற்குத் தருமபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 5,247 குடும்பங்களுக்கு உதவி செய்வதற்கு ரூ.185.482 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 40 சதவிகிதம் பெண்களுக்கும், 50 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினருக்கும் 3 சதவிகிதம் உடல் ஊனமுற்றோர்களுக்கும் உதவி புரிய அரசினரால் அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத் தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர், பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோருக்குப் பெருமளவில் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

கைவினைஞர் உதவி சிறப்புத் திட்டத் தின்கீழ் 1992-93-ஆம் ஆண்டில் 2000 கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.2,000-க்கு மிகைப்படாமல் நவீன கருவிகள் வழங்க மத்திய அரசு ரூ.36 இலட்சம் வழங்கியுள்ளது. இத் திட்டம் இந்த நிதியாண்டிற்குள் செயல் படுத்தப்படும்.

**ஊரக இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி (டிரைசம்)**

ஊரக இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் (டிரைசம்) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டத்தில் ஒரு பகுதியாகும். இத் திட்டத்தின்கீழ் 1992-93-ஆம் ஆண்டில் பல்வேறு தொழில் பிரிவுகளில் 915 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதில் 115 நபர் களுக்கு ஊறுகாய், பழம் பக்குவம் செய்தல், பொம்மை செய்தல் மற்றும் பனை ஓலையில் இருந்து பொருட்கள் தயாரித்தல் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சிக்குப்பின் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

செயற்கை வைரம் பட்டை தீட்டுதல், கார் ஓட்டுதல், தையல், மின்மோட்டார் காயில் கட்டுதல், கதர்த் துணி நூல் நூற்றல், மின்சாதனப் பொருட்கள் பழுதுபார்த்தல், ஸ்கூட்டர், மொபெட் வண்டிகள் பழுதுபார்த்தல், விவசாய டீசல் என்ஜின் பழுதுபார்த்தல், கயிறு திரித்தல் ஆகிய தொழில்களில் 599 நபர்கள் பயிற்சி பெற ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் இத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக அரசு ரூ.20.75 இலட்சம் அனுமதித்துள்ளது.

**கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா)**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், துணைத் திட்டமாகக் கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசினால் 1982-83-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. முதலில் நமது நாட்டில் 50 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 1983-84 முதல் இந்தத் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 10 முதல் 15 கிராமப்புறப் பெண்களைக் கொண்டு குழு அமைத்து அவர்களுக்கு ஏற்ற வருவாய் ஈட்டக்கூடிய தொழில் கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பொருளாதார ரீதியாக உயர்த்து வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்க மாகும்.

தருமபுரி மாவட்டத்தில் 1983-84-ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தருமபுரி மற்றும் காவேரிப்பட்டினம் ஆகிய இரண்டு வட்டாரங்களில் தலா 10 குழுக்கள் வீதம் அமைக்கப்பட்டு இத் திட்டம், செயல்படத் தொடங்கியது. பின்னர் இத்திட்டம் மற்ற 16 வட்டாரங் களுக்கும் விரிவாக்கப்பட்டு 1991-92 முடிய 590 மகளிர் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தில் இதுவரை 10,057 பெண்கள் பயனடைந்துள்ளனர். அவர்களில் 4,125 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பையும், 572 பேர் மலைச் சாதி இனத்தையும் சார்ந்தவர்கள்.

உதாரணமாக இக்குழுக்கள் பால் உற்பத்தி, ஆடு வளர்ப்பு, பொம்மை தயாரித்தல், சாம்பார் மற்றும் மிளகாய்ப் பொடி தயாரித்தல், சாம்பார் மற்றும் மிளகாய்ப் பொடி தயாரித்தல், கிளினிங் பவுடர் செய்தல், ஆயத்த ஆடை தயாரித்தல், தென்னை நார், கயிறு உற்பத்தி, தென்னங்கீற்று பின்னுதல், புளி பதப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டிற்கு 30 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. அக்குழுக்களைப் பதிவு செய்யவும், சுழல்நிதி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தேசிய கரிமவாயுத் திட்டம்**

1992-93-ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்கு அளிக்கப்பட்ட இலக்கும், இதுவரை அடைந்த சாதனையும் வருமாறு:-

| | |
|---|---|
| இலக்கு | .. 360 |
| சாதனை | .. 138 |

இத்திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட இலக்கைக் கடந்த ஆண்டைப் போல் முழுமையாக எய்திடத் தீவிர நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



பயனாளிகளிடமிருந்து இதுவரை 818 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இம்மாவட்டத்திலுள்ள தேசிய மய மாக்கப்பட்ட பல்வேறு வங்கிகளுக்கும் கடன் அனுமதி பெறும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளன.

**தேசிய புகையில்லா அடுப்புகள் (சூளா)**

புகையில்லா அடுப்புகள் (சூளா) அமைத்திடும் திட்டத்தின்கீழ் நடப் பாண்டிற்கு 1992-93) இம்மாவட்டக் குறியீடு 4,000 ஒதுக்கீடு செய்து உத்தரவு பெறப்பட்டுள்ளது. இந்த அடுப்புகளில் பெரும்பாலானவை ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் களுக்குக் கட்டப்பட்ட வீடுகளில் அமைக் கப்பட்டு வருகின்றன. இதுவரை 4,301 அடுப்புகள் அமைக்கப்பட்டு இலக்கு நிறைவு செய்யப்பட்டது.

**ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்**

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் மூலம் இம்மாவட்டத்தில் பர்கூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் அரூர் ஊராட்சி ஒன்றியம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டத்தின்கீழ் 1992-93-ஆம் ஆண்டிற்கு அளிக்கப்பட்ட இலக்கும் பூர்த்தியாகிவிட்டது; இதுவரை அடைந்த சாதனைகளும் அளவிடற்கரியன.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம், பன்னாட்டுத் தொழில் நிறுவத்தின் மூலமாகத் தளி ஊராட்சியில் ஐ.எல்.ஓ/ டானிடா சிறப்புப் பொது வேலைத் திட்டத்தின்கீழ் ரூ.232 இலட்சத்திற்கான மதிப்புள்ள பணிகளை மேற்கொண்டு அவற்றில் பெரும்பாலான பணிகள் முடிவுற்ற நிலையில் உள்ளன. இத்திட்டம் இக்கழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப் படுவதைப் பன்னாட்டுத் தொழிலாளர்கள் நிறுவன அலுவலர்கள் பலமுறை பாராட்டி உள்ளார்கள். இத்திட்டத்தை மேலும் பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தத் திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு உள்ளன.

இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதி களிலும் உள்ள விவசாயிகளுக்கு மாஞ் செடிகளும், இதர பழச் செடிகளும் நல்ல தரமான முறையில் கிடைக்கவேண்டும் என்ற நோக்கோடு, இம்மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை வட்டம் நாகமங்கலம் மற்றும் அரூர் வட்டம் போளையம்பள்ளி ஆகிய இடங்களில் இக்கழகத்தால் தோட்டக்கலை நாற்றங்கால்கள் அமைக் கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஒசூர் வட்டம் மருதாண்டப்பள்ளி என்னும் இடத்தில் மற்றொரு தோட்டக்கலை நாற்றங்கால் அமைக்கும் பணி நடை பெற்று வருகிறது.

அதேபோல, பட்டு வளர்ச்சிக்கெனத் தேன்கனிக்கோட்டை வட்டம் நாக மங்கலம் என்னும் இடத்தில் பட்டுப் பண்ணை அமைக்கப்பட்டு, பராமரிக் கப்பட்டு வருகிறது. ஓசூர் வட்டம் மாதர்சனபள்ளி என்னும் கிராமத்தில் சுமார் 25 ஏக்கர் பரப்பில் மற்றொரு பட்டுப்பண்ணை அமைக்கும் பணியும் முன்னேற்றத்தில் உள்ளது.

மத்திய அரசாங்கத்தின் விண்வெளித் துறை மூலம் ஐதராபாத்தில் உள்ள தேசியத் தொலையுணர்வு முகமை மற்றும் சென்னை அண்ணா பல்கலைக் கழகத் தின் தொலையுணர்வு மையம் ஆகிய வற்றின் ஒத்துழைப்போடு சாமல்பட்டி நீர்ப் பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ரூ.626 இலட்சம் செலவில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

**ப. வேங்கடசாமி**

**திட்ட அலுவலர் மற்றும்**
**மேலாண்மை இயக்குநர்**
**தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்**
**தருமபுரி**

**TNPSC** **விளம்பர எண்: 3/93**

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

### அகில இந்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலர்களுக் கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள் - மார்ச், 1993.

அகில இந்திய பணிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப் பிரிவு அலுவலர்களுக்கான (Certain Classes of Officers) அரை யாண்டு மற்றும் மொழித் தேர்வு, இவ்வாணையத்தினால் 11.3.93 முதல் நடத்தப்படும். இத்தேர்வுக் கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 9.2.1993 ஆகும். விண்ணப்ப படிவத்தையும் சம்பந்தப்பட்ட விவரங்களையும் தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002, அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்புகள்:** 1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத் தேர்வுகள் உரியதாகும்.

2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ்மொழி உயர் நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்தியப் பணிகளில் பணிபுரியும் அலுவலருக்கான ரூ.1000 ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான 'தமிழ்ப் புலமைத் தேர்வும்' ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத்தாண்டு பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலர் வாயிலாக, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், சென்னை-600 009 அவர்களுக்கு 9.2.93-க்குள் இத்தேர்வாணையத்திற்கு வந்து சேரும்படி விண்ணப் பித்துக் கொள்ளவேண்டும்.

DIPR/61/MS/93

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23

